Islamic Series No. 1.

# PRECIOUS GEMS

FROM THE

# SAYINGS OF LORD MUHAMMAD

BY

M. A. MALIK.

PUBLISHED BY

THE NAVEENA KATHA BOOK DEPOT
RANGOON & MADRAS.

1916.

irst Edition.] *All Rights Reserved.* [Price annas 10.

# ஐங்காலப் பிரார்த்தனை.

நல்லதமிழில் இதுகாறும் இப்படி வெளிவந்திராத

## இஸ்லாமிய ஜடாநூல்.

1. இது இஸ்லாமார்க்க நியமனங்களின்படி பிரதிதினமும்
குறிக்கப்பட் ... துதன்
அந்தரங்க ... தவிய
கிர்த்தியாக ... னும்
சத்தையும் ... த்தமி
ழில் சவிஸ்

2. இ ... ன்ற
பரமவிதி, ... வலிய
பற்பல பி ... யர்த்
தமான கி ... நெறி
ஒழுகுவதர் ... க்கும்
விசேஷப்ப

3. இ ... உச்
சரிக்கவேண் ... ரின்
முதல் அதி ... பின்
வசனிக்கவே ... உப
அத்தியாயம் ... ளை
யாதி தாத்ப ... தாந்
தம்.

4. இ ... லா
என்ற குறி ... னக்
குளிப்பு அ ... யும்
அவைகளை ... அரி
தாகும்போது ... ரப்
பரிகாரம் ... கத்
திடைப்பு மு ... க்க
வேண்டிய ... டீ,
ஞான அடக்க ... ும்
துலாம்பரமா

5. இது ... ன்
கலத்தைக்கொ ... ா
கப்படுத்திவரு ... ா
கரித்தும் அதற்குப்பிரதியாக விசுவாசிகளில் ஒருவர் உரத்த சத்தத்
துடன் பகவானைப்போற்றி கடவுளின் ஏகத்துவத்தையும், நபீ அவர்
கள் சத்தியரசூல் என்பதையும், பற்றி சாட்சிகூறி கிருபையாய்த்
தொழுகைக்கழைப்போர் என்றர்த்தங்கொள்ளும் முஅஸ்ஸின் என்ற
பிரதம உத்தியோக நியமகத்தின் ஆதீனத்தைக்குறித்தும், அவர் அனு

பிஸ்மில்லாஹ்.

# மஹாந் முஹம்மத் நபீ அவர்களின்

# உபதேச ரத்நம்

27.784(29)
25.298

அறபீ, பார்ஸீ, உர்தூ முதலிய பல சிறந்த
இஸ்லாமிய மத நூல்களி லிருந்து

ஏர்வாடி
மௌலவீ முஹம்மத் ஷாஹ் ஆதம் அவர்களின்
சிஷ்யரான

**M. A. மலிக் சாஹிப் அவர்களால்**
திரட்டிச்சேர்க்கப்பட்டு,

PRESENTED BY
V. RM. AL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

நவீனகதா புத்தகசாலையாரால்
பதிப்பிக்கப்பட்டது.

1916

முதற்பதிப்பு.] காபிரைட் ரிஜிஸ்டர்ட். [விலை அணா 10.

Printed at the Ganesa Press,
Vepery, Madras.

## முஸ்லிம்களுக்கு

# முக்கிய குறிப்பு.

இந்தப்புத்தகத்தை வாசிக்கும்போது இதனடியில் குறிப்பிட்டிருக்கும் நிபந்தனைகளைக் கடைப்பிடித்து அத்துடன் எழுதப்பட்டிருக்கும் அறபி மொழிகளையும் நிபந்தனைக்குட்பட்ட ஒவ்வொரு நாமத்துக்கும் கடைசியில் சேர்த்துவாசித்து வரவேண்டும்.

## கிரமம்.

1. அல்லா என்ற வார்த்தையை உச்சரிக்கும்போது جل جلاله என்றும் குறஆன் என்ற வார்த்தையைப் படிக்கும்போது مجيد என்றும் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

2. முஹம்மத் என்ற நாமம் வரும்போது صلى الله عليه وسلم என்றும் ஏனைய தீர்க்கதரிசிகளின் நாமங்களாவது தேவதூதர்களின் நாமங்களாவது மொத்தத்தில் நபீ, ரசூல் என்ற வார்த்தைகளாவது வரும்போது عليه السلام என்றும் இணைத்துக்கொள்ளவேண்டும்.

3. இஸ்லாமதத்தை அனுசரித்த பிரபல பக்திமான்கள் மகாமகோ பரிசுத்தவான்கள், ஞானவான்கள் முதலிய பெரியோர்களின் நாமங்கள் குறுக்கிடும்போது رضي الله عنه என்றும் அப்படியே அப்பேற்கொற்ற பெண்மணிகளின் நாமங்கள் வரும்போது رضي الله عنها என்றும் இசைத்துக்கொள்ளவேண்டும்.

# முத்தகீ.

(பயபக்தி)

---

**1.** அதரிசனமாயிருக்கிற அற்புதப்பொருளில் நம்பிக்கை வைத்தல்.

**2.** அல்லாவை வணங்கல்.

**3.** கடவுளுடைய சிருஷ்டிகளிடத்தில் காருண்யங் காட்டல்.

**4.** அறபியாவின் பரிசுத்த நபீ அவர்களுக்குக் கிடைத்த அருளை விசுவாசித்தல்.

**5.** நபீ அவர்களுக்கு முன்னுள்ள அருட்களில் பக்தி செலுத்தல்.

**6.** நபீ அவர்களின் பக்தர்களது ஞானோபதேசத்தைக் கடைப்பிடித்தல்.

# பொருளடக்கம்.


பக்கம்.

1. பாயிரம் ... ... ... ... i
2. அருள்வேதமும் அதன் தூதரும் அவசியமே ... i
3. மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் ஜீவியசரித்திரச் சுருக்கம் ... ... ... ... 1
4. திருமக்கா மஹாஜனங்களுக்கு மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் முதற்பிரசங்கம் ... ... 23
5. திருமதீனா மஹாஜனங்களுக்கு மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் முதற்பிரசங்கம் ... ... 25
6. திருமக்காநகரில் மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் சாமப் பிரசங்கம் ... ... ... 27
7. மஹாந் முஹம்மத் நபீ அவர்களைப்பற்றி ரூம் தேசத்து அதிபதியின் விசாரணை ... ... ... 30
ஹிர்கில் அரசனுக்கும் அபூசுப்யானுக்கும் நடந்துள்ள சம்வாதம் ... ... ... 33
ஆராய்ச்சி ... ... ... 34
8. மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் உபதேசப்பற்று ... 37
9. பிரதான கலீபா ஸ்ரீமாந் அபூபக்கரவர்களின் பிரசங்கம்... 40
10. பிரதான கலீபா ஸ்ரீமாந் அபூபக்கரவர்களுக்குப் பிறகு அரசாண்ட மூன்று ஸ்தாநாதிபதிகள் ... ... 43
11. இரண்டாவது கலீபா ஸ்ரீமாந் உமற் அவர்களின் பிரசங்கமும் சோதனையும் ... ... ... 45
12. மஹாந் முஹம்மத் நபீ அவர்கள் காலத்தில் இஸ்லாமியம் பரவிய இடங்கள் ... ... ... 59
13. மஹாந் முஹம்மத் நபீ அவர்களுக்குப்பின் வந்த பிரதான ஸ்தாநாதிபதிகளின் காலத்தில் இஸ்லாமியம் பரவிய இடங்கள். ... ... ... 60
14. தற்காலம் இஸ்லாமியம் பரவியுள்ள பிரதான பிரதேசங்கள் ... ... ... 61
15. முகவுரை. உம்மீநபீ ... ... ... 63

## மஹூரந் முஹம்மத் நபீ அவர்களின் உபதேச ரத்நம்.


16. நபீ அவர்களின் பிரதானகற்பனை ... ... 71
17. 1. இஸ்லாம் ... ... ... 71
2. இஸ்லாமிய தத்வார்த்தம் ... ... 71
3. அல்லா கடவுளே கதி ... ... ... 71
4. சாயுச்சியம் அல்லது தேவஐக்கியம் ... ... 72
5. இருதயம் ... ... ... 73
6. எண்ணங்கள் அல்லது நோக்கங்கள் ... ... 73
7. பெற்றோர் பெரியோர் வணக்கம் ... ... 73
8. அநுதாபம் ... ... ... 74
9. தெளிந்தபக்தி ... ... ... 76
10. கல்வி ... ... ... ... 77
11. உத்தியோகம் பிரபுத்துவமுடையதுசுவப்பிரயாசமே ஜீவனத்திற் கழகு ... ... ... 77
12. தானதர்மம் ... ... ... 79
13. வேஷதாரி ... ... ... 79
14. வறுமையிற் செம்மை ... ... ... 80
15. ஒழுக்கம் கற்புடைமை மரியாதை ... ... 80
16. முஸ்லிம் சகோதரப்பான்மை ... ... 80
17. ஸ்திரீ ஜனங்கள் ... ... ... 81
18. குணநடவடிக்கைகள் ... ... ... 82
19. அதிகாரதசைக்குவந்த அரசரும் மற்றவர்களும் ... 83
20. அல்லாவும் அவரது ரசூலும் ... ... 84
21. முஸ்லிம்கள் யாவர் ... ... .. 84
22. மானிடர்களில் அதமரும் உத்தமரும் ... 85
23. மரணம் ... ... ... ... 85
24. இஸ்லாமென்று பஹீரங்க அறிமுகஞ்செய்யாத பேர் வழிகள் சார்பாய்க்கொள்ளும் சிந்தனை ... 86
25. மோக்ஷம் அல்லது ஆநந்த ஸ்தலம் ... ... 87
26. துறவறத்தைப்பற்றி ... ... ... 87
27. பரிசுத்த வாழ்க்கை ... ... ... 88
28. லோகத்தின் அந்தியகாலம் ... ... 89
29. மகத்துவம் சிறந்த குருநாதரின் தாழ்மை ... 89
30. கடோரமான குற்றங்கள் ... ... ... 89

31. அறநெறியே சமயச்சித்தம் ... ... 89
32. மதவிசுவாசம் ... ... ... 90
33. தெய்வஞானம் இருத்தற்குரிய அடையாளம் ... 91
34. ஜகத்கர்த்தாவின் ஏவலாளர் ... 91
35. யாதினும் மட்டடக்கம்... ... ... 91
36. அறிவுடைமை ... ... ... 92
37. விருந்து ... ... ... 92
38. மனிதன் பிறப்பால் பாபமற்றவன் ... ... 93
39. ஜபம் ... ... ... ... 93
40. முறைதவறான கொள்கையும் ஜீவஹிம்சையும் ... 94
41. தெய்வீகம்வாய்ந்த புருஷர்கள் ... ... 94
42. வீண்பக்தி ... ... ... 94
43. சாஸ்திரப்பழக்கமும் உபந்நியாசத்திறமும் ... 95
44. நம்கிரியைகளெல்லாம் கேள்விக்கு உத்தரவாதமே... 95
45. பாரியை ... ... ... 95
46. குழந்தைகள் ... ... ... 96
47. புறங்கூறலும் அபவாதமும் ... ... 96
48. கொடியபாபங்கள் ... ... ... 97
49. உலகம் ... ... ... 98
50. மனோவசியம் ... ... ... 98
51. பச்சாதாபம் ... ... ... 98
52. சுற்றமும் உறவும் ... ... ... 99
53. நியாயமும் சாமானிய புத்தியும் ... ... 100
54. தற்பெருமையுள்ள பிரஜைகள் ... ... 101
55. பொறுமையும் பணிவும் ... ... 101
56. அநாதைகள் ... ... ... 102
57. தண்டனை ... ... ... 102
58. சுகாதாரம் ... ... ... 102
59. பகவானுடன் சரிசமான பூஜ்யதைப்பெறும் விஷய
மாய் முஹம்மத் நபீ அவர்களின் அசம்மதம் ... 103
60. மானம் ... ... ... ... 104
61. வியாபாரக்கிரமம் ... ... ... 104
62. வேலையாட்கள் ... ... ... 104
63. எச்சரிக்கை அல்லது நிதானிப்பு ... ... 104
64. கிடைத்த மட்டில் திர்ப்தி ... ... 105

65. மஆஸ் நண்பருக்குபோதனை ... ... 105
66. இரக்கமும் உடன் உத்தரிப்பும் ... ... 106
67. பிணியாளிகளைப்போய்த் தரிசித்தல் ... 107
68. சத்தியத்தை மறைக்காதே ... ... 107
69. தீர்க்கதரிசியின் சிலங்கள் ... ... ... 108
70. ஜனோபகாரியொருவன் அல்லாவினிடம் வகிக்கும் மனஸ்தாபத்தைக்குறித்து ... ... 109
71. நிஷ்கபடமும் மெய்ம்மையும் ... ... 109
72. அடிமைத்தன்மையை எவ்வாறு பக்குவமாய் விலக்கிக் கொள்வது ... ... ... ... 109
73. சத்சவகாசம் ... ... ... 110
74. முஹம்மத் நபீ அவர்களின் விநயமும் தயாளமும் 110
75. வாசாஞானிகள் ... ... ... 111
76. சங்கடத்தில் ஏங்காமை ... ... 111
77. முஹம்மத் நபீ அவர்களும் அவரது பிரார்த்தனையும் 111
78. இல்லறம் ... ... ... 112
79. மன்னிப்பின் பலன் ... ... ... 112
80. புத்திரிகளும் பெண்களும் ... ... 113
81. தாளாண்மை ... ... ... 114
82. வீரதீரபராக்கிரமம் ... ... ... 114
83. முன் யோசனை ... ... ... 114
84, விரதம் அல்லது நோம்பு ... ... ... 114
85. முஸ்லிம்களிடத்து ஆதரவு வைக்கும் விதம் ... 117
18. முடிவுரை ... ... ... 117

பிஸ்மில்லாஹிற்ரஹ்மானிற்ரஹீம்.

(காருண்யம்-தயை நிறை கடவுள் நாமத்திலே.)

# பாயிரம்.

இந்நூலை வாசிப்பவர்கள், இதில்கண்ட போதனைகளை அருளிச்செய்த உபதேச கர்த்தாவின் சரித்திர வரலாற்றை அறிந்துக்கொள்ள விரும்புவார்களாகையால், அம்மஹாந் அற்புதமாய்ப் பிறந்து வளர்ந்து, சர்வலோக தயாபரர்: முழுவுலக ரட்சகர்: கடைசியாயும் தீர்மானமாயும் வந்த தீர்க்க தரிசி என கடவுள் நியமநஞ்செய்திருந்தபடியே அவர் தமது காரியத்தில் சித்திபெற்று மிகப்பிரபலமான அவரது சரித்திரதிவ்யத்தை நாம் தியானித்துப் புகலப்புகுமுன், அவரது அவதாரமும், அருள்வேதமாகிய திருக்குறு ஆனும், மக்களுக்கு இன்றியமையாவன வென்பதை இயம்புவாம்.

## அருள்வேதமும் அதன்தூதரும் அவசியமே.

வெளிச்சத்திலே குடியிருக்கிற நாம் இவ்வுலகத்தையும் மற்றும் சராசரமனைத்தையும் நமது கண்களினால் பார்த்தும், செவியாரக் கேட்டும், மனதினால் ஆராய்ந்தறிந்தும் வுய்த்தூஹிக்கும்போது நமது மனோவாக்குக்கெட்டாத ஒப்பற்றவல்லமையுள்ள ஒரு விசேஷப்பொருள் இருந்தே சர்வத்தையும் சிருஷ்டித்து ஆண்டு நடத்துகிறதென்றும், அதுவே சர்வத்துக்குங் காரணப்பொருளாயுள்ளதென்றும் நம்பும்படி இயல் சம்மதித்து நிற்கின்றது. இது சர்வ சமயத்தின் சம்பிரதாயமும் இஸ்லாமார்க்கத்தின் பிரதானப் பிரமாணமுமாவது. இயலின் இப்பிரமாணத்தை, மனசாக்ஷிக்கு விரோதமாய் மமதையுற்று குபுக்தங்கூறி நிராகரித்துத்தள்ளும் நாஸ்திகக்கக்ஷியாரே

யன்றி ஆஸ்திகஞானம் படைத்தவரெவரேனும், இதனை ஆட்சேபிப்பாரன்று. அப்படியே எல்லாரிடத்திலும் இவ்விதியைத் தூண்டுகிற ஓர் அகத்துப்பிரமாணம் இருக்கிறபடியால், இந்தப் பிரமாணத்தை அகத்திலமைத்தவர் ஒருவர் உளராகவேண்டும் என்றும், அவரே சர்வஜீவராசிகளையும் சிருஷ்டித்துக்காப்பாற்றி ஆட்கொள்ளுகிற ஆதிப்பெருங்கர்த்தாவாகிய கடவுளென்றும், அவர் இஸ்லாமார்க்கத்தில் அல்லாவென்னும் சுயம்பான திருநாமத்தால் விளங்குகிறுரென்றும், அவர் ஒருவரே ஒருவரென்றும் நம்பக்கூடிய இந்நம்பிக்கையே மதாசார தர்மத்திற்கு ஆதாரமென்பதில் ஐயமிலது. இந்த பரமபாவனமான தர்மத்தைக் கையாளும் நாம் அனைவரும், சர்வ சக்தியுள்ள அருட்பெருங் கடவுளானவர் தமது பரிபூரண ஞானத்தினல் சிருஷ்டித்துள்ள சமஸ்த சிருஷ்டிகளையும் தெளிந்த மனதுடன் பகுத்தறிந்து பார்க்கப்பார்க்க, ஏனைய சிருஷ்டிகளைப் போலிராமல் மானவன் தன் படைப்பில் ஒரு விசித்ர ஞானம் உண்டென்பதையும், மற்றைய சிருஷ்டிக ளெல்லாவற்றையும்விட சிறந்தவனென்பதையும், அவை யடங்கலும் மனிதனுக்காகவே சிருஷ்டிக்கப்பட்டவை யென்பதையும் அவைகள் மனிதனுக்கு துணைக்காரணமாயும் கீழ்ப்படிந்தும் நடக்க உற்பத்திபண்ணப்பட்டவை யென்பதையும் மனுஷனே அவைகளை அடக்கியாளத்தக்க மேலான யஜமானனுய் இலகா நிற்கிறுனென்பதையும், நம்மில் யார்தான் மறுத்துநிற்பர்! அங்கை நெல்லியென அகிலருக்கும் நிதரிசனமாய் புலப்படுகிற நியாயமேயாகும்.

இத்தகைய கண்ணியத்திற்கு உரித்தான மனிதன் எதற்காக சிருஷ்டிக்கப்பட்டான் என்ற பிரஸ்னையொன்றும் ஆராய்தற்பாலதே; இஸ்லாமார்க்க ஐதிகத்தின்படி மனுஷனும், அவனுக்கு முன்னர் இப் பூவுலகில் பிரத்தியட்சமாய் வசித்திருந்த ஜின் இனங்களும் கடவுளைத்தொழுது அவருடைய ஞானத்தை யடைந்துக் கொள்வதற்கே யென்று சொல்லத் துணிவோம்.

மனிதன் மேலான பேராநந்தத் தோப்பிலிருந்து உல்லாசமாய்க் கடவுளை ஸ்தோத்திரம் பண்ணிக் கொண்டிருக்க, அவனைச் சோதிக்கும் பொருட்டாக நன்மையும், தீமையும் பயிரிடப்படுகிற பொய்யான இத்தாழ்ந்த உலகிற்கு அனுப்பப் பட்டது. மனிதன் பரிசுத்தனாயிருந்த சமயத்தே இப்பூமிக்கு போக்கப்பட்டா னென்றாலும், இந்தப் புவனமானது பாபத்துடனும் இயைந்திருப்பதாலும், அவனை பாவமுள்ள இம்மண்ணுலகத்திற்கு அனுப்பப்பட்டதாலும், அதிலேயும் அவன் நிர்மலமா யிருந்தே கடைத்தேறற்பொருட்டு, அவனுக்கு நன்மை தீமை இன்னின்னவையென்று கூர்ந்துணரத்தகுமாறு, அளவிட்ட நுண்ணறிவும் அற்புதமான ஓர் சக்தியும், ஏகதேசமான ஞானமும் கடவுள் கிருபையால் உதவியருளினார்.

ஆனாலும், சொற்ப அறிவும், கிஞ்சித் ஞானமுமுள்ள மனிதனுக்கு நன்மை இன்னது தீமை இன்னது என்று பூரணமாய் அறிந்துக்கொள்ளும் சக்தியை இயல் விசிதமாய் அவனுக்குக் குறிப்பித்தபோதிலும் அதற்கிசைந்து அங்ஙனமே நன்மையை கையாடவுந் தீமையை கைவிடவுங்கூடாத நிர்ப்பலனாகி இயலுக்கு மீறி நடத்தற்கு ஏதுவாகிறது.

ஆகையால் இயலுக்கு உபபலமாய் அருள் ஒன்றுவேண்டுவது அவசியமெனப்படும், அது அவனை வரம்பிகந்து நடக்கவிடாது ஊர்ஜிதப்படுத்தி ஞானவழியைக் காட்டி அவனது சுயாதீனத்தில் கொண்டுசேர்ப்பிக்கும் சத்திய கருவியாயிருக்கின்றது.

கடவுள் மானவனை பாவம் நிறைந்த மகாபயங்கரமான இவ்வுலகத்தில் சோதனைக்கு அனுப்பினாரென்றாலும், ஏனைய சிருஷ்டிகளைப் போலன்றி அவனை சர்வ லக்ஷணத்திலும் குணமாக்கி, மனம், புத்தி, சித்தம் முதலிய அந்தக்கரண வாராய்ச்சிக்குரிய இயக்கம் பொருத்தி, திவ்ய ஞானமய சங்கற்பத்தால் அவனைச் சுத்திகரித்தே செல்லவிட்டார். இவ்வகை ஞானத்திற்குப் பாத்திரமான மனிதன் பிரபஞ்சத்தில் உதிக்கும்போது

பாவியல்ல என்றாலும் பாபமுள்ள இந்த லோகத்தில், அவனது பூர்வ நிலைமையை மறக்கச்செய்து அவனது இயற்கை வழிகெடுக்க என்றுஞ் சித்தங்கொண்ட அவனது சத்துருவான ஷைத்தானும் இவனது பரிவாரங்களும், மனிதனோடு கூடவே உள்ளபடியால், ஷைத்தானையும் இவனது சேனைகளையும்வென்று தன் ஆதீனஸ்தானத்தில் போய்ச்சேரமாட்டாமல் மயங்கித்தயங்கி முடிவில் அதோகதிக்கு ஆளாகிவிடுகிறான்.

இதை நீக்கி இரட்சிக்கும் நிமித்தமே கிருபைக்கடலாகிய கடவுளானவர் அவ்வக்காலங்களில் அந்தந்ததேசத்திற்குத்தக்க விதமாய் தமது நோக்கத்தின்படி பற்பல பரிசுத்தவான்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களை யாதொரு பெரும்பாவமும் சிறுபாவமும், குற்றங்குறைகளும் அணுகாதிருப்பான் சட்சுதீக்ஷை புரிந்து தம் தூய்மையான திருவாக்கை அவர்கள் நாவிற் புகட்டி, அவர்களுக்கு அற்புத ஞானானந்தப் பிரபுத்வத்தையும் தம்மோடு சம்பாஷிக்கும் சிறந்த பாக்கியத்தையும் நன்கொடையளித்து, பிரஜைகள் தர்மத்தைக் கைப்பற்றி பக்தியில் கட்டுண்டு தம் வழியை யடைந்துக்கொள்ளவேண்டுமெனவே, அவர்களுக்கு வழி விளக்கும் முன் மாதிரியாகவும் பரம ஞானோபதேசியாகவும், தீர்க்க தரிசியாகவும் தேவ தூதராகவும் தீர்மானித்து அனுப்பிவைத்து அப்போதைக் கப்போது அவர்கள் மூலமாய் இப்பூமண்டலத்திற்கு அருளும் கற்பனைகளே அருள்வேதமென்பர்.

அருள்வேதமானது மனிதனை தீமையிலே அடியெடுத்து வைக்கவொண்ணாவாறு புதியஉணர்ச்சியைத்தந்து நல்வழியையே பின்பற்றிச்செல்லும்வண்ணம் பற்பல உவமான உவமேயப் பிரமாணங்களினாலும்,அக, புற, ஆதாரங்களினாலும்,அரிய அத்தாட்சிகளினாலும் மனத்தை தன் வழிபோகவிடாமல், இயலே அநுசரித்து நிஸ்சலனமாய் நிற்கும் முறைமையில் கோரா கோரகரமான சிக்ஷாபரிகாரங்களைக்கொண்டு சீர்செய்து நன்மையிலேயே நாணயமாய் ஒழுகியிருப்ப எச்சரிக்கை

பண்ணி, இருதயத்திலுள்ள அஞ்ஞானவிருளை நீக்கி, ஞான விளக்காய் எஞ்ஞான்றும் உள்ளத்தில் பிரகாசித்துக்கொண்டு நிலைத்து நிற்பதே, அதன்படனை, சிரவ்ணை, மனனுதிப் பிரயோஜனமாம்.

இயலைத்தன்னிலையில் ஸ்திரப்படுத்தி குணம் புரியும் பரோபகாரத்திற்கே அவதரித்துள்ள ஸ்தாபகர்களையும் திரிகால ஞானிகளையும், அவர்களுக்கு கடவுளால் கட்டளையிடப் படுகிற அருளாமிர்த வாக்குகளையும், அதிசய மகிமையையும் குறித்து அகங்கரித்து உளறி உல்லங்கனம் பண்ணுவது சொற்பபுத்தியும், அற்ப யுத்தியுமுடைய மனுக்களுக்கு அழகல்ல. இது விஷயத்தில் தெய்வத்துரோகிகளான நாஸ்திகரின் போலி நியாயத்திற்கும், குதர்க்க வாதங்களுக்கும், உட்படுவதனுல் உலகத்தில் தர்மந் தலைகெட்டுப்போக, மனுக்குலம் செய்யத்தக்க காரியங்களைச் செய்யாமல், செய்யத்தகாத காரியங்களைச் செய்தலில் அக்கிரமம் மிகுத்து, கலகத்துக்கும் பழிக்கும் இடமாகி அநியாயமான அழிவுக்கு ஆளாகின்றது.

நம்முடைய அநுபவத்தில் மானவரில் பெரும்பாலரைக் கவனிக்கும்போது அவர்கள் தங்கள் மனசாக்ஷிக்கு விருத்தமாய் அடங்காத ஆசாபாசங்களுக்கு இடங்கொடுத்து மதி மயங்கி வஞ்சிக்கப்பட்டு இகபர நன்மைகளை இழந்து மோசம் போகிறார்கள். சிலர் தங்கள் புத்தி, அவர்களை நல்வழியில் தூண்டவும் தெளியாது, தங்கள் இச்சை துர்வழியில் கடூரமாயிழுப்ப இணங்கினவராகி கெடுதலுறுவதை கிளத்தலும் வேண்டுமோ! வேறுசிலர், பின்விளையும் பயனில் திருஷ்டியில்லாமல், என்னவோ, தமக்கு தற்கால சௌகரியத்திற்கு அநுகூலமெதுவானாலும் செய்யலாமென்று திடமுடையராகி பிரயாசமான நல்வினையை பெரிதுங் கவனியாது, லகுவான தீவினையையே மனமறியச் செய்தும் வருகின்றார். இகத்துக்கேற்ற நன்மைகளுக்கும் பரத்துக்குரிய நன்மைகளுக்கும் எதிராக, தெரிந்தும் தெரியாமலும் மனோற்சாகமாய் நடந்து, முடிவில்

மோசவலைப்படுகிற மானிடர்களுக்கு மொத்தமில்லை என்பதை புத்திமான்கள் ஒவ்வொருவரும் தெளிந்திரா திருக்கமாட்டார்.

இதனது நிவிர்த்திக் கென்றே கடவுளால் நயந்தெடுக்கப்படுகிற தீர்க்கதரிசிகளும், தூதர்களும், அவ்வக்காலங்களுக்கும், தேசங்களுக்கும், ஜனங்களுக்கும் தக்க மாதிரியாய் நம்மை வழிநடத்த கடவுளது அருளைக்கொண்டு எழுந்தருள வேண்டியது அவசியமென்பதை ஆஸ்திக புண்ணியம் லபிக்கப்பெற்ற விவேகிகள் யாவரும் ஆமோதிக்க ஆலசியமிராதெனவே சொல்வோம். இது காரணம் பற்றியே ஜகத்துற்பத்தி தொடங்கி மஹாத்மாவான முஹம்மத் நபீ அவர்களின் காலத்துக்கு முன்னும், அநேக தீர்க்கதரிசிகளும், தூதர்களும், பற்பல காலங்களில், பற்பல பாகங்களிலும் தோன்றி, கடவுளது கற்பனைகளை மேற்கொண்டு, அந்தந்த ஜாதிஇனத்தாருக்கு பிரசங்கித்தும் போதித்தும் போயினரென்பதை இஸ்லாமியராகிய நாமெல்லவரும் நம்புகின்றோம்.

பிரபஞ்சத்தில் அவ்வித மகத்துவத்தோடு விஜயஞ்செய்தருளிய தீர்க்கதரிசிகள், ஒரு லட்சத்துஇருபத்துநாலாயிரம் தீர்க்க தரிசிகளென்றும், அவர்களுக்குள் மூந்நூற்றுப் பதின்மூவர் தூதர்களென்னும் பதவியையும் வகிக்கப் பெற்றவரென்றும், அவர்களுக்குள் விசேஷித்தவர் ஆறுபேர் என்றும் இஸ்லாம் மார்க்கப் பிரகாரம் சொல்லப்படுகிறது. (அவர்களாவார் :—(1) நமது ஆதி பிதாவாகிய ஸ்ரீமத் ஆதம் நபீ அவர்கள் (2) ஸ்ரீமத் நூஹ் நபீ அவர்கள். (3) ஸ்ரீமத் இப்ராஹீம் நபீ அவர்கள் (4) ஸ்ரீமத் மூசா நபீ அவர்கள் (5) ஸ்ரீமத் ஈசா நபீ அவர்கள் (6) மஹாத் முஹம்மத் நபீ அவர்கள்.) ஆயினும் மஹாத் முஹம்மத் நபீ அவர்களுக்கு முந்தி வந்தவரெல்லாம் குறித்த ஒவ்வொருதேசத்திற்கும், ஒவ்வொருஜாதியருக்கும் மட்டுமென்று வந்தவரே தவிர சர்வலோகத்திற்கும் எனாண்டமாய்க் குறிப்பிடப்பட்டு வரவில்லை.மஹாத் முஹம்மத்

நபீ அவர்கள் ஒருவரே சர்வ லோக தயாபரராயும், முழுவுலக ரட்சகராயும், இவர்களுக்குப் பின்னுல் பிரிதொரு தீர்க்கதரிசியாவது, தூதராவது வரக்கூடாதென்னும் தெய்வ சட்டத்தின் பேரில், தீர்க்கதரிசிகளுக்குள் தீர்மானமானவராயும் கடைசி குருநாதராயும் வீற்றிருந்தருளினுர். அப்படியே இவர்களைக் குறித்து முன்போந்த சகல தீர்க்கதரிசிகளும், முன்னறிமுகமாக, தீர்க்கதரிசனம் துணிவுரை செய்துள்ளார். திருவுள நியமனத்தின்படியும், பூர்வஞானிகளின் முற்பிரகடனத்தின் பிரகாரமுமே, கி.பி. **570**—௵த்தில் நம் குரு மூர்த்தியான மஹாந் முஹம்மத் நபீ அவர்கள் ஜகத்தில் தோன்றினுர் என்பதை ஸ்தோத்தரித்துச்சொல்லி அவரது திவ்ய ஜீவிய சரிதையை கூடிய வரை சுருக்கமாய் இவண் எடுத்துக் கூறுகின்றோம்.

மஹாந் முஹம்மத் நபீ அவர்களின்

# ஜீவியசரித்திரச்சுருக்கம்

மஹாபரிசுத்தந் தங்கிய அந்தப் பிரதான தீர்க்கதரிசியின் வருகையைப்பற்றி அவரது அவதாரத்திற்குப் பூர்வமே வந்த சர்வ தீர்க்கதரிசிகளும், தூதர்களும், அவரது லட்சணாதி இயல்புகளைப் பற்றியும், மகத்துவத்தை யொட்டியும் புகழ்ந்து ஸ்தோத்தரித்து வந்திருந்தனர். அக்காலத்தில் அறபியா, சீரியா, எகிப்த் முதலிய தேசங்களிலுள்ள மஹாபிரபலம் பெற்ற சாஸ்திரிகளெல்லாம், சமீபத்தில் "சர்வலோகப்பிரசங்கியாக" ஒரு அற்புதமான புருஷர் உற்பனமாகவேணுமென்று களித்திருந்தார்கள். அவரது வருகையினால் உலகம் விசித்ரமான மாறுதல்களுக்குக் காரணமாகுமெனவும், அவர் ஒரு அதிசய பக்தசிகாமணி யெனவும் வருணித்துப் பேசினவர்களுக்கோர் வரைவில்லை. மழைமுகத்தை விழித்திராத அறபியா வனாந்தரம் மேகசாலங்களால் கவியப்பட்டு மழையினால் செழித்தோங்குங் காலம் கிட்டியுளதென்று ககோள தத்துவசாஸ்திரிகளில் பலர் வானசாஸ்திர கணிதத்தினால் முன்னறிக்கையாக முறையிட்டதும் இப்பெரியவரது பாதஸ்பரிசம், அப்பிரதேசம் படப்பெறுதலை வுத்தேசித்தேயாகும். ஆனால், அவர் இன்னவிடத்தில், இன்னவம்சத்தில், இன்னாருக்கு பாத்தியதையாவர் என்பது மாத்திரம் சாஸ்திர விற்பன்னர்களுக்கு புலப்படாத மறைபொருளாயிருந்தது. அப்படியே அவர் "நௌஷீர்வான்" ஆளுகையின் 40-வது வருடம் ரபீஉல் அவ்வல்மீ 12-உக்குச் சரியான கி. பி 570-வது வருடம் ஏப்பிரல்மீ 9உ

சோமவாரம், திருமக்கா நகரில் அவதரித்துப் பிரகாசித்தார். அவருடைய பிதா, அப்துல்லா என்னும் புண்ணிய பிரபு; மாதா, ஆமினு என்ற அருமைச் சீமாட்டியார். அவதரித்த தோன்றலானவர் ஸ்ரீமத் ஸ்மாயில் நபீ அவர்கள் வம்சத்தையும் சிறப்புற்றோங்கிய குறைஷ் கோத்திரத்தையும் சேர்ந்தவர். அவர் அவதரிக்க மூன்றுமாதத்திற்கு முன்னரே தந்தை இக லோகவாழ்வைத் துறக்கவும், நம் குருமூர்த்தியவர்கள் தம் தாயின் கர்ப்பத்திலிருக்கும்போதே, அவரது செல்வமாதாவுக்கு ஒரு சொப்பனம் உண்டாயிற்று. அந்த அம்மையாருக்கு தன் சொப்பனத்தில், 'நீ சர்வலோக தயாபரப்பெருமானை மணி வயிறு தாங்கியிருக்கிறாய், அந்த தோத்திர ரூபி பிறந்தபோது அவருக்கு முஹம்மத் (அதாவது ஸ்துதிக்கப்பட்டவர்) என்ற திருநாமஞ் சூட்டுவோயாக' என்று உணர்விக்கப்பட்டது. ஆதலால் அவருடைய பாட்டனாராகிய அப்தல் முத்தலிப், தன் அனாத பௌத்திரருக்கு அதேசெல்வப்பெயர் தரிக்சலாயினர்.

விதவா துக்கத்தினால், ஈன்ற தாயின் அமுது வற்றிப் போக, அத்தேசவழக்கத்தின்படி, அவரை சஅத் கோத்திரத்தைச்சேர்ந்த ஹலீமா என்ற பெயருடைய ஒரு செவிலித்தாய் வசம் ஒப்புவிக்கப்பட்டது.

மஹாந் நபீ அவர்கள் அறபியாதேச முழுமைக்கும் லௌகீக வைதீக அரசனென்று தீர்ந்தபொழுதும், தன் பால்குடி தாயுடனே மிக நேசபாவனையைக் காட்டிவந்திருந்தனர். அவர் அம்மங்கைக்குக் காட்டிவந்த நன்றியைச் சொல்லவேண்டுமானால் அது அளவுக்குமிஞ்சினதாகவே காணப்படும். அம்மாதினியாரின் இனத்தாரிடத்தும் அவருடைய ஐக்கியம் நல்வளமையே கண்டிருந்தது. கடைசியாய் அவர் ஐந்துவயது பால்யத்தையடைந்தபொழுது அவருடைய வளர்தாய், பெற்றதாயினிடம் திரும்பக்கொண்டு சேர்த்தார். ஆனால் அவருக்கு ஆறு வயதாயிருக்கும் பொழுதே என்றென்றும் தன் அருமைத் தாயின் நிழல் தன்தலைமேல்நின்றும் எடுபட்டுவிட்டது.

அனுதை ரத்னத்தின் பாதுகாப்பை அதிவிர்த்தாப்பிய முள்ள அவருடைய பாட்டனுர் பொறுப்பில் நியமித்துவிட வும், இரண்டுவருடத்திற்குப் பின், அப்பிதாமகனும் காலஞ் சென்றனர். அப்பால், நமது ஆசாரியரை, ஸ்ரீமாந் அலீ என்ப வரின் பிதாவும் தமது சிற்றப்பனுமான அபூதாலிப் என்பவ ராதரவின்கீழ் வைத்து வளர்த்தார்கள். இவ்வழியாக அவர், தமது தாய் தகப்பனுரது வாஞ்சனையின் பாக்கியத்தில் சற்றே னும் ருசிபார்த்தாரில்லை. ஆயினும், அவர் தம்முடைய ஜீவிய முழுதிலும், தம்மைப் பின்பற்றினவர்களை தங்கள் தங்கள் மாதா பிதாக்களுக்குப் பணிந்து ஊழியஞ்செய்து வரவேண்டு மென்று எப்பொழுதும் ஞாபகமூட்டி கண்டிப்பாய் அறுதி யிட்டுவந்தார். அவர் அடிக்கடி "மோக்ஷம், **மாதாக்களின் பாத வடிகளுக்குக் கீழேயே!**" என்ற இவ்வருமையான வாக்கை அருளிச்செய்வது வழக்கம். இதுவன்றி அவர் தம்இளம்பிரா யத்திலேயே மனுேதைரியம் படைத்த வல்லமைசாலியாயும் விளங்கினுர். அவருடைய தேகசுகமும் வெகு உன்னதமான் மையில் இருந்தது. அவர் ஒருவேளையும் வீண்சச்சரவு, வாச் சு வாதம் முதலிய துஷ்டசெயலுள்ள சகஜ வாலிபருடன் இணங் கினதேயின்று. மேலும் அவர் ஒருதடவை கேளிவிலாசமாய்த் திரிந்துவந்த ஒருதோழனை நோக்கி புத்திமதிசொல்லி, "**மனி தன் மிகவும் உயர்ந்த நோக்கத்திற்காக சிருஷ்டிக்கப்பட்டிருக் கிறுன்**" என்று கண்டித்திருக்கின்றனர்.

ஜடுதியிலேயே தமது பட்டணத்தாரும், தேசவாசிகளும் அவர் சுகுணத்தை புகழ்ந்துபேசத் தலைப்பட்டனர், தம்மை எல்லாரும் ஒருங்குசேர்ந்து **சத்தியவிரதன், சமாதான சம்பிரதி** எனும் மகத்தான **புகழ்**பட்டத்தால் அலங்கரித்து அழைக்க லானுர்கள்.

அவர் **12**-வது வயதில் தமது சிறியதந்தையருடனே சீரியாதேசத்துக்கு யாத்திரை புறப்பட்டார்; **25**-ம் ஆண்டில் **குறைஷ்** கோத்திரத்தில் சம்பந்தப்பட்டவரும், "**குவிலித்**"

என்பவரின் புத்திரியுமான கதீஜாவென்னும் ஒருபெருமாட்டியிடத்தில் வர்த்தகத்துக்குரித்தான சரக்குகளை வாங்கிக் கொண்டு வியாபாரத்திற்காக திமஷ்க் நகருக்குப்போயிருந்தார்.

கதீஜா என்னும் பெருமாட்டி தம்மைவிட **15**-வயது முதியவர். நம் ஆசானவர்கள் வர்த்தகத்தில் யாதொரு சூதுவாதின்றி திறமாய்த் தம் செல்வாக்கைப் பிரயோகித்து அம்மாது சிரோன்மணிக்கு அபரிமிதமான லாபத்தைத் தேடிக்கொடுக்கவே, அத்தையலார் நமது பரமாசிரியரது நன்னடக்கையையும், நேர்த்தியான லக்ஷணத்தையும், பெருந்தகைமையையும் அறியலாகி, அவரை மணம்புரிந்து கொண்டார். அவருடைய உத்தமஒழுக்கத்தைக் குறித்து கதீஜாபீபீக்கு எவ்வளவுக்கெவ்வளவு துப்பு தெரிந்திருந்ததோ, அவ்வளவுக்கவ்வளவுஅவரிடத்தில் நேசம் வளர்ந்துகொண்டேயிருந்தது. அவரும் அப்பெருமாட்டியிடம் குறைந்த நேசமாயிருந்ததில்லை. விவாகத்துக்குப்பின்னால் கதீஜாபீபீயின் காரியவிருத்திகளில், விவாகத்திற்கு முன்னிருந்ததுபோல் அவ்வளவு அநுகூலம் இல்லாதிருந்தாலும், ஒருவருக்கொருவர் நேசப்பான்மையிலும் ஐக்கியத்திலும் கொஞ்சமேனும் விபரீதத் தோற்றங் காணாது வாழ்ந்தார்கள். அவர் தமது **35**-வது பிராயத்தை யடைந்தபொழுது தம்நாட்டிலுள்ள ஒரு கருங்கல்லை, குறிப்பிட்ட ஓர் ஸ்தானத்தில், ஸ்தாபிப்பதன் விஷயமாய் ஜனங்களுள் ரத்த பிரளய யுத்தம் கிளம்பக்கூடியதான ஒரு பயங்கர தீமையை விட்டும் தம் நாட்டை தற்காத்தனர். அவர்தம் மானுஷிகத் தன்மையின் பிரஸ்தாபத்துக்கு ஏற்ப நிகழ்ந்த விசேஷ அத்தாக்ஷியான அநேக சம்பவங்களில் இந்த சம்பவமும் மதிக்கப்பட்டது. அவருடைய பரிபூரண ஜீவியமும் பிரயோஜனமான காரியத்திலேயே செலவாகிக்கொண்டிருந்தது. அவரது **40**-வது வயதின் ஆரம்பத்தில், பிரபஞ்ச சரித்திரத்திலே எக்காலத்தும் ஞாபகார்த்தமாக எடுத்துக்காட்டத் தகுந்த அவருடைய மகத்தான ஜீவியத்தின் ஒருபாகம் ஆரம்பமாகின்றது.

ஏகாந்தமான தானத்திலிருந்துகொண்டு வைதீக விஷய சிந்தனைசெய்வது அவருக்கு இளமையிலிருந்தேவழக்கம். அதனால் அவருடைய முகத்தோற்றம் ஒருவித காம்பீரம் உற்றிருக்கும். விவாஹமானபிறகு ஒரு ஆகாயவாணி அவரை அழைப்பதாக அவருக்குக் கேட்பதுண்டு. பிரபஞ்ச வாஞ்சனையில் தாம் சிறிதும் விசாரமிலராகி, அதிற்சிக்கித் தத்தளிக்கும் பற்பல விக்கிரக பூசகர்களாயிருந்த கேவல கிரியாகாண்டிகளான பரிசனங்கள்மேல் வைத்த பரிதாபங்காரணமாய், அவர்களைத் தூக்கி முக்திக்கரை யெய்துவிப்பான் கொண்ட அருட்பெருங்கருணையாலான தெய்வஞான விசாரமே அவருக்குப் பெரிதாயிற்று. பரம்பொருளான கடவுளை ஆராதிக்கிற வழியிலேயே அவருடைய கவனம் அழுந்தியிருந்தது. அதனால் மற்றவர்களுடைய அவல ஸஹவாசத்தில் இஷ்டமில்லாமல் அவர் மக்காவின் சமீபத்திலுள்ள 'ஹிரு' மலைக்குப்போய் அங்கே ஒரு குகையில் தனித்திருந்து கொண்டு, பலநாள் இரவும் பகலும் சிந்தனையுற்றிருப்பார். ஓரோர் சமயம் வீட்டுக்குவருவார். நாற்பது வயது ஆகிறவரையில் இந்தப் பிரகாரம்காலங் கழிந்துவந்தது. பின்னை, அவருக்கு தமது ஆண்டவரிடத்திலிருந்து பரிசுத்த ஜிப்ரீல் என்னும் தேவதூதர்மூலமாய் முதன் முதல் கீழ்கண்ட அருள்வாக்குக்கிடைத்தது. அதாவது:—

1. மஹா கீர்த்திபெற்ற உன் கர்த்தாவின் நாமத்தினாலே ஓது. அவரே சர்வத்தையும் படைத்தவர்.
2. அவர் மனுஷனை உறைந்த இரத்தத்தினாலே சிருஷ்டித்தார்.
3. மஹா தயாளப்பிரபுவான உன் ஆண்டவராலே வாசி.
4. அவரே மனுஷனுக்கு எழுதும் எழுதுகோலின் உபயோகத்தை (பூரணஞானத்தை) ப்படிப்பித்தார்.
5. மனுஷன் முற்றுமே உணர்ந்திராதிருந்த (அரும் பெரும் ஞானங்களை எல்லாம் சுருதி யுக்தியின்வழியாய்) அவரே அவனுக்குப் போதித்தார்.

எனுமாதிய தாற்பரியங் குறித்த அருள் வாக்காகும்.

அவ்விதமே, சமயத்துக்குச்சமயம், எழுத வாசிக்கப் பயிலாத செவ்விளமதலைபோன்ற நம்முடைய ராஜராஜ தீர்க்க தரிசிக்கு, தெய்வகற்பனைகள் வந்துகொண்டே யிருந்தன. அது அவருடைய பிரசித்தமான ஆத்மகீர்த்தியின் நடவடிக் கைக்கு பிரதிகாணிக்கைபோல் தோன்றியது. கடைசியாக, மகாவல்லமையுள்ள கடவுளுடைய திருவுளம் கிடைக்கக் கிடைக்க அவர் மிகவும் மேம்பாடுள்ள ஒழுக்கத்துடன் பொது ஜனங்களை நல்வழிப்படுத்தும் மகத்தான சுமையை தன் சிர மேல் ஏந்திக்கொண்டும், வாக்குமனதோடு ஒருசேர, நனிஉறு தியும் வைராக்கியமும் வகித்தும் நடக்கத்தலைப்பட்டார். அவர் பிரதமத்தில், தம்மைச்சூழ்ந்த சுற்றத்தாருக்கே போதிக்கத் தொடங்கி, சமஸ்தாத்ம ஆதாரியான பகவானிடமிருந்து தமக் குக் கிடைத்த ஞானதீபத்தைக் குறித்து பிரசங்கிக்கவும், சர் வத்துக்கும் முதலில் அவருடைய உள்ளும் புறம்புமான சகல தன்மைகளையும் நன்றாய்த் தெரிந்திருந்த ஜனங்களே அவரை சத்தியதரன். சகாயமூர்த்தி என்று நம்பலானார்கள்.

அப்படியே மிஸ்டர் கபன் என்ற பேர்போன சரித்திரா சிரியரும் பின்வருமாறு கூறுகின்றார். அதாவது:—

"அறபியாவின் தீர்க்கதரிசியாகிய முஹம்மத் நபீயின் மீது, எல்லாவற்றிற்கும் முதலில் அவருக்கு மிக நெருங்கின சுற்றத்தாரே எக்களிப்போடும், ஒருமனதோடும் விசுவாசம் செலுத்தினர். ஏனென்றால், அவர்களே அவருடைய மானு ஷிகத்தன்மையின் போக்குகளை எல்லாரையும்விட அதிகமாய் அறிந்திருந்தார்கள். உதாரணமாய் அவருடைய மனைவியும், அடிமைகளும், சிஷ்யரும், சிநேகிதர்களுமே அவரை தொடக் கத்தில் வந்தித்து பக்திபண்ணினவர்கள். கதீஜாபீபீயும் அவர் புருஷன்வார்த்தையில் சிறக்க உறுதிவைத்திருந்தார். உண்மை யில் ஒருமனிதனுடைய அந்தரங்கபஹிரங்கவிஷயங்கள் யாவும், யாவர் முடியத்தெரிந்தவர்களோ, அவர்களின் மூலமாகவே அம்மனிதனுடைய நடக்கையின் பிரஸ்தாபம் வெளிவருவது

சகஜம். ஆகையால் அப்படித் தெளிவாய் பரிச்சயமுடையவர்களே, ஆதியாய் அவரை நன்குமதித்து அவருடைய வாய்மொழிகளை நம்பினுரென்றறிகிறதி லிருந்து அத்தகையர் பழுதற்றவர் என்றே நிச்சயிக்கவேண்டும்."

மஹாபிரபலமெடுத்த அபூதாலிப் என்பவரின் குமாரர் ஸ்ரீமாந் அலீ என்ற ஒரு யௌவனவாலிபர் தமது பெரியதகப்பனு ரதுபிள்ளையோடு நவரத்நமிழைத்த ஒருசுவர்ணுபரணம்போல குலவியிருந்து பிரகாசித்துக்கொண்டிருந்தார். சத்தியத்தையே விரும்புகிறவரும் தெளிந்த நோக்குடையவருமான ஸ்ரீமாந் அபூபக்கர் என்ற ஓர் திவ்ய ஒளிப்பிழம்பானது நம் தீர்க்கதரிசியின் மதத்தை பரப்பிக்கொண்டிருந்தது. அவரதுசகாயத்தால் ஓர்தினம் மக்காவில் பெரிதும் கண்ணியம் வாய்ந்த பத்துப்போர்கள் இஸ்லாத்தின் கொள்கையைக் கேட்க வந்தனர். அந்தியத்தில் அவர்கள் புத்திக்கும் யுக்திக்கும் ஒத்து சந்தேக விபரீதமறுக்கும் இஸ்லாமியத்துக்கு எதிரே, "தலைசாய்த்து வணங்குவதற்கு பாத்திரமான நாயன் அல்லாவைத் தவிர வேறெவருமிலர், முஹம்மத் கடவுளின் உண்மையான தூதர்" என்று சொல்லி நம்பகமடைந்தனர். மஹ்றாந் முஹம்மத் நபீ அவர்களின் ஜீவியமுழுவதிலும் அவருடைய நண்பர்களின் உள்ளத்தில் அவரது சத்தியத்தைப் பற்றியும், அவருடைய போதனு சக்தியைப்பற்றியும் யாதொரு ஐயமும் எப்பொழுதும் சொல்லளவுக்காவது நிகழ்ந்ததின்று.

(Right Honorable) சையித் அமீர் அலீ என்பவர் இவ்விஷயத்தைக் குறித்து அடியில் வருமாறு நிரூபித்துக் காட்டுகிறுர். அதாவது:—

"நபீ அவர்களை துவக்கமாய் நம்பின பெண்களும், ஆண்களும் கௌரவம்படைத்தவர்களும் அறிவாளிகளாயுமே யுள்ளவர்கள்; கலிலேய சர்ப்பங்களைப் பார்க்கிலும் அறிவிற் குறைந்தவர்களல்ல. நபீயைப்பற்றி அவர்களுக்குச் சிறிதாவது தடுமாற்றம் பிறந்து, உலககாரியஸ்தனுகவோ, ஏமற்றுக்காரனுகவோ,

தெய்வவிசுவாச மற்றவனெனவோ அடையாளம் புலப்பட்டிருக்குமாயின், அவர்கள் அவரை வெறுமையாய் விட்டிருக்க மாட்டார்கள். நபீ அவர்களது சகல விவகாரங்களையும் உடனே உருவந்தோன்றுமற் செய்திருப்பார்கள்'' அவர் கடவுளின் ஏகத்துவத்தைக் குறித்து பிரஸ்தாபிக்க ஏற்பட்டதுமுதல் மக்காவாசிகளால் அநுபவித்த கஷ்ட நிஷ்டூரங்களைக் கணக்கிடல் அசாத்தியமே. மேலும், அவரது உள்ளங்கை யத்தனை தோழர்களும் பரிஹாஸஞ்செய்து தூஷிக்கப் பட்டார்கள்; அவர்கள் பட்டபாடும், தொந்தரையும் இங்கு பதப்படுத்தின் விரியுமென விடுக்கின்றோம். முடிவில், சீஷர்களில் சிலருக்கு ஹபஷாவுக்கு ஓடிப்போகக்கூடியவேளை வந்து நேர்ந்தது. சர்வ முஸ்லிம்களுக்குள்ளும் முதன்முதல் தொழுகை அழைப்பு ஸ்தானத்தை வகித்துவந்த ஸ்ரீமாங் பிலால் என்பவரை அவருடைய எஜமான் முற்றிலும் நிர்வாணியாக்கி கைகால்களைச் சேரக் கட்டி, சுடுமணலுள்ள எரிபொட்டலில் உருட்டிப்போட்டு, அவரது நெஞ்சின்கண் அதிபாரமான கருங்கல்லை யேற்றிவிட்டு, அவரை நோக்கி ஏ பிலால்! நீ இந்த விபத்தினின்றும் விலகவேண்டுமானல், நீ தழுவியிருக்கிற இஸ்லாமியத்தை நிந்தித்துப் புறக்கணித்துத் தள்ளுவாயாக வென்று வற்புறுத்தினர். என்றாலும், இந்த மதவிசுவாசத்தின் கிளர்ச்சியானது, அவர் தம்முடைய வறண்ட உதடுகளினின்றும் ''கடவுள் ஒருவரே, கடவுள் ஒருவரே'' என்ற திவ்யதரமான வார்த்தைகளை உச்சரித்துக்கொண் டிருக்கத்தக்க வன்மை பெற்றிருந்தது.

இப்படியாக நாளுக்குநாள் நபீயவர்களுக்கு எதிரிகளான மக்காவாசிகளின் சத்துருத்தனம் பலப்பட்டுக்கொண்டேவர இஸ்லாமியத்துக்குக் கொடிய விரோதியாயிருந்த அபூஜஹில் என்பவன், நபீயின் சிரத்தைச் சேதித்துக்கொண்டுவருகிறவரெவரோ, அவருக்கு 100-ஒட்டகங்களையும், ஒழிவிலா செல்வத்தையும் வெகுமதிகொடுப்பதாக தண்டோரா போடுவித்தான். அதன்மேல் கத்தாபின் புதல்வர் உமற் என்பவர் நம்

அற்புத சற்குருவான நபியவர்களை வெட்டிவிட்டு வருகிறேனென வாக்குத்தத்தம் பண்ணிக்கொண்டு திரும்பினர்.

இந்நாட்களில் நபி பெருமானவர்கள் 'சபா' என்னும் பெயர்கொண்ட மலைச்சிகரத்தின்மேல் கட்டப்பட்டுள்ள 'அர்கம்' என்பவரின் குடிசைக்குள் நிழல்பெற்றிருந்தனராக, இதனை அறிந்துகொண்ட அதிவீரரான உமற் என்பவர் ஒரு கூரிய பட்டயத்தைக் கையில் எடுத்துக்கொண்டு,நபியவர்களைச் சிரோபங்கஞ்செய்துவிடும் நோக்கமாகப் புறப்பட்டு வரும்வழியில், அப்துல்லாவின் புத்திரரான நயீம் என்பவர் உமறைச் சந்தித்து க்ஷேமமா! என, பிரதிபுத்தரமாய், 'நான் இன்றுதினம் நிச்சயமாக முஹம்மதை இந்தவாளுக்கு இரையாக்கப்போகின்றேன், இன்றைக்கே நம் காரியம் பைசலாகிவிடும்' என்றனர். இதைக் கேள்விப்பட்ட நயீம் என்பவர், நல்லது இருக்கட்டும், முதலில் உமது வீட்டு சமாச்சாரம் உமக்குத் தெரியுமா? உம்முடைய சகோதரி பாத்திமா என்பவரும், அவருடைய அகமுடையார் சயீத் என்பவரும் இஸ்லாமார்க்கத்தைத் தழுவி அதில் நிரம்பவும் பக்தியாயிருக்கின்றனரே என்று இசைக்கவும், இதைச் செவியுற்றமாத்திரம் உமற் பின்னடிவைத்துத் தன்சகோதரியின் வீடுவந்து நண்ணினர். அந்தச் சமயம் திருக்குறுஆனை ஓதிக்கொண்டிருந்த அவரது சகோதரி உமறின் வருகையரவத்தைக் குறிப்பாய்த்தெரிந்து, திருக்குறுஆனின் பிரதிகளை மறைத்துவிட்டு வாய் மூடிக்கொண்டு மௌனமாயிருந்தனர். ஆனால் அவர்ஓதியசப்தம் உமறின் செவியேறிப்போயிருந்தது.

உமற் தன்தங்கையைப் பார்த்து சற்றுநேரத்துக்குமுன் ஏதோ சப்தத்தைக் கேட்கலுற்றேனே அதென்ன என்று வினவ, தங்கை ஒன்றுமில்லை என்று விடையளித்தனர். உமற், அன்றன்று, நீங்கள் இருவரும் மதப்பிரஷ்டராகிவிட்டீர்கள் என்பதை நான் கேள்விப்பட்டேன் என்று சொல்லி தன் மைத்துனருடன் கோபாவேசங்கொள்ள, அதன்பின் அவருள் கைகலந்துவிட்டது. தங்கை தன்கணவனைத் தற்காத்

துக்கொள்ள கொழுநருக்கு உதவியாய் வந்தபொழுது, உமற் அவரையும் இரத்தம் பீறியோடத்தக்க விதமாயடித்தனர். இத்தருணம் தங்கையானவர் வாய்திறந்து "உமறே உமது பிரியப்படி செய்யும்; ஆனாலும் இஸ்லாமியம் என் இருதயத்தை விட்டு நீங்கப்போகிறதன்று" என்றுரைத்த இவ்வார்த்தைகள் உமறுடைய உள்ளத்தில் ஒரு விசேஷக்கிளர்ச்சியைத் தோற்றுவித்தன. அப்பொழுதே தன்சகோதரியை அன்பினால் கடைக்கணிட்டுப் பார்த்தார். தன்சகோதரியின் உறுப்புகளிலிருந்து இரத்தம் பீறிவடியக்கண்டு, மேலும் வருத்தப்பட்டு, நல்லது, நீங்களிருவரும் ஓதிக்கொண்டிருந்ததை எனக்குஞ் சொல்லிக் காட்ட வேண்டுமென்ன, உடனே பாத்திமா என்பவர் திருக்குறுஆனின் பிரதிகளைத் தன்சகோதரர்முன்னே கொடுவைத்தார். அதற்கப்பால், உமற் அவைகளை எடுத்துப்பார்க்க "பூமியிலும் வானத்திலுமுள்ள சர்வவஸ்துக்களும் கடவுள் ஒருவருக்கே ஸ்தோத்திரம் செலுத்தா நிற்கின்றன; அவரே கண்ணியமும் சர்வஞானமு முடையவர்" என்ற இவ்வரிய வசனம் கட்புலனாகவும், அதன் ஒவ்வொரு பதத்திலும் அவருடைய உள்ளம் உருகிற்று. அவ்வசனத்திலிருந்து தொடர்ந்து படித்துக்கொண்டே வரும்போது "ஆகையால் அல்லாவையும் அவருடைய தூதனையும் நம்புங்கள்" என்னும் இக்கற்பனாமிர்தவாக்கையும் கண்ணுற்ற வளவில் தன்னையறியாமல் "வணக்கத்துக்குரித்தான நாயன் அல்லாஹுத்தஆலாவன்றி வேறொருவரும் அன்றென்றும், உண்மையாக முஹம்மத் கடவுளின் தூதரே யென்றும் நான் சாட்சி பகர்கின்றேன்" என விளம்பிக்கொண்டே அவ்விடம் விட்டுப்பெயர்ந்து பரம சந்தோஷமாய் நபீ அவர்கள் வசதிபெற்றிருக்கும் சபா மலையை நோக்கிப் புறப்பட்டனர்.

ஏற்கனவே அவரது இடுப்பில் உறையிட்டிருந்த பட்டயத்துடனேயேசென்றார். அங்கே குடிசைக்குள் நபீ அவர்களைச் சேர்ந்த சில சிஷ்யர்களும் ஸ்ரீமான் அமீர் ஹம்ஸாவும் நபீ அவர்களுடனேயே தங்கியிருக்கவும், ஸ்ரீமான் உமற் அவர்கள் அவ்விடம்போய் வாசல்கதவைத் தட்டினார். சிஷ்யர்களில் சிலர்

கதவின் பக்கவழியாய் நோட்டமிட்டு ஸ்ரீமாந் உமற் பட்டயத்துடன் வந்திருப்பதைத் தெரிந்து கபாடம் திறக்கக்கூடாதென்று ஆட்சேபித்தனர். ஆனால் ஸ்ரீமாந் உமற் மனம் அற்புதமாய் மாறியிருக்கும் இந்த நூதனத்தன்மை அவர்களில் ஒருவருக்கும் தெரியாது. அவர்களோடிருந்த ஸ்ரீமாந் அமீர் ஹம்ஸா அவர்களோ "இடங்கொடுங்கள், கதவைத் திறவுங்கள், உமற் சாந்தமனதுடன் வந்தால் நன்று, இன்றேல் அவனது கோடு வாளினாலேயே அவனைச்சிரச்சேதம்பண்ணிவிடப்படும்" என்று இயம்பிவிட்டு தானே கதவையும் திறந்தனர். அப்போது, நம் அருமை நபீ அவர்கள் முன்னேறிச்சென்று ஸ்ரீமாந் உமறுடைய முன்றானையைப்பிடித்து,"ஏன் உமறே! யாதுநோக்கத்தோடு இவ்வளவுதூரம் வந்தீர்" என்றுகேட்டதீர்க்கதரிசித்துவகாந்தக் குரலானது அவரது உள்ளத்தில் பாய்ந்து ஆக்ருஷிக்கவே, ஸ்ரீமாந்உமற்அவரும்நபீயே! "விசுவசிப்பதற்காக"என்று மிகத்தாழ்மையோடு சிரம்பணிந்து பதிலளித்தார். நபீ அவர்கள் இதைக் கேள்வியுற்றசமயம், "உன்னதமான கடவுளே"! என்று ஓலமிட, கூடியிருந்த சிஷர்களெல்லாம் "தேவன் மகா பெரியவர், பெரியவர்" என்று களிமகிழ்வுடன் கழறிய தொனியினால் மக்காவின்பர்வதத்தொடர்ச்சி முற்றும் அதிர்ச்சியுற்றன. இப்படி ஸ்ரீமாந் உமற் அவர்கள் ஆச்சரியப்படத்தக்கவிதமாய் மனந்திரும்பி இஸ்லாமதத்தை ஏற்றுக்கொண்டதிலிருந்து இஸ்லாமியசரிதத்தில் ஒருமேன்மையான உற்சாகம் ஏற்பட்டுவிட்டது. அந்தத்தறுவாய்வரையில் ஏறக்குறைய 50-பேர்வரை இஸ்லாமியத்தை அநுசரித்திருந்தனர். அவர்களில்,அறபியருள் பிரபலம்பெற்ற வீரசிங்கமாகிய மேற்கூறிய ஸ்ரீமாந் அமீர் ஹம்ஸாவும் ஒருவர். ஸ்ரீமாந்உமற் இஸ்லாமியத்தைக்கைக்கொள்வதற்கு முன்னம், முஸ்லிம்கள், தங்கள் சமயக்கட்பாடுகளை ஒழுங்கே நடத்திவரச்கூடாத நிருவாகத்தில் இருந்ததுந்தவிர,மக்காவிலுள்ள கஃபாவென்னும் தேவசந்நிதியில் போய்த் தொழுதுவருதற்கும், சௌகரியம் வாய்க்கப்பெறவில்லை. ஸ்ரீமாந் உமற் அவர்கள் இஸ்லாமியத்தை ஒப்புக்கொண்ட

வுடன் இந்நிலைமை மாறலாயிற்று. அன்றியும் அவர் பிரத்தியே கமாக நம்மதப்பிரபலத்தையெடுத்து பிரசங்கிக்கவும் தலைப்பட்டார். அவருடன் ஆரம்பத்தில் ஆக்ரோஷம்வரித்துப் போராடினவர்கள் அஞ்ஞானிகளே என்றாலும் உமற் தம் உறுதிப்பாட்டில் இடைதளராது சாதித்துநின்று சரியாய் எதிர்வாதஞ் செய்துகொண்டே வந்தார். அவரது ஆதரவில் முஸ்லிம்கள் கூட்டங் கூட்டமாய்ச்சேர்ந்து கஃபாவுக்குவந்து தொழுது போகலானார்கள். மிகவும்பெயர்போன ஸ்ரீமாந் உமற் அவர்களும், வீரதுரந்தரரான ஸ்ரீமாந் அமீர் ஹம்ஸாவும் இஸ்லாமியத்தில் பிரவேசித்தவிஷயமாய் குறைஷிகள் தங்கள் நடவடிக்கை சாலச்சங்கடத்துக் குள்ளாயிற்றென்றும், தங்கள் கோரிக்கை மிகவும் கேட்டையடைந்ததென்றும் உணர்ந்துகொண்டவராய், நபீ அவர்களுக்கு உலகஆசைப்பொருளைக் காட்டியாவது, ஹீனம் விளைவித்து தமது முயற்சியில் சித்திதேடிக்கொள்ளலாமென எண்ணி, அவ்வாறும் பிரயத்தனித்துப்பார்க்க பயனில்லையென்று கண்டார்கள். அதன்மேல் நம் குருநாதரின் சிறியதந்தையரான அபூதாலிப் அவர்களிடம்போய்“உமது புத்திரனுடைய வாயினுக்குக் கடிவாளம் பூட்டுகிறீரா? அன்றேல், அவரையும் அவரைச்சார்ந்தவர்களையும் நமதுசகோதரவாஞ்சனையினின்றும் அகற்றுவித்து அவர்களனைவரையும் தேசப்பிரஷ்டம் செய்துவிடுவோம்” என்றனர். இதிலும் அவர்கள் காரியம் கை கூடாது ஒழிந்தது. நிற்க, நபீ அவர்களோ, “அருவருப்பான உங்கள் பழைய ஏற்பாட்டையும் பலதேவ்தா பாவனைகளையும் அறவேவிட்டு ஒழுகுங்கள், ஒரேமெய்க்கடவுளைச் சேவியுங்கள்” என்று பிரஸ்தாபிப்பதை எந்தநேரமும் விட்டதேயில்லை. இதனால் குறைஷிகளுக்கு கோபமூண்டு,எவ்வழியேனும் அவரையும், அவருடந்தையாளர்களையும், அவரது மார்க்கத்தையும் பரிச்சேதமாய் நிர்மூலமாக்கி விடவேணுமென்று அளப்பருஞ் சூழ்ச்சிகளைப் பிரயோகித்தார்கள்.

இதைத் தெரிந்த நபீ அவர்களின் சிறியதந்தை அபூதாலிப் அவர்கள், தமக்கு ஐக்கியப்பட்ட ஹாஷிம் ஜாதியாரை ஒன்று

திரட்டி தமது சகோதரரது சுதன் அருமை நபீ அவர்களைப் பாதுகாக்கும்பொருட்டு அவர்களுக்குத்திட்டஞ்செய்தார். எவ்வாறோ, குறைஷிகள் யாவரும், இந்த ஏற்பாட்டை அறிந்துகொண்டு, அதற்கு எதிராக, மற்றைய வகுப்பாரனைவரையும் தனியிடம்சேர்த்து முஹம்மதைச் சிரச்சேதம் புரிந்துவிடும் நிமித்தம் அபூதாலிப் என்பவர் அவரை நம்வசம் ஒப்படைக்கும்வரையில் அபூதாலிப், அவருடைய கூட்டாளிகளான ஹாஷிம் கோத்திரத்தார், முஹம்மத் இவர்களுக்குச் சம்பந்தப்பட்ட ஜனங்களோடு நேசம்பாராட்டவும், சம்பாஷிக்கவும், கூடாதென்றும், அவர்களது சுபாசுப காரியங்களுக்குங்கூட போகக்கூடாதென்றும்,வர்த்தகசம்பந்தமாய்க்கொடுக்கல் வாங்கலாதி சகலசம்பந்தத்தையும் கண்டிதமாய் நிறுத்திவிடவேண்டுமென்றும், நெருப்புப்பற்றுமுதல் கொடுத்து உதவக்கூடாதென்றும் தம்முள் ஓர்விதக் கட்டுப்பாடு செய்துகொண்டார்கள். இதன்பலனாக, இவர்களினால்விளையும் அதிசஞ்சலமான நெருக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, ஹாஷிம் இனத்தாரும், நபீஅவர்களும், அவரது துணையாளர்களும் ஒரு மலைப்படுகையில் அடைக்கலம் புகுந்திருந்தனர். அந்தப்படுகைக்கு "அபூதாலிபின் அடைக்கலப்பதி" என்று பெயர்வழங்கி வந்தது.

பிறகு குறைஷிகள் இனிஎன்றென்றும் யாங்கள் அப்துல் முத்தலிபின் குலத்தாரை நீங்கிப்பிரிந்தேயிருப்போமென்றும், அவர்களோடு எவ்விஷயத்திலும் உறவுகொண்டாட மாட்டோமென்றும், அவர்களுக்கு எங்களில் ஒருவரும் உதவிபுரியமாட்டோமென்றும், முஹம்மத் கொலையுண்டாலொழிய, எந்தசெயல்களிலும், நாங்கள் அவர்களுக்கு பலப்பிராப்தமாக இடங்கொடுக்கோமென்றும் ஒரு உடன்படிக்கை எழுதி அதில் பிரதானிகளின் கையொப்பம்வாங்கி, அதை கஃபாவின் தேவாலய முகப்பில் தூக்கிவிட்டார்கள். பின்னும், அபூதாலிபின் அடைக்கலப்பதியென்னும் மலை ஸ்தானத்திலிருந்து யாவரேனும் வெளிப்பட்டு. கடைவீதிக்கு ஏதாவது பதார்த்தம் வாங்

கிப்போக வந்தால், அவர்களை மூர்க்கத்தனமாய் அடித்து விரட்டி வந்தார்கள்.

ஆனால் நபீ அவர்கள் மாத்திரம், பொதுவாய் தேசத்தில் "அமைதிநாள்" "நிர்விரோதநாள்" என்று அநுசரிக்கப்படும் அவ்வுத்சவதினங்களிலும், ஹஜ்ஜு கொண்டாட்ட நாட்களிலும், தவறுமல், வெளிகிளம்பிவந்து பொதுஜனசமூகத்துக்கு, தமது மார்க்கத்தையொட்டி பிரசாரஞ்செய்தலை விரதமாகக் கொண்டு பிரசங்கித்துப் போகவும் வரவுமாய் அக்கணவாயிலே 3-வருஷகாலம் கழித்தனர். இதுநிற்க, எதிர்கக்ஷியில் சேர்ந்தவர்களில் சிலர் இதற்கு முன்பே சிஷ்யராகி, நபீயவர்களுக்குப் பணிவிடைசெய்துகொண்டு, அவர்கூடவே குகையிலிருந்தபடியால் அவர்களுக்காகபட்டணத்திலுள்ளஅவர்களின் பந்துக்கள் உணவுப்பொருள்களை ஒளிமறைவாய்க் குகைக்கனுப்பிவந்தார்கள். மேலும் குகைக்குள் இருந்தவர்களின் பெண்டுபிள்ளைகள் அங்கே பட்டணத்தில் தங்கள் தங்கள் வீட்டில் இருந்துகொண்டு ஆகாராதி ஆதாரங்களின்றி பசிபட்டினிகிடந்து மிகக் கஷ்டப்பட்டு வருந்தி பின்னும் தாங்காது வாய்விட்டுக் கதறியழத்தொடங்கி விட்டபடியால், சில குறைஷிகளுக்கு பந்துமித்திரமுறையில், பரிவும் பரிதாபமும் பதைபதைத்து பாதிக்கவும், அதன்மேல் ஒருசாரார், ஏகமாய்க்கூடி, மேற்படி உடன்படிக்கையை ரத்துசெய்துவிட அவர்களை அவ்விடம் விட்டுநீக்கி பட்டணத்துக்குள் கொண்டுவந்தார்கள். அப்துல் முத்தலிபின் மைந்தர்களும் தத்தம் மாளிகைபோய்ச் சேர்ந்தனர். இந்தசந்தர்ப்பத்தில் நபீ அவர்களைக்கண்காணித்துவந்த அவர்கள் சிறிய தந்தையராகிய அபூதாலிப் என்பவர் காலமானதுக்கமும், அத்துடன் நபீ அவர்களின் செல்வச்சீமாட்டியார் கதீஜாபீபீ பரகதியடைந்த சஞ்சலமும், நபீ அவர்களை மேலிட்டிருந்தது. அபூதாலிப் காலமாகவும்,மாற்றார்களுக்குக் குதூகலம் பிறந்து நபீ அவர்களைப் பலவிதத்திலும் தொந்தரவுக்குமேல் தொந்தரைசெய்ததைச் சொல்லிமுடியாது. ஆகவே நபீ அவர்கள் மக்காநகருக்

குச் சற்று தூரத்திலுள்ள தாயிப் என்னும் பட்டணவாசிகளுக் குப் பிரசங்கிக்க, அவ்விடம் போயினர். அவ்வூர்வாசிகளும், மக்காவாசிகளைவிட வேதத்தை சொடுப்பதில் பின்வாங்கினவர் களல்ல. அதனால் அவ்விடமிருந்து திரும்பி மக்காவுக்கே வரும் போது நபீ அவர்களின் பரிசுத்தமேனியானது சாயத்தினாலும், ரத்தத்தினாலும் ததும்பியிருந்தது. இந்நாட்களில் திருமதீனா நகரிலிருந்து ஹஜ்ஜு கொண்டாட்டத்திற்கு வந்த ஒரு சிலாக் கியமுள்ள கூட்டத்தார், மக்காவில், சிற்சில வேளைகளில் நபீ யவர்களால் நிகழ்ந்த உபந்நியாசத்தைக் கேள்வியுற்று இஸ்லா மைக் கபூல் செய்தனர்.

இதற்குப்பின் நபீ அவர்கள் தம்மைச்சேர்ந்தவர்களை யெல் லாம்நோக்கி,'நீங்கள் அஞ்ஞானிகளின் சங்கடத்திலிருந்து தப் பித்துக்கொள்ளக் கூடாதிருந்தால் மதீனாநகருக்குப் போகலாம்' என்றுகட்டளையிடவே முதன்முதல், ஸ்ரீமாந் அபூசல்மா, பிலால், அமாரியா, அப்துல்லா இப்ன் அஷ்ஹல் ஆகிய இந்நால்வரும் புறப்பட்டார்கள். அப்பால் ஸ்ரீமாந் உமற் அவர்கள் 20-பெய ருடன் எழலானார். "சஹீஹ் புகாரீ என்ற கிரந்தத்தில் 20-பெயர் என்றுமட்டுங் குறிப்பிட்டிருக்கிறதே யொழிய அவர்களின் நாமதேயங்கள் குறிப்பிட்டில்லை. ஆனால் இப்னுஹஷாம் என் பவர் சிலருடையபெயர்களைக் குறிப்பிடுகின்றார். அவர்கள் :— ஸைத், சயீத், கனீஸ், அம்று, அப்துல்லா, வாகித், கௌலி, மாலிக், அயாஸ், ஆகில், காலித் ஆகியவர்களாம்.

மதீனாநகரம் விஸ்தாரத்தில் குறைவுள்ளதாகையால், பிரிந் துசென்ற முஹாஜிரீன்களான முஸ்லிம்கள் அநேகமாய் மதீ னாவிலிருந்து 2-3-மைல் தூரத்திலுள்ள 'குப்பா' என்ற ஸ்தலத் திலேயே விடுதிபெற்றிருந்தனர். ஸ்ரீமாந் உமற் அவர்களுக்கும் இவ்விடத்திலேயே 'ரிபாஆ' என்பவரின் இல்லத்தில் இடம் ஏற்பாடாயிற்று. மேற்படி 'குப்பா' என்ற ஸ்தலத்துக்கு 'அவாலீ' என்று சொல்வதுமுண்டு; ஏனென்றால், சஹீஹ் முஸ் லிம் என்ற கிரந்தத்தில் அவர்கள் வசதிபெற்ற ஸ்தானத்திற்கு

"அவாலீ" என உரைக்கப்பட்டுளது. ஸ்ரீமாந் உமற் அவர்களுச்குப் பிறகும் அநேகசிஷ்ஷர்கள் மதீனாவுக்குப் போயினர். இந்த சந்தர்ப்பத்தில் மிகுந்திருந்த சிஷ்யர்களுச்கும், நபீ அவர்களுக்கும் மக்காவாசிகளால் கொடுமையான கஷ்டம் உண்டாயிற்று. இதனிடையில்,மேலும் மேலும் இஸ்லாம் விர்த்தியடைவதை குறைஷிகள் கண்டு, இம்முறையில் கட்டாயமாய் முஹம்மதைக் கொலைசெய்தேதீரவேண்டும், அவருடைய மனுஷ்யர்களில் மிச்சமானவர்களும் இல்லை, அவர் சிற்றப்பன் அபூதாலிபும் மரித்தார், அவர்மனைவியும் தேகவியோகமாயினர் என்று அலட்சியமுடையவராய், தற்பெருமைகொண்டு, அவர்களில் ஒவ்வொரு கோத்திரத்திலும் ஒவ்வொரு சமர்த்தனைத் தெரிந்து யாவரையும் சேர்த்து "முஹம்மத் இரவில தன்கிருசத்தில் சயனித்திருப்பார், அந்தச்சமயம்போய், அவருடைய வீட்டைவளைந்து அவரைக் கொலைசெய்துபோட வேண்டும்" என்று கற்பித்தனுப்பினார்கள்.

அங்கே நபீஅவர்கள் தமது ஜாகையில் தமது பிராணசிநேகிதரான ஸ்ரீமாந் அபூபக்கர் அவர்கள், ஸ்ரீமாந் அலீ அவர்களுடனே நித்திரை பண்ணிக்கொண்டிருக்கையில் மஹாந் நபீ அவர்களுக்கு மேற்படிசதியாலோசனையைப்பற்றிய அசரீரிவாக்குப்பிறக்க, நபீ அவர்கள் விழித்தெழுந்து ஸ்ரீமாந் அபூபச்கரை அழைத்துக்கொண்டு அந்த அர்த்தராத்திரியே மக்காவைவிட்டு வெளிகிளம்பிவிட்டார். பின்னர் ஸ்ரீமாந்அலீ அவர்கள், உறக்கத்தினின்றும் தெளிந்து, சுற்றிப்பார்க்க, தமது குருநாதரையும், சகாவையும் காணுமலிருக்குஞ்செய்தி தெரிந்துகொண்டும் சரி, திருவுளப்படி ஆகட்டுமென்று தீர்மானித்துக்கொண்டு, நபீ அவர்களின் படுக்கையிலேயே படுத்துக்கொண்டார். இஃது இப்படியிருக்க. எதிரிகள் வந்து நபீ அவர்களின் மாளிகையை முற்றுகைசெய்துகொண்டு உட்சென்று பார்க்கவும், ஒருவர் துயிலுற்றிருப்பதைத் தெரிந்து, அவரை நபீ என்று மதித்து ஆரவாரித்துப் பின் அவர் போர்வைபோர்த்திருந்த நபீ அவர்

களின் மகிமைதங்கிய பச்சைத் துப்பட்டியைத் திறந்து நோக்கவே, ஸ்ரீமாந் அலீ அவர்களாயிருக்கக்கண்டு கூக்குரலோடு பிரலாபித்து மோசம்போனோமென்று சொல்லி திகைத்திருந்தார்கள். இப்படித் திகைத்து, ஆ! முஹம்மதைக் காப்பாற்றும் நிமித்தம் இவ்விளைஞன் சிறிதும் மனமஞ்சாமலும், கொலையஞ்சாமலும் அப்படுக்கையிலேயே படுத்துக்கொண்ட தீரம் எத்துணைத்தோவென்று அவர்களுக்கே ஒருவித ஆச்சரியம் தோன்றி, உளம் உருகி அவரையும் விட்டு விட்டார்கள்.

முற்கூறியவண்ணம் நபீ அவர்கள் ஸ்ரீமாந் அபூபக்கரவர்களை கூட்டிக்கொண்டு மக்காவுக்குச்சற்றுதூரத்திலுள்ள தூர் மலையை நோக்கி நடந்தார்கள். நடுச்சாமம் ஆனபடியால், நிர்மானுஷியமான இப்பிரதேசத்தில், காலடிசப்தம் சத்துருக்களுக்குப் புலப்படுமென்று நினைத்து, பாதரட்சையைக் கையில் கழற்றிவைத்துக்கொண்டு சென்றனர். நபீ பெருமானுக்கு கரடுமுரடான அவ்வனந்தரத்திலுள்ள முட்கள்போன்ற நகற்கள் தைக்குமென்பதை யுத்தேசித்து, ஸ்ரீமாந் அபூபக்கர் அவர்கள், நபீ அவர்களைத் தம்புயமே லேற்றிக்கொண்டே மலைச் சாரல் அடைந்தனர்.

பிற்பாடு இருவரும் நடந்து மலைமேலேறிச்செல்ல, ஸ்ரீமாந் அபூபக்கரவர்கள் முதலில் அங்கொருகுகைக்குள் புகுந்துபோய் அதைச் சுத்தஞ்செய்து திரும்பிவந்து நபீ அவர்களை அழைத்துப்போய்த் தம்மடிமீது பள்ளிகொள்ளச் செய்தார். இங்கு இது நிற்க; சத்துருக்கள் 100-ஒட்டகத்திற்கும் வெகுமதிக்கும் ஆசைப்பட்டு நபீ அவர்களைத் தேடி நாலாபக்கமுந் திரிந்திளைத்துக் கடைசியாய் மேற்குறித்த குகையின் சமீபத்தில் தற்செயலாய் நெருங்கினார்கள், இப்படி நெருங்கிவந்து, குகைக்கு வெளியே நின்று சிந்திக்கலுற்று, "இதற்குள்ளும் மனிதன் போவானா?" என்று தம்முட்பேசத் தொடுத்து, முடிவில், பிரவேசிக்க மனங்கொள்ளாமலே திரும்ப நேர்ந்தது. அத்தறுவாயிலேயே நபீ அவர்களோடு கூடயிருந்த ஸ்ரீமாந் அபூபக்க

ரவர்கள், "இதோ அஞ்ஞானிகள் நம்மைக் கண்டறியும் சமயம் வெகு சமீபத்திலிருக்கிறதுபோலும்" என்ன, நபீ அவர்கள் மறுமொழியாக, "சலிக்கவேண்டாம், நிச்சயமாகவே கடவுள் நம்மோடிருக்கிறூர்" என்றனர். இந்தப்பிரகாரம், கடவுள் பகைஞர்கள் கண்களைக் குருடாக்கி, நபீ அவர்களாதியரை ரட்சித்தார். பகைஞர்கள் யாதொரு பலனடையாமல் திரும்பிப்போனூர்கள். என்றாலும், நபீ அவர்கள் மூன்றுதின பரியந்தம் அம்மலை முழையில் தங்கியிருந்து, நாலாம்நாள் கி. பி. 622ளு ஜுலைமீ 15உ யன்று அவ்விடமகன்று மதீனு நகருக்குப் பிரயாணப் பட்டார்கள். அன்று முதல்தான் இஸ்லாமிய சகாப்த ஹிஜ்ரீ வருஷம் ஆரம்பம். நபீ அவர்கள் ஒருவித ஆபத்துமின்றி க்ஷேமமாய் மதீனுநகர் போய்ச் சேர்ந்தனர். அவரைப் பார்க்கவும் அவர் பேசும்வார்த்தைகளைக் கேட்கவும் அவா உள்ளவர்களாய் மதீனு ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து அவரை நல்வரவு கொண்டாடினூர்கள். மதீனுநகர் எப்பொழுதும் இப்படிப்பட்ட காட்சியைக் கண்டதுமில்லை, நன்றி பாராட்டுதற்குரிய இப்படிப்பட்ட தினத்தை நபீ அவர்களும் எப்போதும் எதிர்பார்த்தது மில்லை. இப்படியாக மக்காவிலிருந்து மதீனுவுக்கு வந்து சேர்ந்தவர்கள் "முஹாஜ்ரீன்கள்" எனவும், அவர்களை வரவேற்கப்பெற்ற மதீனுவாசிகளுக்கு "அன்சாரீன்கள்" எனவும்பெயர் துலங்கலாயிற்று. ஜனங்கள் நபீயவர்களிடம் வைத்த நம்பிக்கையாலும் விசுவாஸத்தாலும் இஸ்லாமியம் பலப்பட்டுவரும் நோக்கத்தைத்தெரிந்த நம் நபீ அவர்கள் திருமதீனுநகரில் ஒருமசூதியைக்கட்டினூர்கள். நபீயவர்கள் மதத்தில் பிரவேசித்தவர் யாவரும் அந்த மசூதியில் போய் ஜபம் பண்ணத் தொடங்கினர். முஸ்லிம்களுடைய தொகை வரவர பெருகிவந்தமையால் அந்த மசூதி போதாதாயிற்று.

நபீ அவர்கள் மேற்குறித்த அவ்விரு வகுப்பார்களுக்கு மத்தியில்சகோதரத்துவத்தை நிலைநாட்டிவைத்தது கவனிக்கத் தக்க விஷயமாகும். பிரதி மதீனுவாசியும் ஒவ்வொரு மக்கா

வாசியைச் சகோதரனாக ஏற்றுக்கொண்டு தமது சர்வ சொத்திலும் சரிபாதி மக்காவாசிகளுக்கு மனத்திருப்தியாய் தத்தம் பண்ணச்சம்மதித்து நடத்திவந்தனர். நபீ அவர்கள் திருமதீனாவுக்குவந்தவுடன், மக்காவிலுள்ள குறைஷிகள் பின்னும் விடாமல் முஸ்லிம்களை இவ்வழியே சும்மா விட்டுவிட்டால் அவர்கள் பலம் வலுத்துவிடுமென்றெண்ணி, மதீனாநகர்மேல் யுத்தம் எழுதற்குவேண்டிய முஸ்தீப்புக்களைச் சேகரிக்கத் துணிந்தனர். ஆனாலும் ஹிஜ்ரீ 2-வது வருடம்வரை விசேஷ நடவடிக்கை ஒன்றும் நிகழவில்லை. இரண்டுமூன்றுமுறை, குறைஷிகள் சிறு சிறு கூட்டமாய்த் திரண்டு, மதீனாவுக்கு எதிரேறிச் சென்றனரென்றாலும் அதனால் பிரமாதம் ஒன்றும் விளையவில்லை.

இம்மட்டில், மேல்விஷயங்களை விஸ்தரிக்கிறதினின்றும் நிறுத்தி, இனி சரிதத்தை நாம் முடிக்க இச்சிறு நூல் கட்டாயப்படுத்துகிறது. இச்சிறு நூல் நபீ அவர்களின் உபதேச வாக்கியங்களுக்கென்றே மகுடம் புனைந்து வருவதால், இதில் அவரின் ஜீவிய விர்த்தாந்தத்தையும் சர்வ விபரத்துடன் விரித்தெழுதத் துணிவது "மற்றொன்றுவிரித்தல்" என்னும் இலக்கணக் குற்றத்தின்பாற்படு மென்றஞ்சி நாம் விடுத்தாலும், இந்நூல் வாசகர்களுக்கு, அதன் ஆசிரியரின் திவ்யவாழ்க்கை நலவீதியும், சிறிதேனும், விளங்க அறிந்துக்கொள்ள வேண்டுவது அவசியந்தானென்னும் அபேக்ஷைதோன்றுமேயாக, அதற்கு நாம் ஆளாகக் கூடாதென்ன எம்மனம் விடாது பற்றியிழுத்தலால் ஒருவாறு அதன் வாய்ப்பட்டு 'சுருங்கச்சொல்லல்', 'விளங்கவைத்தல்' என்னும் நூலின் அழகைத்தழுவி தொடுத்துளது. அடுத்தபடி, சவிஸ்தாரமான கிரந்தம், "அஹ்மதியாஜீவியவிளக்கம்" என்பது, நபீ அவர்களின் அவதார ஆவசியகம், அவதாரம், வளர்ப்பு, விவாஹம், இயற்கை ஒழுக்கம், அவர் சுயமான விஷய ஆராய்ச்சி, தெய்வபக்தி, மதப்பிரவர்த்தகம், அவர் காலத்தில் அற்புதங்கள் முதலான பரிபூரணமான விஷயங்களை, சிறந்த அறபியாதி பிரபந்த ஆதாரங்களுடன் செவ்வனே வகைவகை

யாய் விளங்கக்கொண்டு, சில தினங்களுக்குள், பல பாகமாய் வெளிப்போதரும்; தயவுசெய்து கவனித்துக்கொண்டுவாருங் கள். அதில் பரக்கக்கண்டு "அறம்பொருளின்பம் வீடடைத லூற்பயனே" என்ற பொதுலக்ஷணத்தின்படி, சர்வ சௌபாக்கி யங்களையும் நமது குருநாதர் அருளால் எளிதிலடையப்பெற லாம். நிற்க, இப்பிரபந்தத்தின் வசனப்போக்கும், பதவமைதி யும் 'தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்த' லென்ற உத்திவியா கரணத்தினை யனுசரித்து, நம்மதத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப, பல பாஷா சப்தங்களையும் ஒருசார்தழுவி, கட்டமைந்த கருத்தும், நடையும் போதுமான திறமாய் விளங்கா நிற்கு மாறு, விதம்விதமாய்மாற்றி ஓர்வரம்புடன் வரைந்திருக்கிறதை, பிறர் குற்றங்காணு குணமுடைமாந்தர் பொறுப்பாராக.

இனி, நபீ அவர்களுக்கு தங்கள் சிஷ்யர்களைப் பாதுகாக் கும் கடமையும், இஸ்லாமைப் பரவச்செய்யும் கடமையும் முக் கியமாக ஏற்பட்டபடியால் நபீ அவர்கள் சத்துருக்களினின்றும் தப்பித்துக் கொள்வதற்காக ஸ்ரீமத் மூசாநபீ, ஸ்ரீமத் ஈசாநபீ அவர்களின் முன்னறிக்கைப்படி பட்டயத்தை திருக்கரமேந்த நேர்ந்தது. இதற்கு அநுகுணமாகவே, கடவுளுடைய கட் டளையும் கீழ்வருமாறு பிறந்தருளியது. அதாவது "எந்தசாதுக் களுக்கு விரோதமாக குழப்பம் நாடப்படுகின்றதோ அந்தசாதுக் களுக்கும், அக்குழப்பத்தைத் தொலைப்பதன் நிமித்தம், யுத்தம் செய்ய உத்தரவு கொடுக்கப்படுகின்றது ஏனெனில் சாதுக்களை கடும் அநியாயத்திற்கு உள்ளாக்கினார்கள். அவர்களை நிஷ்காரண மாய் அவர்தம் இருப்பிடத்தை விட்டும் நீக்கினார்கள். இந்த சாதுக்களோ, நமது கர்த்தர் அல்லா ஒருவரே என்று மாத்திரம் பிரஸ்தாபித்திருந்தார்கள்." இவர்களைத் தாக்க பகைஞர்கள் படை திரட்டி மதீனாநகரைநோக்கி அட்டகாசத்துடன் இரைந் துக்கொண்டு வரவும், மேற்கூறிய கற்பனையின்படி நபீ அவர் களும் எதிர்த்துப் போராட வேண்டியதாயிற்று.

அப்படியே கி. பி. 624 - வது ஹு ஹிஜ்ரீ 2 - வது ஆண்டில் பதர் யுத்தம் தொடர்ந்தது. இதில் எதிர்கக்ஷிகளை முறியடித்து

முஸ்லிம்கள் மக்காவுக்குட் பிரவேசிக்கவும் கஃபாவில் ஹஜ்ஜு வணக்கக்கடமையை நடத்தவும் அநுகூல மடைந்தனர். ஹிஜ்ரீ 3-வது சம்வத்சரம் உஹுத் சண்டையில் நபீ அவர்களின் சிறியதந்தையரான ஸ்ரீமான்அமீர் ஹம்ஸா என்பவர் வீரசுவர்க்க மடைந்தனர். ஹிஜ்ரீ 5-வது ஆண்டு கந்தக் யுத்தத்தில் முஸ்லிம்கள் சார்பாய் ஜயங்கண்டது. இவ்விதமாகவே ஹிஜ்ரீ 6, 7, 8-வது வருடங்களில் நடந்த யுத்தங்களிலும் முஸ்லிம் களுக்கே வெற்றிகிடைக்கவும், ஹிஜ்ரீ 9-வது வருடத்தில் மக் காநகரைப் பிடித்துவிட்டார்கள். கஃபாவிலிருந்த 360-விக்கிர கங்களும் பங்கமுற்றன. தீர்மானமாய் ஹிஜ்ரீ 10-வது ஆண்டு, அறபியா நாடுமுழுவதும் முஸ்லிம்கள் கைவசமாய் விடவே, கணக்கற்றபிரஜைகள் இஸ்லாமதத்தைக் காதலோடும் தழுவிக் கொண்டனர்.

'போய் அழிந்து மெய்யே நிலைநிற்கும்' என்றதற்கொப்ப, விக்கிரக ஆராதனை நிலைகுலைந்து இஸ்லாமியம் பரவியது. திரு மக்காநகரை ஜயித்தவுடன் நபீ அவர்கள் மக்காநகர்வாசிகளை நோக்கி அநுதாபப்பட்டு, "சத்தியத்தை போதிக்க வந்த என் னைப் படாதபாடுபடுத்தி தூஷணித்து தொந்தரைக் குள்ளாக் கினதோடு கொலைபுரியவு முயன்றீர்கள். உண்மையான ஒரு மெய்க்கடவுளின் மார்க்கத்தையநுசரித்த என் சிஷ்யர்களுக்கும் பற்பல தண்டனையியற்றி அவர்களை வதைத்தது கொஞ்சநஞ்ச மன்று. அதுவுமன்றி, களங்கமில்லாத அவர்களைக்கடினமாய்த் தேசத்தைவிட்டும் அப்புறப்படுத்தினீர்கள். மென்மேலும் என து தெய்வசங்கத்தை வேருடன் கெடுக்க அடங்கொண்டீர்கள். ஆயினும், ஆபத்தில் ஆன்ம ஆப்தராயிருக்கிற அல்லாஹுத்த ஆலாவின் கிரியைகளை இப்போது நிதரிசனமாய்க் கண்டீர்களா! சரி, இனிமேல், யான் எங்ஙனம் உங்களனைவரோடும் நடந்துக் கொள்வது?" என்று வினவ, மக்காஜனங்களும், 'ஆம், சந்தேக மின்றி சொல்லொணாத அக்கிரமம், செய்தோம்; ஆகையால், இப்பொழுது எங்களை அடியோடு அழித்துவிடவும் தாங்கள்

வல்லமை பெற்றிருக்கிறீர்கள்; என்றாலும் நாங்கள் இப்பொழுது சகோதரத்தன்மையையும், ஐக்கியத்தையுமே வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்' என்றனர். இதைக்கேட்டு நபீயவர்கள், அவர்கள் பொருட்டுமெத்தவும் கிருபைகூர்ந்து, "ஐயோ! வீணுக உதிரம் சிந்தினீர்கள்; ஆகவே, நான் இந்தசந்தர்ப்பத்தில், எனது பிராதா ஸ்ரீமத் யூசுப் நபீ அவர்கள் தம் சகோதரர்களுக்குக் கற்பித்தருளியதையே உங்களுக்கும் பகிரங்கஞ்செய்கிறேன்; இன்றுமுதற் கொண்டு உங்களுக்கு யாதொரு கண்டிப்புமில்லை. பரமதயாளப் பிரபுவான கடவுளே உங்களை மன்னிப்பாராக; சகலரையும்விட அவரே கருணைகாட்டுகிறவர்; அளவிலா அருட்பெருங் கடலாவார் அவரே யாகும். ஆனதால், உங்கள் எல்லாருக்கும், நம் நாயனுகிய அவர், என்மூலமாய் சுதந்தரம் பாலித்திருக்கின்றார். அஞ்சவேண்டாம், போங்கள்" என்று ஆனந்தபரவசராய் அறைந்தனர்.

இந்த அமிர்தவாக்கை செவிசாய்த்த ஜனங்கள், உள்ளம் பூரித்து, நபீ அவர்களின் உத்தமகுணத்தில் ஈடுபட்டு அர்ப்பணமாகி, யாவரும் ஒருமித்து நபீ அவர்களை விசுவாசித்து இஸ்லாமியர்களானார்கள்.

இந்தப் பிரகாரமாய் தொடக்கத்தில் மக்காவாசிகளும், பின் அறபியாதேசம் அடங்கலு முள்ள ஜனங்களும் கூட்டங் கூட்டமாய் வந்து இஸ்லாமியத்தை அங்கீகரிக்கலானார்கள்.

அப்பால் கி-பி. 632-வது வருடத்திற்குச் சரியான ஹிஜ்ரீ 10-வது ஆண்டின் அந்தியத்தில் வழியனுப்பு ஹஜ்ஜின் 81-நாட்களுக்குப்பின் மஹாங் முஹம்மத் நபீ அவர்கள், தாம் உலகத்துக்குவந்த காரியத்தைப் பூரணமாய் நிறைவேற்றி 63-வது வயதில், திருமதீனு நகரில், அல்லாஹுதஆலாவின் நோக்கத்தின்படி, அவர் அழைப்புக்கு சந்தோஷமாய்ப் போய்ச் சேரலாயினர்.

திருமக்கா மஹாஜனங்களுக்கு மஹாந்முஹம்மத் நபீயவர்களின்

# முதற் பிரசங்கம்.

மஹாந் முஹம்மத் நபீ அவர்களை 40-வயது வரையில், மக்காவாசிகள், அவருடைய இயற்கை ஒழுக்கத்திலும், செயற்கை வழக்கத்திலும், கிரமவொழுக்கமுடைமை, தேவமானுஷிய கடனுடைமை, நன்னடையுடைமை, புண்ணியசீல விர்த்தியுடைமை, சுவதந்திரமுடைமை, கற்புடைமை, ஜனுசாரமுடைமை, மதாநுஷ்டானதிருத்தமுடைமை, நீதிநெறியுடைமை, அறனுடைமை யாதி நற்குணவரிசைகளைக் கண்டு, பெறலரும் புனிற்றிளம் பாலனைப்போல் மதித்து, சீர்கேடா பக்தனென்றும், சிறந்தவாக்குத் தூயனென்றும் பொருட்படும் அறபி மொழிகளால் புகழ்ப்பட்டஞ் சூட்டி அழைத்து வந்தனர்.

மஹாந்அவர்களுக்கு 40-வயதுபூரணமாகி, நபீபட்டத்தை வகித்த இரண்டு வருடங்களுக்குப் பிறகு, கடவுளிடமிருந்து "ஓ என் தூதரே! உம்மை நெருங்கியுள்ள சுற்றத்தார்களுக்கு எனது உக்கிரமான கோபாக்னியைக் குறித்து அச்சம் பூட்டும்" என்ற கட்டளை கிடைத்தபொழுது, நபீ அவர்கள், அன்றையத்தினமே மக்காவிலுள்ள "சபா" என்னும்பெயர்கொண்ட மலையின் சிகரத்தி லேறிநின்று தம்கோத்திரத்தைச் சார்ந்த சர்வகுடிகளையும் வம்சாவளியாகப் பெயர்கூவி யழைத்தார். இந்த சப்தத்தைக் கேள்வியுற்ற சகலரும், இதோ அப்துல்லாவின் குமாரரான நமது சத்தியவந்தன் நம்மைக்கூப்பிடும் கூக்குரலுக்குச் செவிசாயுங்கள் என்றேத்தி ஒருவரை யொருவர் முந்திக்கொண்டு மலையடிவாரம் வந்துவந்தீண்டினார்கள். திரளான ஜனங்களைக் கண்ணுற்ற நபீ அவர்கள், "ஜனங்களே! இதோஇந்தப்பர்வதத்திற்குப் பின்பக்கமாய் அதிவிக்கிரமனை ஒருசத்துரு உங்களைக் கொலைசெய்ய விரும்பி ஒளித்திருக்கின்றனென்று இச்சமயம் நான் உங்களுக்குச் சொல்வேனுனல்

நீங்கள் என் வார்த்தையை மதித்து நம்புவீர்களா ! அல்லது அன்று"! என, சர்வர்களும் ஒருமனதுடன் ஐக்கியமாக 'நாங்கள் இதுகாறும் உம்முடைய நாவினின்றும் எப்போழ்தேனும் யாதொரு பொய்யும் வெளிப்படக் கேட்டிலோம்; ஆகையால் இப்போது அப்படி உமது வாய்வழி வருமானல் மெய்யாக நாங்கள் நம்புவோம்' என்று விஞ்ஞாபனம் பண்ணினர்கள். அப்பொழுது நபீ அவர்கள் மிகசாந்தமாய், "சரி, நீங்கள் என் வார்த்தையில் நிச்சயபுத்தி வைத்திருப்பது உண்மையானல் இதோ நான் உங்களுக்கு விளம்புகிறதைக் கேளுங்கள். என்னை இதுவரை நீங்கள் அப்துல்லாவின் புத்திரனென்று சொல்லி வந்தீர்கள், ஆம்; அத்துடன், நான் சர்வலோகத்துக்கும் வந்துள்ள முடிவான தீர்க்கதரிசியாயும் இருக்கின்றேன். கடவுள் இப்பதவியை எனக்கு அருளியிருக்கின்றார் என்பதை இன்று தினம் உங்களுக்கு நான் தெரிவிக்க சந்தோஷிக்கின்றேன். ஆகையால் உங்கள்மீது இனி விஷயமாகப்போகிற கடவுளுடைய தண்டனையைக்குறித்து அதுவருவதற்கு முற்படவே உங்களை நான் எச்சரிக்கின்றேன். ஒரே மெய்க்கடவுளிடத்தில் நீங்கள் விசுவாசம் வைப்பீர்களானல் கடவுளின் கோபம் உங்களைவிட்டு அகன்றுபோய்விடும்; அல்லவென்ருல், அவருடைய சித்தத்திற் கிலக்காகி நீங்கள் எல்லாரும் ஒருமிக்க அழிந்து நாசமுறுவீர்கள்" என்றனர்.

இதற்குச் செவிகொடுத்த மகாஜனங்கள் யாவரும் அந்த நிமிஷமே படுபோய்யன் என்று பழிக்கத்தலைப்பட்டனர். அவருடைய சிற்றப்பனை அபூலஹப் என்பவன், 'பைத்தியக்காரன்; விருதாவில் கத்துகிறன்', என்று வைது நபீ அவர்களைக் கல்லெடுத்தெறிந்தது மல்லாமல், "நாளெல்லாம் உனக்கு தீமையாகவே லபிக்கக்கடவது" என்றும், "இதற்குத்தான, எங்களை ஒன்றுசேர இங்கு தருவித்தாய்" என்றும் வெந்தெரிந்தனன்.

நபீ அவர்கள் அதற்குப் பிரதியுத்தரமாக, "மெய்யாகவே நான் பொய்யனுயிருந்தால் உங்கள் கைக்குள் அகப்பட்டு

மாண்டுபோவேன், என்போதனைகளும் நித்தியமாய் ஜீவித்திருக்கமாட்டா; இதோ சற்றுநேரத்திற்கு முன்பு என்னை எப்படி மதித்தீர்களோ, அவ்விதமே என்காரியம் சித்தியடையுமளவும் என்னை மதிப்பீர்கள் என்பதாக, கடவுளருளால் தெரிந்து நான் உறுதிகூறுகின்றேன். ஆனாலும், கடவுளே! இவர்கள் உமது ரசூலை இன்னானென்று உணர்ந்துக்கொள்ளாமல் செய்யுங் குற்றங்களை மன்னித்தருளும், இவர்களுக்கு நல்வழி காட்டி ரக்ஷியும்" என்று பிரார்த்தித்துத் திரும்பினார்.

இந்த உபந்நியாசத்தால் நபீ அவர்களின் வாக்குச் சாதுரியமும், துன்பத்தைச் சகித்து ஜனங்களின் நிமித்தம் பச்சாதாபப்பட்டு, அவர்களுக்காக கடவுளை வேண்டிக்கொள்ளும் மாதிரியும் நன்கு விளங்குகின்றன.

## திருமதீனா மஹாஜனங்களுக்கு மஹாந்முஹம்மத் நபீ அவர்களின்

# முதற் பிரசங்கம்.

ஹிஜ்ரீ வருஷத்தொடக்கத்தில் மஹாந் முஹம்மத் நபீ அவர்கள் தமது மதுரவாக்கால் திருமதீனா நகரில்செய்த உபந்நியாசத்தை இதனடியில் தருகுவாம்.

"ஜனங்களே! நீங்கள் இவ்வுலகத்தை விட்டுவிடுவதற்கு முன்னரே உங்கள் கணக்குக்கென்று நன்னடக்கையின் சய்பத்தைக் கடவுளிடம் ஒப்படைத்திரவியமாக அனுப்பிச் சேர்த்துவையுங்கள். கடவுள்மேல் பிரமாணிக்கமாய் பிரசித்தஞ் செய்கிறேன். திட்டமாகவே நீங்கள் ஒவ்வொருவரும் மகாபயங்கரமான துயரத்துக்குட்படநேரலாம். அமோகமான ஆட்டு மந்தைகளை வைத்துப் போஷிக்கிற ஒருவன் தன் நம்பிக்கையும், அவ்வாடுகளும், அவனது பிரிவுகாலத்தில் அவனுக்கு வீணாய்ப் பிரயோசனமில்லாமற்போக, எவ்விதம் விட்டுப்போவானோ, அவ்விதமாக நீங்களும் சதமற்ற இப்பிரபஞ்சப்பற்றைச் சீக்

கிரமே விட்டுப்பிரிந்துவிடுவது நிச்சயமென்பதை உறுதியாய் நம்புங்கள். 'சந்தேகமன்றி கடவுள் உங்களில் எவரிடத்திலும் நேர்முகமாய் வார்த்தையாடுவோர்; அவ்விடம் உங்களுக்கு யாதொரு துவிபாஷிகனும் இரான்; உங்களை மறுத்துத்தடைசெய்கிற யாதொரு காவற்காரனையும் நீங்கள் காணமாட்டீர்கள்; அப்பொழுது கடவுள் உங்கள் ஒவ்வொருவரையும் நோக்கி, நமது தூதர்களில் எந்தத் தீர்க்கதரிசியாவது உன்னிடத்து வந்திருக்கவில்லையா? அவர் நமது ஆட்சிவகைகளை உனக்குத்தெரிவித்திலையா? நமது வழியில் செலவிடுதற்காமென்பதாக நாம் உனக்குப் போதுமானசெல்வத்தை அனுக்கிரகித்ததின்று? நீ உன்சகஜாதியோடு தயவாயும் சாந்தமாயும் நடந்துகொள்ளும்பொருட்டு நாம் உனக்கு தோன்றுத் துணையா யுதவ வில்லையா? இப்பொழுது நீ உந் தனக்கு அநுகூலமாக இவ்விடம் அனுப்பிவைத்துக் கொண்ட சார்புகள்யாவை, காட்டுவோயாக?' என்று விசாரிப்பார். நிஜமாகவே மனிதன் அச்சமயம் தன்வலம் இடம் விழித்துத் தான் ரூபித்தற்கு யோக்கியதையான யாதொரு செம்பொருளும் தென்படா திருக்கக்கண்டு எதிர்நோக்குவான். தீர்ப்பாக, நரகமன்றிவேறுயாதொன்றும் அவனுக்குப் புலனாகாது. ஆகவே, யாது நீதி நன்மை தேடா நிர்பாக்கியனு யிருந்தபோதிலும் தன்னுலியன்ற மட்டுமாவது கொழுந்திட்டெரியும் அவ்வக்கினிவாதனையினின்றும் தன்னைத் தற்காத்துக்கொள்வதற்காக பேரீச்சம்பழத்தின் ஒருபாதி பிளப்பையாவது கடவுள் பாதையில் செலுத்தி ஏன் ரக்ஷித்துக்கொள்ளக்கூடாது? இதுவும் கொடுக்கச் சக்தியற்றவன் எவர் விஷயத்திலும் பேதா பேதம் பாராட்டாது இனிய நன்மொழி பயின்றுவது தன்னைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடாதா? ஏனென்றால் உண்மையாக மறுமையில், ஒரு நன்மைக்கு ஒரு பதின்மடங்கு, மேலும் நூறெழுபதின் மடங்கு சன்மானம் வழங்கப்படும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க

ஆவல் கொள்ளுகின்றேன். கடவுளது காவலும், கருணையும், சௌபாக்கியமும் சந்ததமாய் உங்கள்மீது பொருந்தி வருவதாக."

இவ்வாக்கின் தாத்பரிய சாரத்தையும், அதன் அமிர்த ரச மொழிகளையும் கவனித்துப்பாருங்கள். இதில் மனிதன் அடையும் மாளர்முடிவும் ஈயாதவனுக்கு ஈந்தருளிய இனிய போதனையும் வெள்ளிடைமலை விளக்கமனைய வெளியாகா நிற்ப, நந்தம் ரத்தக்கலப்போடு தயாளமாயும் ஐக்கியமாயும் இருக்க வேண்டியபான்மைக்கொப்ப கடவுளதுசகாயத்தைச் சிந்தித்து வரும் பெருமையை கற்பிக்கின்றது. இதனாலன்றோ இற்றைக்கு 5430-ஆண்டிற்கு முன் வந்த ஸ்ரீமத் தாவூத் நபீ அவர்களும் "வரப்போகிறார் ஒருவர், அவர் திரு அதரத்திலிருந்து பெருகும் வசனாமிர்தத்தைப் பருகுவதற்காக ஆகாய மண்டலத்தைச் சூழ்ந்து தேவதூதர்கள் வந்து கூடுவார்கள்" என்று மங்களகீதம் பாடியுள்ளார்.

திருமக்கா நகரில் மஹாந் முஹம்மத் நபீ அவர்களின்

# சரமப் பிரசங்கம்.

ஹிஜ்ரீ பத்தாவது வருடம், மஹாந் முஹம்மத் நபீ அவர்கள் தம் கடமையான "ஹஜ்ஜு" வணக்கக் கிரியைகளைச்செய்து முடிக்கச் சித்தங்கொண்டு திருமதீனா நகரைவிட்டு திருமக்காவுக்கு எழுந்தருளினார். அவரோடுகூட அறபியரில் பற்பல கோத்திரத்தாருஞ் சேர்ந்து லட்சம் ஜனங்களுக்கதிகமாகவே புறப்பட்டார்கள். எல்லாரும் திருமக்கா நகர்வந்தடைய, அச்சமயம் நபீ அவர்கள் மஹா ஜனங்களிடம் சம்பாஷித்துக் கொண்ட அருமையானவசனங்களின் ஜாடையானது, உயிர்த் தோழரிருவரில் ஒருவர் மற்றவரை விட்டுப்பிரிந்து போகும் போது பிரிவாற்றாமைக்காக எவ்வளவு துக்காக்ராந்தராய் விடை அரிதிற் பெறுவாரோ அத்தன்மையை யொத்திருந்

தது. காரியமும் அவ்வண்ணமே முடிந்தமையால் அவ்வருஷத்திய ஹஜ்ஜு கொண்டாட்டத்தை "வழியனுப்பும் ஹஜ்ஜு" என்ற பெயரால் அழைக்கலாயிற்று.

இந்நாளில் நம் அருமை ரட்சகர் செய்த கடைசி வுபந்நியாசமானது ஸ்ரீமத் மூசாநபீ அவர்கள் உன்னதமான பர்வதத்திலேறி தம் ஜனங்களை முன்னோக்கி வாக்குறுதி கேட்டதற்கு சமானமாகச் சொல்லலாம். அன்றையத்தினம், நபீ அவர்கள் தமது சிஷ்யர்களுக்கு வழக்கப்படி உபதேசித்துப் பின், மஹா ஜனங்களை நோக்கி,

"ஓ பிரஜைகளே! நாம் யாவரும் வியர்த்தமாக சிருஷ்டிக்கப் படவில்லை. உங்களில் எவராவது ஒருவர் ஆக்ரோஷங்கொண்டெனக்குமுன் எழுந்துநின்று இதைஆசங்கை செய்ய வுன்னினும் நிச்சயமாக அவர்மனம் அவரை சம்மதிக்கவிடாது. ஒருவேளை அடுத்தவருடம் என்னை இவ்விடத்தில்காண்பது அசாத்தியமாகலாம். என்றாலும் யான் உங்களை கதியற்றவர்களைப்போல் அநாதையாக விட்டுப்போகாமல் சிரஞ்சீவியாய் உங்களது மங்களம் அழியாமலும் மாறாமலும் நிலைத்திருக்கக் கூடியதற்கு அநுகுணமாய் அல்லாஹுத் தஆலாவின் அருள்வேதமாகிய திருக்குறுஆனையும், எனது உபதேசவாக்கியங்களையும், உங்களுக்கு உயிர்த்துணையாக வைத்துப்போகிறேன். இவ்வுலகமானது பயிரிடும் ஒருவயலுக்குச் சமானமே. திருக்குறுஆனையும் என்வாக்கையும் பின்பற்றி நன்மையையே பயிரிடுங்கள். அறுவடைகாலம் சமீபத்திலிருக்கிறது, நன்மையைத் தூவினவன் நன்மையின் பலனையும், தீமையை விதைத்தவன் தீமையின் பலனையுமே தன் களஞ்சியத்தில் அம்பாரங் குவித்துப் பார்த்திருப்பான். அது அவனவனுக்கே சொந்தமானது. ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ள இடம்பெறமாட்டார்கள். கடவுள் ஒருவரே ஒருவர் என்பதையும் அவர் ஒப்பற்றவர் என்

பதையும் அவர் ஒருவருக்கே நீங்கள் கீழ்ப்படிந்து வணங்கவேண்டுமென்பதையும் உங்கள் இருதயத்தில் ஸ்திரமாய்ப் பதியச்செய்து அதையே ஊக்கமாய்ப் பிடித்து ஒழுகுங்கள். மறுமை உண்டென்ற நம்பிக்கையும் உங்களை விட்டு நீங்கவேண்டாம். அருவருப்பான சேவகத்தைவிட்டு நீங்கி கடவுளுக்கு யுக்தமான வணக்கத்துக்கு பண்பட்டு நடவுங்கள். திருக்குறுஆனை சதா தியானித்து உங்களுக்கு முன்மாதிரியாய்வந்த ரசூலின் ஆசாரங்களைக் கடைப்பிடித்து வாழ்வீர்களாக. நீங்கள் உங்கள் ஸ்திரீகளோடும், உங்கள் ஸ்திரீகள் உங்களோடும் ஒற்றுமையாயிருந்து இருவரும் தயாவிருத்தியையே காட்டிவாருங்கள். மனுஷன் கடவுளுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும், அவன்தனக்குச் செய்துகொள்ளவேண்டிய கடமைகளையும், அவன் தன் சுற்றத்தாருக்குச் செய்யவேண்டிய கடமைகளையும், அவன் சர்வ ஜனங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளையும், அவன் இதரஜீவராசிகளனைத்துக்கும் செய்யவேண்டிய கடமைகளையும் செலுத்தத்தவறுமல் பரிபாலித்துக்கொள்ளக் கடவன். இம்மைக்கும் மறுமைக்கும் முக்கியமான விஷயங்கள் சகலமும் அருள்வேதமாகிய திருக்குறு ஆனிலும், எனது போதனைகளிலும் நிரம்பியுள்ளன. இவை என்றென்றும் நிலைபெற்றிருக்கும்; கண்ணுள்ளவன் பார்த்துக்கொள்ளக் கடவன்.''

என்று சொல்லி, மேலும் ''மஹாஜனங்களே! மறுமை நாளில் கடவுள் உங்களை நோக்கி எனது தூதின் பிரஸ்தாபத்தைச் சுட்டி வினவியருளும்போது, நீங்கள் என்ன உத்தரம் உரைப்பீர்கள்'' என்றுகேட்க, அனைவரும் ஒருமனமாய் ஏகோபித்து 'கடவுளது கற்பனைகளை ஒழுங்கே ஜனசமுகத்தாருக்கு முன்னாக நீர் உபதேசித்தீரென்றும், தூதர்சொல்லவேண்டிய கடமைகளைக் கிரமமாயும் பூரணமாயுஞ் சொல்லிமுடித்தாரென்றும் அறிக்கையிடுவோம் எனப் பெருங்குரலுடன் ஆரவாரித்து விண்ணப்பஞ் செய்தனர்'. அப்பொழுது நபீ அவர்கள் தமது

திருக்கண்களை விசும்பூடுசாத்தி உபயஅஸ்தங்களையும் ஏந்திய வராய் 'அல்லாவே! நீரே சாக்ஷியாக யிருக்கக்கடவீர்; நாயனே! நீரே எனக்கு சான்றாகயிரும்; கடவுளே, உம்மையே நான் பிரமாண்யமாய்க் கோருகிறேன்' என்றிசைத்து நிறுத்தினர்.

அப்படியே அறபாவின் சுபதினமாகிய வெள்ளிக்கிழமை யன்று நபீ அவர்களுக்கு தம் கர்த்தாவிடத்திலிருந்து கீழ்க் கண்ட கற்பனையுங் கிடைத்தது.

**"இன்றுதினம் உமக்கு உமது மார்க்கத்தைப் பூர்த்தி செய் தேன்; உமதுமேல் எனது கருணையை சம்பூரணமாக்கினேன்; உமது சமயமாகியஇஸ்லாமை அங்கீகரித்தேன்"** என்பதாம்.

இவ்வசனங்களினால் நபீஅவர்கள் தம்தூதின் காரியம் சித்திபெற்றதெனவும், உலகத்தில் தாம் வந்த ஏற்பாட்டை எழில்பெற நிறைவேற்றினோமெனவும் திருப்தியடைந்திருக்க, கடவுளிடம்சேரும் விருப்பம் நாளுக்குநாள் அதிகரித்தலால், அவ்வாறே, மேற்கண்ட கற்பனைகிடைத்த 81-நாட்களுக்குப் பின் திருமதீனா நகரில் லௌகிகபான்மையாய் தமது தேகம் என்னும் பரிசுத்த அங்கியைக் கழற்றி பரமாநந்தம் புக்கனர். நபீஅவர்கள் செய்த இந்தக்கடைசி பிரசங்கத்தில் நம் நடக் கைக்கு வேண்டிய சகல அம்சங்களும் பொதிந்திருக்கின்றன வென்பதை யாவரும் பிரத்தியட்சமாய்க் கண்டுகொள்ளலாம்.

மஹாங் முஹம்மத் நபீ அவர்களைப்பற்றி

## ரூம்தேசத்து அதிபதியின் விசாரணை.

ஹிஜ்ரீ 6-வது வருடம் 'ஹுதைபிய்யா' உடன்படிக்கைக் குப் பிறகு, நபீ அவர்கள் மிகப்பெயர்போன பற்பல தேசமன் னர்களுக்குந் தனித்தனியே இஸ்லாமார்க்க அழைப்புப்பத்தி ரம் எழுதிவிடுத்தனர்; அப்படியே அக்காலத்தில் ரோமபுரியை ஆண்டு வந்த 'ஹிர்கில்' அரசனுக்கும் ஒருலிகிதம் வரைந்து **"வஹ்யகல்பி"** என்பவர்கையில் கொடுத்து செலுத்திவரும்படி

அனுப்பி வைத்தார். அந்நாட்களில் மேற்படி அரசன் பரிசுத்த தேவாலய தரிசனைக்கென்று புறப்பட்டு எருசலேம் நகருக்கு வந்திருந்ததையறிந்த தூதுவர்நிருபத்தைப் பெற்றுக்கொண்டு எருசலேம் போய்ச் சேர்ந்து அரசனிடம் லிகிதத்தை ஒப்படைத்து நின்றனர். அரசன் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்க்க கீழ்கண்ட விஷயத்தைக் கண்ணுற்றான்.

"காருண்யம் தயைநிறை கடவுள் நாமத்திலே இதை ஆரம்பிக்கின்றேன்.

ரோமபுரிக்கு இறைவனான ஹிர்கில் பிரபுடீகனுக்கு,
அல்லாவின் தாசனும், சமாதியுமாயுள்ள முஹம்மத்
எழுதிக்கொண்டது என்னவென்றால்

செம்மைநலம் அறிந்து நடக்கிற மனிதன்மீது எனதுவாழ்த்து இருப்பதாக.

உம்மை நான் இஸ்லாமியத்தை அங்கீகரிக்கும் பொருட்டு அழைக்கின்றேன். அவ்வண்ணமே நீர் கடவுளின் மார்க்கத்தைச் சம்மதித்து இஸ்லாமாகிவிட்டால் வரப்போகிற பயங்கரமான தேவகோபாக்கினிக்குக் காப்பாற்றப்படுவீர். மேலும் கடவுள் உமக்கு இரட்டத்தனை புண்ணியம் தந்தருளுவார். ராஜாவாகிய நீர் இதனை மறுப்பீரானால், பரிதாபகரமான உமது பிரைஜகளின் பாபங்களும் உம்மையே பீடித்து நிற்கும். உங்களெல்லவருக்கும் போதிக்கும்படி கடவுள் என் மூலமாய், நம்மெல்லாருக்குமாக அருளிய *இவ்வாக்குகளை நிதானயோசனையுடன் வாசித்துப்பாரும்."

அரசன் இவைகளைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்து தம் சேவகர்களில் இருவரைக் கூப்பிட்டு அவர்களை

---

*"ஓ, வேதாகமபண்டிதர்களே! நமக்கும் உங்களுக்கும் மத்தியில் சம்பந்தப்பட்டுள்ள ஒரு விஷயத்தை யுத்தேசித்து சம்பாஷித்துக் கொள்ளுவோம், விரைந்து வாருங்கள். அவ்விஷயமாவது, நாம் கடவுளைத் தவிர வேறெவரையும் பூஜிக்கலாகாதென்பதுவும் அவரோடு மற்றியாரையும் இணையாக சேர்க்கலாகாதென்பதுவும், நம்மில் நின்றும் சிலர்,கடவுளாகாரைக் கடவுளென்று கூறுவதுபோல், நாமும் அவரைக் கடவுளென்று தீர்மானிக்கலாகாதென்பதுவுமாம். அப்புறம் அவர்கள் நிராகரிப்பார்களேயானல்;—முஸ்லிம்களே! நாங்களோ எங்கள் ஆண்டவரின் கட்டளைக்குச் சிரம்தாழ்த்தி நிற்கின்றேம் என்று இசைத்து விடுங்கள்."

நோக்கி, 'அறபியாவிலிருந்தும் அநேக ஜனங்கள் இந்நகருக்கு வர்த்தக விஷயமாய் வந்துபோவ துண்டு. தற்சமயம் அப்படி யாராவது வந்துள்ளாரா? தேடிப்பாருங்கள்; தென்பட்டால் அவர்களில் சிலரை நான் கூப்பிடுகிறேனென்று கூறி, விரைந்து சென்று அழைத்து வாருங்கள்' என்றேவினன். அப்படியே சேவகர்கள் பட்டணத்துக்குள் வந்து வுசாவ "அபூசுப்யான்" என்பவரும் அவரைச்சேர்ந்த சகபாடிகளும் வந்திருப்பதாகத் தெரிந்து நேரிற்போய்க் கண்டு 'நமதரசன் உங்களை அழைக் கிறார், ஆதலால் உடனேபுறப்பட்டு வாருங்கள்' என்ன, அவர்க ளெல்லாரும், அவ்வாறே ராஜகட்டளைக் குட்பட்டு அரசன் சமுகம் வந்துசேர்ந்தனர். அரசன் அவர்களை நோக்கி, "ஓர் செய்தி விசாரிக்கவேண்டுகிறேன்; உங்களுக்குள் யாரைத் திற மையாய் விடைபகருந் தலைவனாக்கிக்கொள்ளச் சம்மதிக்கின் றீர்கள்" என்ன, அவர்கள் அபூசுப்யானையே சுட்டிக்காட்டினார் கள். அதன்மேல் அரசன் அபூசுப்யானைத் தனக்கெதிரே நிற்கச் செய்து, மற்றவர்களை அபூசுப்யானுக்கு வலமிட பாரிசமாய் வரிசையாக நிறுத்தி பின்வருமாறு கட்டளை பிறப்பித்தான்.

"இதோ எனக்கெதிரே நிற்கிற உங்கள் தலைவனிடம் ஒரு விஷயத்தைக் குறித்துக் கடாவப்போகிறேன்; அவன் அதற் குச் சொல்லும்விடைகளைத் தழுவியுள்ள அம்சம், உங்களுக் குந் தெரிந்திருக்கலாம்; ஆனபடியால், அவன் உரைக்கும் உத் தரங்களில் யாதாமொரு பொய்யிருக்கிறதாகத் தெரிந்தால், நீங் கள் எனக்கு அறிவிக்கும் குறியாக சற்றேனும் பின்தாங்கா மல் அவன் செவிளைப் பேர்த்து அவன் பற்களை யுடைத்துப் போடவேண்டும்; நீங்களும் மௌனமா யிருந்துவிட்டால் பின் எனது காடாக்கினைக்கு உள்ளாவீர்கள்" என்று கட்டளை யிட் டான்.

இந்த ராஜகட்டளையைக் கேட்டவர்களனைவரும் நடுநடுங் கினவராய்த் திகில்கொண்டு ஒருவாறு உடன்பட, அரசன் அபூ சுப்யானிடம் கீழ்க்கண்டவிதம் வினா போடலுற்றான்.

**ஹிர்கில் அரசனுக்தும் அபூசுப்யானுக்தும் மத்தியில் நடந்துள்ள சம்வாதம்.**

1. *ஹிர்கில்—முஹம்மத் வம்சம் எப்படி?*

*அபூசுப்யான்—தாய்தந்தைய ரிருவழியாலும் மேன்மை யான உயர்குலத்தைச் சேர்ந்தவரே.*

2. *ஹிர்—அவருக்கு முன் அவரது ஜாதியாரில் எவரேனும் தீர்க்கதரிசி பதவிக்கு தாவாசெய்து வெளிக் கிளம்பியுள்ளாரா?*

*அபூ—இல்லை.*

3. *ஹிர்—அவருடைய மூதாதைகளில் எவரேனும் இராஜ பதவியை வகித்திருந்தனரா, இன்று?*

*அபூ—இல்லை.*

4. *ஹிர்—எப்படிப்பட்ட ஜனங்கள் அவருக்கு வழிப்பட்டு வருகின்றனர். ஏழைகளா, பிரபுக்களா?*

*அபூ—இடுக்கண் அநுபவிக்கிற ஏழைகளும், மிகுதரித்திர தாரிகளுமே யாவர்.*

5. *ஹிர்—அவரது கூட்டம் நாளுக்குநாள் அபிவிர்த்தியடைந்து வருகின்றதா அல்லது குறைந்துபோகின்றதா?*

*அபூ—கிரமங் கிரமமாய் விர்த்திக்குமேல் அபிவிர்த்தியே பெற்றுவருகிறது.*

6. *ஹிர்—இஸ்லாமியத்தை அங்கீகரித்த ஒருவன் பின் அதை அசம்மதங்கண்டு மதப்பிரஷ்டனாவதுண்டா?*

*அபூ—முஹம்மத் மார்க்கமாகிய இஸ்லாமியத்திற் சேர்ந்து, பின் அம்மதத்தைக் கெட்டதென்றும் பயனிலதென்றுஞ் சொல்லி கைவிட்டு பக்க மாறும் பதிதன் ஏற்பட்டதே இல்லை.*

7. *ஹிர்—தீர்க்கதரிசி பதவிக்குரிய விவாதத்திற்கு முன், நீங்கள் அந்த மனுஷனை எதுவிஷயத்திலாவது பொய் சொல்லக் கேட்டதுண்டா, இல்லையா?*

அபூ—அவர் எப்போதும் பொய் புகலாதவர்.

8. ஹிர்—எப்போதாவது வாக்குத்தத்த விரோதம் பண்ணு கிறாரா, அன்று?

அபூ—ஒருக்காலும் அப்படிச் செய்கிறதே யில்லை. வாக் குத்தத்தம் நிறைவேற்றும் புருஷோத்தமரே.

9. ஹிர்—அவருக்கும் உங்களுக்கும் இடையில் எப்போ தாவது யுத்தம் நடந்ததுண்டா?

அபூ—அநேகந் தடவை நடந்திருக்கிறது.

10. ஹிர்—ஜெயித்தவர் யாவர்?

அபூ—சிலசமயம் அவர், சிலசமயம் நாங்கள்.

11. ஹிர்—யுத்தத்தில் எப்பொழுதாவது உடன்படிக்கை செய்து கொள்ளுகின்றாரா, இல்லையா?

அபூ—இதுவரையும் அப்படி யாதொரு ஒப்பந்தமும் நடந்ததில்லை; இனி எப்படியோ பார்க்கவேண்டும்.

12. ஹிர்—எதன் சம்பந்தமாய் உங்களை வற்புறுத்தி ஆக்ஞா பிக்கின்றார்?

அபூ—ஒரே மெய்க்கடவுளைச்சேவியுங்கள் என்றும், முற் பிதாக்களது கேடான கோட்பாடுகளையும், விப ரீத ஆசாரங்களையும் கைவிடுங்கள் என்றும், தர்மம், நன்மை, இரக்கம், மானம், கல்வி இன் சொல், ஒழுக்கம், பக்தி, சமாதானம், அடக்கம் இவற்றினைக் கடைப்பிடித்து நடவுங்கள் என் றுங் கற்பித்துவருகிறார்.

## ஆராய்ச்சி.

இவ்வளவு சம்பாஷணைகளுக்குப் பின்னர் அரசன் அவர் களிடத்தில் தனது உட்கருத்தை பின்வருமாறு அறிவிக்கின் றார்.—நான் ஏற்கனவே, அவர்சார்பாய்க் கேள்விப்பட்டுள்ள விஷயங்களுக்கு ஒப்பாகவே அணுத்துணையும் வித்தியாச மின்றி அபூசுப்யான் சொல்லிவந்தனர்; அங்ஙனமே நீங்களும் ஆமோதித்து நிற்கிறீர்கள்.

1. உண்மையில் உமது முதலாவது விடையின்படி கடவுள் உயர்குலத்தானையே தமக்கு தூதனாகத் தெரிந்தெடுப்பார்; அவ்வாறே இதற்கு முன்னும் நடந்தேறியுளது. இழிகுலத்தானை எடுக்கமாட்டார் என்பதை நான் சம்மதிக்கின்றேன்.

2. உமது இரண்டாவது விடையின்படி அவருடைய சந்ததியில் இதற்குமுன், யாவரேனும் நபீ பட்டத்தினுரிமைக்கு வாதாடினதில்லை. ஆகையால் அவரது அபிமானம் பரம்பரையைப் பின் பற்றினதாகவோ அநுகரணமாயுள்ளதென்றோ சொல்லொணாது.

3. உமது மூன்றாவது விடையின்படி அவர் முன்னோர்களில் எவரேனும் அரசனாகக்கிளம்பியிருந்து பின் இழந்து போயிருந்தால், அதை மீட்கும்பொருட்டும், தேசிய அரசிய பதவிகளை வகிப்ப உத்தேசித்தும் தன்னை தீர்க்கதரிசிஎன்று சொல்லி ஜனங்களை வஞ்சிக்கத் துணிகின்றாரென்னலாம். அங்ஙனம் இல்லாமையால், இவ்விதம் கிஞ்சித்தும் நினைக்க மார்க்கமில்லை.

4. உமது நாலாவது விடையிலிருந்து யூகிக்க, தெய்வ சம்மதத்தின்படி தீர்க்கதரிசிகளுக்கு முதல்முதல் வழிப்படுவது, ஏழைகளும் தரித்திரர்களுமே யாம் என்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன்.

5. உமது ஐந்தாவது விடையின்படி உண்மையாகக் கடவுளது தீர்க்கதரிசிகளின் மதாபிமானிகளே நாளுக்குநாள் வ்ருத்தியடைந்து வருவார்கள் என்பது பிரத்தியட்சம்.

6. உமது ஆறாவது விடையின்படி சத்தியமார்க்கத்தைத் தழுவியவொருவர் நல்லொழுக்கத்தில் அழுந்தி தெளிந்த புத்தியையும் தெய்வ ஞானத்தையும் சம்பாதித்துக்கொண்டால், பிற்பாடு அவர் மனமாறி வேறு மதத்திற்குத் திரும்பக் காரணமில்லை.

7. உமது ஏழாவது உத்தரத்தின்படி எவரொருவர் மானிடர்களிடத்தும் உலக நடவடிக்கைகளிலும், பொய்பேசாத் தூயராயிருக்கின்றாரோ அவர், பகவத் காரியத்தில் எப்படி பொய் புகலுவார்.

8. உமது எட்டாவது மறுமொழியின்படி கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்ட தீர்க்கதரிசி, தீர்க்கமாகவே வாக்கு பிற ழார் என்பதை நான் ஒப்புக்கொள்வேன்.

**9 - 10.** உமது ஒன்பதாவது பத்தாவது ஜவாபுகளின்படி தீர்க்கதரிசியொருவர் ராஜரீக பதவியையும் வகித்திருந்தால், அதன் தர்மத்திற்கிசைய காலாகாலங்களில் யுத்தம் நடத்த வேண்டியது அவசியமாகத்தான் தோன்றும்; நிச்சயமாய் யுத்தத்தில் தீர்க்கதரிசியின் சத்துருக்கள் சிற்சில சந்தர்ப்பங் களில் ஜெயிப்பதுண்டு; ஆனாலும், முடிவில் தீர்க்கதரிசியே வெற்றிபெறுவார்; இது சகஜம். சத்தியமே ஜயம் பெறும்.

**11.** உமது பதினோராவது பிரதிவசனத்தின்படி தீர்க்க தரிசிகள் யுத்தத்தில் பின்னடைந்து உடம்படிக்கைகளுக்கு முந்திக்கொள்வதில் லட்சியம் வைக்கிறதில்லை என்பதையும் நான் தீரத் தெரிந்திருக்கின்றேன்.

**12.** உமது பன்னிரண்டாவது பதிலின்படி தீர்க்கதரிசி யின் சீலங்களும், அவர்கள் ஏவும் பெரிய கற்பனைகளும் பக்திக் குரியனவாயும், கடவுள்வழி படுவனவாயுமேயிருக்கும் என்ப தில் ஆட்சேபனையுமுளதோ!

அரசன் இங்ஙனம் தன் அபிப்பிராயத்தை வெளி திறந்து அவர்களுக்கு முன் உரைத்து லிகிதம் பெற்றுவந்த வஹ்ய கல்பி என்பவரை யழைத்து "தோழனே! நான்முன்னதாக வே, கிறிஸ்துவுக்குப்பின் (பாரகலீத்) அதாவது தேற்றரவாளன் ஒருவர்வருவார் என்பதைத் தெரிந்திருக்கிறேன்; ஆயினும் அவர் அறபியரில் உங்களுக்குள் உதயமாவார் என்பதாக நான் உணர்ந்திருக்கவில்லை; ஆனதால் நான் இச்சமயம் அவருடைய சந்நிதானத்தில் போய்ச்சேரக் கூடுமானால் அவரதுகடாட்சம் எனக்குக் கிடைக்கப் பிரயாசைப்படுவேன் ; மேலும் நான் அவர் முன்னிலையிலிருந்தால் அவரது திருவடிகளை முத்த மிட்டுக்கொள்வேன் என்று ஆர்வமும் ஆநந்தபாஷ்பமும் மீதூரச்செப்பி நபீ அவர்களுக்கு வேறெதுவும் சொல்லாமல்

இங்கு நிகழ்ந்தவைகளையும் இப்பொழுது நான் நவின்ற வசனங்களையும் மட்டும் போய்ச் சொல்லக்கடவாய்" என்று வழியனுப்பி வைத்தான்.

மகா சக்கரேசுர திலகனை இவ்வரசனுக்கு நபீ அவர்கள் எழுதியுள்ள நிருபமும் அதனல் அரசன் எடுத்துக்கொண்ட சோதனையும், அவனது பாரபட்சமில்லாத ஞியாய ஆராய்ச்சியும். முடிவில் நபீ அவர்கள்பால் செலுத்திய அவனது ஒப்பற்ற விசுவாசமும் இக்காலத்தும் இஸ்லாமத ஆராய்ச்சி செய்து வரும் மன்னர்களுக்கும் விசேஷ ஆதாரமாகலாம்.

மஹாந் முஹம்மத் நபீ அவர்களின்

# உபதேசப் பற்று.

மஹாந் முஹம்மத் நபீஅவர்களின் ஜீவிய விருத்தாந்தத்தை ஆதியோடந்தமாய் முற்றும் ஆராய்ந்து பார்த்தவர்கள், அவருடைய தூதின் நோக்கங்கள் உலக சம்பந்தமான கீர்த்தியையும், இன்பத்தையும், பாக்கியத்தையும் தழுவினவை யல்லவென்றும், அவர் பகவான் உத்தரவையே நிறைவேற்ற வந்த ஒருபக்தசொரூபி என்றும் சொல்ல சற்றேனும் பின்வாங்கார்கள். அப்படியே பின்வரும் விஷயங்களும் அதற்குச்சான்ருகும்.

நபீ அவர்கள் நெஞ்சமஞ்சாமலும் சலிக்காமலும் தெய்வ கட்டளையின்படி மகாஜனங்களுக்குப் பிரசங்கித்து வருகையில் அவருக்கு எதிர்வாதியாய் ஏற்பட்டவர்கள் ஒன்றுகூடி நமக்கு மத்தியில் தோன்றிய இந்தநூதனநபீ ஏகாக்கிரசித்தராய் நமது புராதன மதஆசாரத்திற்கு விரோதமாக ஒரு நூதனமார்க்கத்தைக் குறித்து பிரசங்கித்து நமது ஜனங்களை தமது வழியில் உட்படுத்திக்கொள்ளுகிருர். ஆகையால் நமது ஆசாரத்திற்கும் நமது தேவதைகளுக்கும் பங்கம் வந்துவிட்டது. ஆனல் அவர் எடுத்துக்கொண்ட இப்பிரயாசையின் நோக்கம்

என்னவோ தெரியவில்லை! உண்மையில் அவர் உலகக்கீர்த்தியை விரும்பியே இக்கோட்பாட்டைக் கைக்கொண்டவராயின் அவர் உயர்தரகுடும்பத்தில் பிறந்தவரே! உத்தமரே! சற்குண சீலரே! என்பதற் கையமின்று. ஆகையால் அவர்விரும்பியதை அவருக்குக் கொடுத்து நாம் அவரை நமக்கு மேலாக்கி வைத்துக்கொள்வதே மிக உசிதமான காரியமாகும். ஆனாலும் நமது முற்பிதாக்களின் ஆசாரத்துக்கு பின்னம் வாராமலும், நமது பற்பலதேவதைகளுக்கு ஈனம் வாராமலும், நம்மை நாம் காப்பாற்றிக்கொள்வதே நமது விசேஷக்கடமை எனத் தீர்மானித்து இதுவிஷயமாய் அவருடைய உட்கருத்தைத் தெரிந்து வரும்படியாய் தங்களில் "உத்பா" என்பவரை தலைவனாகத் தெரிந்தெடுத்து நபீ அவர்களிடம் அனுப்பிவைத்தார்கள். அவர் நபீ அவர்களிடம் வந்து, "ஓ என் உடன்பிறந்தான் மகனே! உமது தூதின் நோக்கம் பொருளைச் சேகரம்பண்ணும் பொன்னாசையை யடுத்திருந்தால் எங்களில் எவரிடத்திலு மில்லாத திரண்ட செல்வத்தை உமக்கு நன்கொடையளித்து உம்மை செல்வேந்திர பிரபுவாக்கிக் கொள்ளுகிறோம்; அல்லது கீர்த்தியையும் அதிகாரப் பெருமையையும் நாடினதானால் உம்மை எங்களுக் கதிபதியாக்கிக் கொண்டு நீர் இட்ட கோட்டினைக் கடவாமல் நடக்கின்றோம்; அல்லது அரசாங்க வகிப்பைப் பற்றியதாயின் உம்மை தேச மன்னனாக ஏற்றுக் கொள்கிறோம். இவைகளில் உமது நோக்கம் எது? அல்லது உண்மையில் உமக்கு பித்தமே பிணியா யிருப்பின் தகுந்த வைத்தியனை அழைத்து வருகிறோம்" என்று சொல்ல, இதைக்கேட்ட நம் நபீ பெருமான் அவர்கள் திருக்குர்ஆனிலுள்ள சில வசனங்களை ஓதிக்காட்டி, தமது அரிய திருவாக்கினால் கீழ்க்கண்டவாறு பதில் அளித்தார். (அதை இதனடியில் அப்படியே தர்ஜுமை செய்திருக்கிறோம்.)

"நீர் எண்ணியவற்றுள் ஒன்றும் எனக்கு ஒரு பொருட்டல்ல. உம்மிடம் பொருளை இச்சித்தோ, அல்லது உங்களெல்லாம் மேலாயிருக்க வேண்டுமென்ற சித்தங்கொண்டோ அல்ல. மகாராஜபெருமையை

விரும்பியோ நான் உங்களுக்கு சுத்த சத்தியமார்க்கத்தைப் புகட்ட வரவில்லை. ஆனால் என்னைக் கடவுள் ரசூல் என்று தீர்மானித்து உங்களிடத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்; அவரிடத்திலிருந்து நான் வேதத்தைப் பெற்றிருக்கிறேன். அதன் மூலமாய் அவர் உங்களிடத்தில் வைத்திருக்கும் காருண்ய மங்கல விசேஷகுணங்களை உங்களுக்குத் தெரிவிக்கும்படிக்கும் அவரது கோபாக்கினியைக் குறித்து உங்களுக்கு அச்சம் ஊட்டும்படிக்கும் எனக்கு கட்டளைசெய்திருக்கின்றார். ஆகவே கடவுளின் தூது இன்னதென நான் உங்கள் கைவசமாக்கினேன். உங்கள் யோகக்ஷேமத்துக் குரிய விஷயங்களை யெல்லாம் சொல்லிவிட்டேன். நான் கொண்டுவந்திருக்கிற தூதின்விசேஷத்தை நம்பினால் இம்மையிலும் மறுமையிலும் நீங்கள் பாக்கியவான்களே. திரஸ்கரிப்பீரானால் எனக்கும் உங்களுக்கும் இடையே கடவுள் ஒரு தீர்ப்பை யளிக்கும் பரியந்தம் நான்பொறுமையையே கடைப்பிடித்து அவர் கட்டளையின்படியே நடப்பேன்."

உத்பா என்பவர் இதைக்கேட்ட மாத்திரத்தில் ப்ரமித்து நபீ அவர்களை அஞ்சிப் பிரிந்து தம் இனம்போய்ச் சேர்ந்தனர்.

இதனால் நபீஅவர்கள் மண், பெண், பொன்னுசை முதலிய உலகவெல்லாசத்தை விரும்பினாரல்லவென்பதையும், இராச்சிய பாரத்தை வகிக்கச் சற்றேனும் அபேட்சித்தாரில்லை என்பதையும் பற்றி யார்தான் ஞியாய விசாரணை செய்யாமலிருப்பார்கள்.

சத்தியமார்க்கத் துரோகிகளாக அறபியர் கிளம்பி நீதிமான்களை சங்கரிக்கவெண்ணி தேசத்தில் கலகத்தை விளைவித்து தாறுமாறான நடவடிக்கைகளுக்குத் தலையிட்ட படியால் எதிரிகளின் கட்சியை முறியடிக்கச்செய்து, பூமியின் திறவுகோல் நீதிமான்களுடைய கையில் ஒப்படைக்கப்படும் என்னும்பரிசுத்த வாக்குக்கியைய, கடவுள் அத்தேச மததர்ம யுத்தத்தில் நபீ அவர்களுக்கே பூரணவெற்றியைக் கிருபைசெய்ததுமன்றி, அவரது பிற்காலத்தும் மத பரிபாலனத்துடன் அத்தேசப் பரிபாலனப் பொறுப்பையும் இஸ்லாமியரிடமே ஒப்படைக்கநேர்ந்தது; அப்படியே ஹிஜ்ரீ 10-வது வருடம் அறபியாமுழுதும் இஸ்லாமியர் கைவசத்தில்வர நபீ அவர்கள்

அதற்குப்பின் ஒருவருஷமே உலகிலிருந்தனர். நபீ அவர்களின் காலத்துக்குப் பின்னர் இராஜ்ய பரிபாலனப் பொறுப்பை ஏற்று துரைத்தனம் செலுத்திவந்த நபீ அவர்களின் ஸ்தாஞதிபதிகளுங்கூட மத தர்ம பரிபாலனத்தை யுத்தேசித்து அரசு புரிந்து வந்தார்களேயொழிய உலகப்பெருமையையும், வாழ்வையும், இன்பத்தையும் நோக்கிஞரில்லை என்பதையும், நபீ அவர்களது போதனுவன்மையின்பற்று அவர்களிடம் எவ்வண்ணம் பதிந்திருந்ததென்பதையும், அவர்கள் இராஜாங்க பரிபாலனத்தில் பற்றற்றவர்கள்போல் இருப்பினும் எவ்வித நீதியும்வழுவாமல் நடத்திக்கொண்டு வந்தார்களென்பதைப் பற்றி அவ்வக்காலங்களில் ஆட்சிக்குவந்த ஸ்தாஞதிபதிகள் கூறியுள்ள சிற்சில வாக்குகளை இங்கு எடுத்துச்சொல்லுகிறதிலிருந்து செங்கோலைக்கடைபிடித்தவர் ஆதி இஸ்லாமியரே பிரதான மென்னலாம்.

## பிரதான கலீபா ஸ்ரீமாந் அபூபக்கரவர்களின் பிரசங்கம்.

மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் காலத்திற்குப் பின்னர் நபீ அவர்களுக்குப் பிராணபதமாயிருந்த சிஷ்யராகிய ஸ்ரீமாந் அபூபக்கரவர்களை அம்மகோன்னத பதவியான கலீபா ஸ்தானத்தை ஏற்றுக்கொள்ளும்பொருட்டு மஹா ஜனசமூகங்கள் ஏகோபித்து வேண்டிக்கொள்ள, அப்படியே ஸ்ரீமாந் அபூபக்கரவர்கள் பிரதமத்தில் சமஸ்த முஸ்லிம்களின் ஸ்தாஞதிபதி என்ற அவ்வுயர்தர பதவியை வகிக்கலாயினர்.

அவர் சிம்ஹாசனம் ஏறினபொழுது, மகாஜனங்களை நோக்கி கீழ்வருமாறு பேசிஞர். அதன் அழகை யாவருங் இங்கு காணலாம். அதாவது:—

"ஓ இஷ்டமித்திரர்களே! இதோ என்னைப் பாருங்கள். எனக்கு இந்தராஜ்யத்தைப் பரிபாலிப்பதாகிய பெரும்பாரம் வந்திருக்கிறது. ஞானம்முதலிய குணங்களில் உங்கள் யாவரிலும் உத்தமன் நானன்று. ஆதலால் நான்செய்யவேண்டியிருக்கிற சகலகாரியங்களில் நீங்களெல்

லோரும் எனக்கு மந்திரிகளாயிருந்துசகாயம் செய்யவேண்டும். நான் செய்வது சரியானால் எனக்கு பக்கபலமாயிருங்கள், தப்பானுல் திருந் துங்கள். துரைத்தனத்திலமர்ந்த புருஷனிடம் உள்ளதை யுள்ளபடி பேசுவதுதான், அத்துரைத்தனத்திற்கு நாணயமாய் நடப்பதாம். அதைவிட்டு, கள்ளத்தனமாய்ப் பேசுவது அதற்குத் துரோகம் நாடுவ தாம். கைவலுத்தவன் கையிளைத்தவன் ஆகிய இவ்விருதிறத்தாரும் எனக்குச்சமமே. அவ்வுபய பட்சத்தினர்மாட்டும் நடுவுநிலைமையாகத் துரைத்தனம் நடைபெற வேண்டுமென்பதே எனதுகோரிக்கை. அல் லாவையும் அவருடைய ரசூலையும் நான் எம்மட்டில் வணங்கி நடக்கி றேனே, அம்மட்டில் நீங்களும் எனக்குப் பணிந்து மரியாதை போற் றுங்கள். அதேபிரகாரம் அல்லாவுடையவும் அவரது ரசூலுடையவும் தர்மங்களை நான் உதறியெறிவேனாகில், அப்புறம் என்பால் உங்க ளுக்கு பக்தியிருக்க நியாயமில்லை."

அப்படியே அவரது அதிகாரத்தோரணையில் அவர், திமஷ்க் போருக்கு ஒரு படை தயார்செய்து, அதற்கு "அஸா மிப்ன்ஸைத்" என்பவரை சேனாதிபதியாக நியமித்து அனுப்பு கையில், அதே ஸ்ரீமாந் அபூபக்கரவர்கள் அவருக்கு பின் வரு மாறு கட்டளை இட்டனர்:—

"உமது அதிகாரத்திற்குட்பட்ட பட்டாளக்காரர்களை எந்தக்கார ணங்கொண்டும் நீர் உபத்திரவிக்கக்கூடாது. அவர்கள் மனவருத்தப் படும்படி நீர் அதிகாரத்தோரணி காட்டிவரக்கூடாது. காரியங்கள் சிக் காகி உமக்கு சஞ்சலமுண்டாக்கினுல் அவர்களையும் மதிமந்திரிகள் போல் பாவித்து கூடி ஆலோசிக்கவேண்டும். நியாயமாயும் தருமமா யுமே நீர் நடந்துவரவேண்டும். இல்லாவிடின், உம்முடைய காரியாதி கள் ஒன்றும் கைகூடாது. எதிரிகள் சண்டை தொடுத்தால் உங்களது பௌருஷத்திற்கு ஒருகுறைவுமின்றி நடந்துக்கொள்ளுங்கள். முதுகு காட்டுவதென்கிற விஷயத்தைக் கனவிலும் மறந்துவிடுங்கள். வெற்றி பெற்றபிறகு குழந்தைகளையோ, முதியோர்களையோ கண்டால், அவர் களுக்கு ஒரு தீங்கும் இழைக்கக்கூடாது. அம்மாதிரியே ஸ்திரீகளை யும்,மற்றவர்களையும் இம்சிக்காமல் பார்த்துக்கொள்ளக்கடவீர். பேரீச்சு முதலிய, விருக்ஷவர்க்கங்களையும், மொத்தமாய் பழந்தரும் மரம் செடிக ளெவைகளையும் நீங்கள் நாசம்பண்ணலாகாது. ஆடு மாடுகளைத் தின்ப தற்கு வேண்டியமட்டில் (ஹலால்) சுமுத்திரைஹத்தி செய்யலாமல் லது அதிகமாகவோ அனாவசியமாகவோ சேதமாக்கக்கூடாது.

ஒப்பந்தம் ஏதாவது செய்தால் அதனைக்காத்து, என்னநஷ்டம் உண்டானபோதிலும் கைசோராமல் பார்க்கவேண்டும். அல்லாவின் திருநாமத்தைச்சொல்லி, அந்தந்ததேசத்துப் பிரஜைகள், உங்களுக்கு உணவுமுதலியவைகளைக் கொணர்ந்தால், அவற்றை நீங்கள் தாராள மாய் வாங்கிக்கொள்ளலாம். சன்னியாசி மடங்களில் ஆங்காங்கு சில புண்ணிய புருஷரிருந்துகொண்டு கடவுளை வழிப்பட்டுவருகிறார்கள். அவர்களுக்கு உங்களால் யாதொருகெடுதியும் உண்டாகாமல் கவனஞ் செலுத்தவேண்டும். அந்தஆச்சிரமங்களையும் நீங்கள் அழிக்கக்கூடாது. என்பதாம்."

அவ்வாறே ஸ்ரீமாந் அபூபக்கரவர்கள் தமக்கு நிரியாண தசைவருகையில் மகாஜனங்களை ஒருங்குதிரட்டி அந்த சபை யில் எழுந்தருளியிருந்த நபீ அவர்களின் முக்கிய சிஷ்யராகிய ஸ்ரீமாந் உமர் அவர்களையழைத்து தம்மருகே இடங்கொடுத்து இருத்தி, தாம் எழுந்து கைகளை உயரவெடுத்து பகவானைத் தொழுது,

"ஓ ஆண்டவனே! உமது ரஸூலை எங்கள் பக்கலிலிருந்து நீர் எடுத்துக்கொண்ட சஞ்சலமே, என்னை வியாதிக்குட்படுத்தினது. உலகமுறையில் அதற்கு யாதொரு அவிழ்தமும் எனக்குச் சித்தியாக வில்லை. உமதுசித்தத்தின்படி, நானும் அவரிடம்போய்ச் சேருவதை யே எனக்கு உற்ற அருமருந்தாக்கி வைத்திருக்கிறீர் போலும். அர சாங்கநிருவாகத்திலும், மதாநுஷ்டானவொழுக்கத்திலும் நான்நடந்து கொண்ட என்நடக்கையின் பட்டோலை உம்மிடமுளது. அதன் அட் சரவரிசைகள் ஒருநாளும் அழிந்துபோகா. அது என்கண்முன்னே காண்பிக்கப்படும்நாளில், எப்படி,எப்படியோ என்பதை, எண்ணி நான் பயப்படுகின்றேன். உமதுகடாக்ஷத்தால் நீதியைக் கடைப்பிடித்தே இந்த சமுதாயத்தைப் பரிபாலித்துவந்தேன். ஆனாலும் உமது வழுவா நீதிக்கெதிரே எனது ஆண்மை எம்மாத்திரம்? ஓ நாயகனே! அடியேன் தெரிந்தும் தெரியாமலும் புரிந்திருக்கும் பாவங்களையும் பொல்லாங்கு களையும் உமது கிருபையால் பொறுத்து, உமது தாசன்மீது கடைக் கணித்தருளும்."

என்று பிரார்த்தித்துக் கொண்டவராய், ஸ்ரீமாந் உமற் அவர்களைத்தமது வலக்கரங்கொடுத்து எழுந்து நிற்கச்செய்து, தமக்குப்பின் அவரை கலீபாவாக நியமித்து அவரைச்சுட்டிக்

காட்டி, மகாஜனங்களுடைய ஏகீக சம்மதம்பெற்று, தமதுகண்களை ஏறெடுத்து,—

"ஆண்டவனே! இப்படி இவரை அதிபனுக்கியதில், மகாஜனங்களின் யோகக்ஷேமத்தைக்கோரியே ஒழிய எனக்கு ஆகவேண்டியது வேருென்றில்லை. இந்தசங்கத்தாருக்குள் ஏதாகிலும் பரஸ்பரவிரோதம் வந்துவிடுமோவென்று பயந்தே, நான், இவர்களுக்குள் உத்தமரான இவரைத்தெரிந்து விசிஷ்டராக்கியுள்ளேன். இந்த ஜனங்கள் அனைவரும் தமது அடிமைகள், ஆதலால் இவர்களைத் தமது திவ்வியகரங்களால் ஒருமைப்படுத்தி இவர்களுடைய சாதனங்கள் விமரிசையாக நிகழுமாறு அநுக்கிரகித்து இவ்வதிபதியையும் தருமதுரையாக்க வேண்டும். காருண்யமூர்த்தியாகிய நபீ அவர்களது மதத்தை உலகெங்கும் பரவச்செய்து, அந்தமதஸ்தர் யாவரும் நல்லவர்களாகும்வண்ணம் திருவுளம் பற்றவேண்டும்" என்பதாக விண்ணப்பித்து முடித்தார்."

இதனுல் நபீஅவர்களின் சித்தாந்தமானது இக்காருண்ய பிரபுவினிடம் எவ்வளவு சிறந்திருந்ததென்பதுவும், அவர் அத்தேசத்துக்கு தலைவரானது உலகபோகத்துக் கென்றல்லவென்பதுவும், சத்யமதாபிவிர்த்திக்கே யென்பதுவும் வெளிப்படையாவதோடு, அவர், உண்மை, அன்பு, பொறுமை, அநுதாபம், நீதி, வணக்கம் முதலான சற்குண சமேதராகவே வாழ்ந்திருந்தாரென்பது விகசிதமாகின்றதல்லவா!

பிரதான கலீபா ஸ்ரீமாந் அபூபக்கரவர்களுக்குப் பிறகு அரசாண்ட

## மூன்று ஸ்தாணுதிபதிகள்.

பிரதான கலீபா ஸ்ரீமாந் அபூபக்கர் அவர்களுக்குப்பின் ஒருவரையடுத்து ஒருவராய் மூன்று கலீபாக்கள் அப்பதவியை வகிக்கும் கண்ணியத்தை யடைந்தனர்கள். அவர்கள் (1) ஸ்ரீமாந் உமறு அவர்கள் (2) ஸ்ரீமாந் உத்மான் அவர்கள் (3) ஸ்ரீமாந் அலீபின் அபூதாலிப் ஆகியவர்களாம். இம் மூன்று

பக்தர்களுடைய அற்புதச்செயல்கள் பல. தெய்வபத்தி, குரு பக்தி, ஜனபக்தி முதலிய இலக்ஷணங்களில் யாதொரு குற்ற மின்றி விளங்கினவர்கள். இராச்சியப் பரிபாலனப் பதவியை வகித்திருந்த போதிலும், எப்போதாவது இவர்கள் தங்கள் சுயநலத்தைப் பாராட்டினதேயில்லை. ஆனல் குடிகளுடைய க்ஷேமலாபத்தையும், தேச அமைதியையும் கோரி, தங்கள்ராஜ் யம் யாதொரு பழுதும் அடையாமலிருக்கவேண்டும் என்பதி லேயே கண்ணும் கருத்துமாயிருந்து ஆண்டுவந்தார்கள். இவர் களுக்குப்பின்னர் அப்பதவியை பல கலீபாக்கள் பெற்றுவந்த போதிலும் அவர்கள் யாவரிலும் இவர்களே சிறந்தவர்கள். இவர்கள் அரசாண்ட காலங்களில் அங்கங்கே செய்துவந்த அருமையான பிரசங்கங்கள் அநேகம். அவைகள் ஒவ்வொன் றையும் கிரமவரிசையாய் இங்கு எழுதிவர நமக்கு பேரவா யிருந்தும், இச்சிறுகிரந்தம் எப்பெயர்பூண்டு வெளியுலாவ உத்தேசமோ அப்பெயருக்குரிய விஷயங்களின்றி அந்ய விஷ யங்களைக்கொண்டு மாறுவேடம்பூண்டு உலாவப்பெறுமென் னும் தோஷத்திற்கு அஞ்சிவிடுத்தோம். இனி வெளியாகும் அவர்களின் தனித்தனிச் சரித்திரங்களில் விஷயங்களைப் பரக் கக் காணலாம்.

இக் கலீபாக்களின் உபந்நியாசங்களை உற்று நோக்கினல் நபீ அவர்களின் உபதேசமே, இவர்கள் ஹிருதயத்தை பரிசுத் தப்படுத்தி, விசேஷ குருபக்தியை நிலைநிறுத்தி, கோடுதவரா நெறியை ஸ்திரப்படுத்தி, சகோதர ஒற்றுமையைப் பெருக்கும் இஸ்லாமிய சமயத்தைப்பரவச்செய்யும் நோக்கத்தைவளர்த்து, நீதிவழுவா தரசாளும் வல்லமையைக்கொடுத்து எக்காலத்தும் அழியாக்கீர்த்தியை இவர்களுக்கு நிலைபெற நாட்டியதென்று உறுதியாய்க் கூறலாம்.

நவரத்னங்களும் ஒளிகுன்றி வெட்கும், நபீ அவர்களின் உபதேசரத்னங்களே இந்நூலின் பொக்கிஷம். இவ்வருமை வுப தேச வாய்ப்பட்டு, உலகம் புகழப் பெருமை பெற்றிலங்கிய

ஸ்ரீமாந் உமற் அவர்கள் தாம் தம்சரமதசையில் செய்த ஒப்பற்ற ஓர் பிரசங்கத்தையும், ராஜ்ய பரிபாலனஞ் செய்துவந்த நாட்களில் அவரைக்குறித்து சத்துரு தேசத்ததிபதிகளில் இருவர் அவருடைய சைன்யத்தின் மூலமாய் விசாரித்த சிலவிஷயங்களுக்கு அச்சைந்யம் பதிலளித்ததையு மாத்திரம் இங்கு எடுத்துக் காட்டியுள்ளோம். மற்றவிஷயங்கள் இனி வெளிவரும் நூற்களில் காணலாம்.

## இரண்டாவது கலீபா ஸ்ரீமாந் உமற் அவர்களின்

# பிரசங்கமும் சோதனையும்.

கலீபா உமற் அவர்கள் சரமதசையை யடைந்தபோது, அவரிடம் பிரஜைகள் ஒன்றுகூடி அவருக்குப்பின் அவர் புத்திரர் அப்துல்லாவையே கலீபாவாக்கும்படி வேண்டிக்கொள்ள, ஸ்ரீமாந் உமற் அவர்கள் "முஸ்லிம்களை ஆளுவதாகிய பெரும் பாரத்தை ஒருகுடும்பத்தில் ஒருவர் வகித்து நேராக நடந்து கணக்கைச் சரிவர ஒப்புக்கொடுத்தால் அதுவே போதும் போதும்" என்று சொல்லி தமது மந்திரிகளில் சிரேஷ்டர்களான ஸ்ரீமாந் அலீ, உத்மான், ஸுபைர், தல்ஹா, சஅத்வகாஸ், அப்துற்றஹ்மான், ஆகிய இவ்வறுவர்களையும், சுட்டிக்காட்டி "இவர்களில் எவரொருவருக்கு மகா ஜனங்கள் தம் விசேஷ (ஓட்டு)சம்மதத்தைக் கொடுப்பார்களோ அவரே அப்பதவியை வகிக்கக்கடவர்". எனக்கூறி அவருக்கனுகூலமாக இவ்வாறு தமதபிப்பிராயத்தை வெளியிட்டார். அதாவது:—

"இந்தப் பட்டணம் மதீனா நகரே இஸ்லாமியத்தை முதல் முதல் எதிர் சென்றழைத்து இடங்கொடுத்தது. இதில் தான் நாம் முதல் முதல் சுகப்பட்டோம். ஆதலால் எனக்குப் பின்யார் வந்தபோதிலும் அவர் இந்தப் பட்டணத்தின் க்ஷேமத்தை விசேஷித்து நாடவேண்டும். இந்தப் பட்டணத்து மகாஜனங்களை விசேஷமரியாதையுடனும், பிரேமையுடனும்

நடத்தவேண்டும். இவர்களுடைய சற்கருமங்களைக் கோண்டாடி, தவறுகளைப் பரவச்செய்யாமல் மறந்துவிடவேண்டும். அறபிய வர்க்கத்தவரை அவர் நன்ருய்ப் பாலித்து வரவேண்டும். ஏனெனில் அவர்கள் தான் வாஸ்த்தவத்தில் இஸ்லாமிய மதத்திற்கு ஊன்றுகோல் போன்றவர்கள். அவர்களிடமிருந்து பத்திலொரு கடமை குடியிறைவாங்குவதில், அவர்களுக்குள் ஏழைகளுக்கு உதவுமாறு, அதை அவர் (கலீபா) வாப்பஸ் செய்து அவர்களுக்கே உதவும்படி செய்யவேண்டும். நபீ அவர்கள், யூதர், கிறிஸ்த்தவர், முதலியோர்க்கு, கொடுத்தருளியிருக்கும் வாக்கை அவர் (கலீபா)ஜாக்கிரதையாய்க்காப்பாற்றி வரவேண்டும்."

"ஓ அல்லா! நான் உமது தாசன். இந்த தேசத்தையாளும் அதிபதியாக என்னைத் தெரிந்தெடுத்தீர். ஆனாலும் மறுமையில் இவ்வுலகத்தை ஆண்ட பரிசுத்த நியாயாதிபதிகளுக்கு எதிரே நான் வெட்கித்து நிற்கும் நிலைமையில் எனக்கு தீர்ப்பு அளிக்காமல் உமது கிருபையால் என்னைக் கடாட்சித்தருளும்: நிச்சயமாகவே உமது ஆக்கினைக்குப்பயந்து நடந்த நான் உண்மையான நீதிமான்களின் வரிசையில் சேர்க்கப்படுவேன் என்ற நம்பிக்கையை ஸ்திரமாய்க்கொண்டே உமக்கு வழிப்பட்டு தேசத்தைப் பரிபாலித்து வந்தேன். நாயனே! இப்பொழுது என் காரியமாயிற்று. எனக் கப்புறம் வருபவர்க்கு இந்த ராச்சியத்தை ஆளுவது வெகு சுலபம். கலகமடங்கி ராச்சியத்தி லெங்கும் தருமம் பிரபலித்திருக்கிறது". என்று முடித்தனர்.

இதனால் ஸ்ரீமாந் கலீபா உமற் அவர்களுடைய காலத்தில் தேசம் எப்படிக் கிருந்த தென்பதும் அவர்கள் அரசு புரிந்து வந்த சித்தம் எதைப் பின்பற்றி இருந்த தென்பதும், மகா ஜனங்களுடைய க்ஷேமத்தை எப்படிக் கருதி யிருந்தார் என்பதும் பிரத்தியட்சமாய்ப் புலப்படுவதோடு அவரது உருக்கமான உபன்னியாசத்தின் சாரமானது, நபீ அவர்களின் உபதேசத்தில் பண்பட்ட பலனென்றே விளங்குகின்றது.

கலீபா உமற் அவர்களைப் பற்றியசோதனையும் இஸ்லாமதப்பற்றும்.

ஸ்ரீமாந் உமற் அவர்கள் ஹிஜ்ரீ 13-வதுஷு கடைசியில் திமஷ்க்யுத்தத்திற்கு ஒருபடைதயார்செய்து, அதற்கு ஸ்ரீமாந் காலித் என்பவரைத் தளகர்த்தராக நியமித்து அனுப்பினர். அத்துருப்புகளி லிருந்து 32-வீரர்கள் எவ்வகை யாகவோ சேனையைவிட்டுப்பிரிந்து அந்தாகிய்யா என்னும் பட்டணத்தில், கிறிஸ்தவர்களுக்கு சக்கரவர்த்தியான ஹிர்கில் அரசனுடைய கையில் சிக்கிக்கொண்டனர்கள். அவர்களைச் சக்கரவர்த்தியின் முன் கொண்டுவந்து நிறுத்தியதும், அவர் பக்கத்தி லிருந்த நைராஸ் என்ற கிறிஸ்தவப் பாதிரி, வீரர்களைநோக்கி "இப்பொழுது நீங்கள் கிறிஸ்தவ ராவதற்கு என்னதடை?" என்று மேலும் அவர் சிலகேள்விகளைக்கேட்க நாவெடுப்பதற்கு முன்னரே.

வீரர்கள், "எங்கள் மதம் சத்தியமா யிருப்பதே அதற்குத் தடை". எனக்கூறி அவர் வாய் அடைத்தனர். பின் சக்கரவர்த்தி அவர்களை நோக்கி "நீங்கள் கிறிஸ்தவர்களைக் கொன்று அவர்கள் சொத்தைவேண்டியமட்டில் அபகரிக்கிறீர்கள் என்று கேள்விப்படுகிறேன். என்றாலும், உங்கள் கலீபா கந்தையைக் கட்டிக்கொண்டு திரிகிறதாய் அநேக அரசர்களுக்குள் பெரும் பிரஸ்தாபமாய் இருக்கிறதே அவருக்கு மற்ற அரசர்களைப் போல் உண்டு, உடுத்துத்திரிவதற்கேன் மனம்வரவில்லை என்ன காரணம்?" என்று கேட்க, அதற்கு அவர்கள் "ஐயா! மஹாராஜனே! பகவானொருவர் இருப்பதும், அவர் முன்பாகப்போய் பரமபதத்தில் ஜவாபு சொல்ல வேண்டி இருப்பதுமே அதற்குக் காரணம்" என்றார்கள். பின்னும்,

"அரசன்—அவருக்குப் பரிவாரமாக யார் இருக்கிறார்கள்?
வீரர்—ஏழை பாழைகள் தாம்".
அரசன்—அவருடைய ரத்தினக்கம்பளம் எப்படிப்பட்டது?
வீரர்—சத்தியம், தருமம், நியாயம் இவைகூடி நெய்யப்பெற்றது.

அரசன்—அவருடைய சிம்ஹாதனம் எப்படிப் பட்டது?

வீரர்—வேதாகமப்பீடமா இருப்பதுடன் அது இந்திரிய நிக்கிரக பதவிக்குமே உரித்தானது.

அரசன்—அவருடைய, நீதி எவ்வகைத்து?

வீரர்—அபாரமான தெய்வபக்தியை பிரமாணமாய்க் கொண்டதே.

அரசன்—அவர் தேகரக்ஷணைக்கு யார் அமர்ந்திருக்கிறார்கள்?

வீரர்—அல்லா ஒருவரிடத்தில் திடபக்தி முற்றிய எல்லோருமே; என்றார்கள்.

இவர்கள் விடைகளைக் கவனித்த அரசன் தம்முள் இவர்களோ கடவுளிடத்தில் பக்தியும், இதரவிஷயங்களில் விரக்தியுங் கொண்டவர்களா யிருக்கின்றார்கள். இவர்கள் பிறருக்கு எப்படி அஞ்சுவர். 'துறவிக்கு வேந்தனும் துரும்பு' என்பதுபோல் உமற் இடத்தும், இஸ்லாமிய மதத்திலும் இவர்களுக்கு இருக்கும் பற்றோ எவ்விதத்திலும் ஒழியாது போன்றிருக்கிறது. இவர்களா நம் தண்டனைக்குப் பயப்படப் போகிறார்கள்! இல்லை, இல்லை என்று எண்ணினவனாயினும், இவர்களை விடுதலை செய்யாமல் சிறைப்படுத்தியே வைத்திருந்தான். சிறைப்பட்டவர்கள் தாங்கள் சுத்தவீர பராக்கிரமத்தை யுத்தத்தில் காட்டி ஜெயமடைவதுபோல், தங்கள் மனோபலத்தை, உலக உபயோகவிஷயங்களில் செலுத்தாது ஸ்ரீமாந் உமற் அவர்களிடத்தும், அவரால் பரவப்பட்டு வரும் சத்யமார்க்கத்தினிடத்தும், அதன் சகாயரான கடவுளிடத்தும் செலுத்திக் கொண்டு சிறையில் காலங்கழித்துக்கொண்டு வரும் நாளில் அந்தாகிய்யா என்னும் பட்டணத்திலுள்ள யூத கிறிஸ்தவ குடிகளில் சிலர் இஸ்லாமியத்தைத் தழுவினார்களென்று கேள்வியுற்ற அரசன் அத்தகைய குடிகளைப் பற்பல சங்கடத்திற்கு உள்ளாக்கினான். இஸ்லாமியத்தை எங்கும் பரவச்செய்வதற்கென்றே அவதரித்த ஸ்ரீமாந் உமற் அவர்கள், தம்மதத்தை

யும், அதைத் தழுவினோர்களையும் காப்பதன் பொருட்டு, அப்பட்டணத்தின்மீது படையெடுத்து அங்கரை தம் அரசாட்சிக்குட் படுத்தினர். அச்சமயத்தில் சிறைப்பட்டிருந்த வீரர்களும் மீட்கப் பட்டார்கள்.

இதனால் இஸ்லாமத நாசத்தையே அபேட்சித்த அவ்வரசனது, ஆக்கினைக்கும், அவனது நெருக்கடியான சிறை இருப்புக்கும், வீரர்கள் சற்றும் நெஞ்சமஞ்சாது பிடிவாதமாய்த் தங்கள் கலீபாவின் மீது வைத்த விஸ்வாசத்திற்கு விசேஷக்காரணமானது ஸ்ரீமாந் கலீபா உமற் அவர்களின் நீதியும், அவரது ஆத்மஞான தெய்வபக்தியும், இஸ்லாமதசுத்தியுமே அதற்குபிரதானமாயிருந்து விளங்கினது என்பதற்கையமில்லை. இது நிற்க.

ஸ்ரீமாந் கலீபா உமற் அவர்களின் அனுமதியின்றி, பாரவீகத்திற்கு படையெடுத்துச்சென்ற அறபிய சேனைகளுக்கும் அந்நாட்டரசனுக்கும் நேர்ந்த, அடியில் வரும் சம்பாஷணைகள், இஸ்லாமிய மதத்தை வளர்த்த அறபியர்களின் பெருமையை ஒருவாறு எடுத்துக்காட்டுகின்றன.

ஸ்ரீமாந் உமற் அவர்கள் ஆளுகைக்குட்பட்ட கடற்கரைத் தளகர்த்தராயிருந்த உலா என்பவருக்கு காதிஸியா யுத்தத்தில் சேனாதிபதியாய் நின்று போர்புரிந்த பாரவீக தேச தளகர்த்தர் சஅத் என்பவரிடத்தில் அதிதுவேஷம் இருந்துக்கொண்டிருந்தது. இதை முன்னிட்டு, உலா என்பவர், இராஜ சமூகத்தில் அனுமதிபெறுமலே ஹிஜ்ரீ 17 - வது வருஷம் சில காலாட்படைகளைத்திரட்டி, அதற்கு கலீத்பின்முந்திர் என்பவரை சேனாதிபதியாக அமர்த்தி கடற்கரை வழியாய்ச்சென்று பாரவீக நாட்டை எதிர்த்தனர். அக்நிதேவதா உபாசகரான அத்தேசமன்னன் ஹேர்பத் என்பவர் இவர்களுடைய சாமான்னிய செருப்பு, உடை, யுத்தக்கருவி முதலியவைகளைப் பார்த்து ஏளனஞ்செய்து "நீங்கள் இங்குவந்த காரியம் என்னவென்று கேட்டான்." அதற்கு அவர்கள் "அல்லா தமது ரசூலாகிய நபீ முஹம்மத்மூலமாய் உலகமெங்கும் இஸ்லாமியம் பரவ வேண்டு

மென்று எங்களைக்கூவி ஆக்ஞாபித்திருக்கிறார்; அந்த உத்தரவை அனுசரித்து நாம்இங்கு வந்திருக்கிறோம்; ஆகையால் நீங்களும் எங்களுடன் சேர்ந்து இஸ்லாமியராகிச் சுகப்பட்டுவாழலாம்; இஸ்லாமியத்தைத் தழுவாமலும் யுத்தம் தேவை இல்லாமலு மிருந்தால், ப்ரதியாக (ஜுஸ்யா) கப்பம்கட்டி வரவேண்டும், என்றார்கள். இதைக்கேட்டு அரசன் கோபித்து "பாரசீக ராச்சியத்தில் கொஞ்சக்காலமாக கலகங்களும், பரஸ்பர மாற்சரியமும் அதிகரித்திருந்ததே உங்களுக்கு இந்தத் துணிவைப் பிறப்பித்திருக்கவேண்டுமென்று காண்கிறது. நல்லது, பழைய காலத்தில் நமது பால்கன் துர்க்கங்களில் வைத்திருந்த சிறு படைகளைக்கொண்டே உங்களைப் பலதடவைகளில் முறியடித்துத் துரத்தியதை மறந்து விட்டீர்கள். மேலும் மறுபடி அந்த ஞாபகம் உங்களுக்குச் சீக்கிரம் வரச்செய்கிறோம். தக்கபுத்தியும் கற்பிக்கிறோம். எலிகளையும் பாம்புகளையும் தின்று கொண்டு, ஒட்டகம் ஆடு இவற்றின் ரோமத்தால் நெய்த துணியொழிய வேறு போர்வைக்குக் கதியில்லாத நீங்கள் இப்பொழுது எம் ராச்சியத்தின் மீது ஆசைப்படுவதற்கு நீங்கள் யார்? உலகத்திலுள்ள சகல தேசத்தவர்களிலும் நீங்கள் அதமர்கள். குடிக்கக் கஞ்சிக்கு வகையற்றவர்கள். பரஸ்பரம் பிறர்பொருளைக் கவர்ந்தே காலங்கழிப்பவர்கள். படுமுட்டாள்கள். அருளையும் பொருளையும் கொடுக்கக்கூடிய இவ்விரண்டு கலைகளில் ஒன்றையாகிலும் நீங்கள் தெரிந்தவர்கள் அல்ல. ஏதோ மடத்தனமாக மனோராச்சியம் செய்ய யத்தனித்திருக்கிறீர்கள். கண்களைச் செவ்வையாய்த் திறந்து பார்த்து, மனப்பால் குடிப்பதை விட்டுப்புத்தியாய் பிழையுங்கள். உண்ணச் சோறும், உடுக்கத்துணியுமில்லாத குறைவால் ஒரு சமயம் நீங்கள் உங்களுடைய மணற் காடுகளைவிட்டு வந்திருப்பீர்களாகில் உங்களுக்கு அன்னவஸ்திரம் தருகிறோம். உங்கள் அதிபதிகள் விஷயத்திலும் தயவாய் இருக்கிறோம். உங்களை ஆதரித்து ஆளுவதற்காக நல்லவரான ஒரு ராஜாவையும் தேர்ந்து அனுப்புகிறோம்." என்றனன்.

இதைக்கேட்ட சேனாதிபதியும் மற்றுமுள்ள சேனைகளும் சற்று சும்மாயிருந்து, பிறகு சவாரிப்ன் ஹூம்மாம் என்ற போர்வீரரை பதிலுரைக்கச் சொன்னார்கள். அவரும் சம்மதித்து ஆலசியஞ் சிறிதுமின்றி நூதன மதத்தின் ஜீவகளையை விளக்க "ஓ ராஜனே! இப்போது இங்கு வந்திருப்பவர்கள் அறபியாவில் பெரும்பெருமையுடன் கூடியவர்கள். நல்ல வமிசத்தில் பிறந்தவர்கள். ஆதலால் அவர்கள் தங்களைப்போல் பதவி பெற்றவரிடத்தில் இச்சந்தற்பத்திற் கேற்றபடி வெளிப்படையாகப் பேசக்கொஞ்சம் லச்சைப்படுகிறார்கள். நானோ ஒருகாட்டாள்; கூச்சமற்றவன். அவர்கள் மனத்துளிருப்பதைத் தாராளமாய்ச் சொல்லிவிடுகிறேன்." என்று மேலும் சொல்லுகிறார். எங்களுடைய தரித்திர தசை, பரஸ்பர மாற்சரியம், முட்டாள் தனம் இவைகளைப் பற்றித் தாங்கள் பேசியது முற்றும் உண்மையே; நாங்கள் பசியாற்ற முடியாமல் புழுபூச்சிகளைத்தின்று ஜீவித்ததும் வாஸ்தவமே. எங்களில் தரித்திரமிகுந்து அதைப் பொறுக்கமாட்டாமல் அநேகர் தங்கள் பெண்களைக் கொன்றுவிட்டு அங்ஙனம் குடும்பத்தைச் சுருக்கியதும் நிசமே, ஈஸ்வர விஷயமான ஞானம் சிறிதுமின்றி பேய்பிசாசுகளை வழிப்பட்டு பிரதிமைகளை வணங்கி கண்ட சடங்குகளைக் கைப்பற்றி அஞ்ஞானமென்னும் இருளால் மூடப்பட்டு ஒருவரோடு ஒருவர் சச்சரவுசெய்து ஒருகட்டுக்கும் அடங்காமல் கைகொண்டமட்டுங் கொள்ளையடித்தும் கொன்றும் காலங்கழித்து வந்ததும் மெய்யே.

ஆனால் இப்பொழுதோ நாங்கள் வேறுவகை ஜனங்களாய் விட்டோம். அல்லா எங்கள்மேல் தயை கூர்ந்து எங்கள் மத்தியில் ஒருவரைக்கொண்டு வந்து பிறப்பித்திருந்தார். வமிசவழியிலும் குணங்களிலும் அறபியாவில் உள்ள் சர்வ ஜனங்களிலும் மிக்கச் சிறந்த முதல்வர் அவரே என்பதில் ஐயமில்லை. ஆகவே அவரை அல்லா தமக்கு கிங்கரனாகவும், எங்களுக்கு நபியாகவும் ஏற்படுத்தினார். அவர் மூலமாய் அல்லா எங்களுக்குச் சொல்லியது இதுவே: அதாவது:—

"நான் ஒருவனே ஈஸ்வரன். நான் ஆதியந்த மற்றவன். நானே இந்த பிரபஞ்சத்திற்குக்கர்த்தா. உங்களை நேர்வழியில் நடத்தவேண்டி எனக்கு இச்சை உண்டானதால், இதோ உங்களுக் கொரு ரசூலை அனுப்பி இருக்கிறேன். அவர் தரிசிக்கும் மார்க்கத்தை அனுஷ்டிப்பவர் என் சமீபத்தில் வந்து நித்தியானந்த மனுபவிக்க இடமுண்டாகும். தெய்வபக்தி இல்லாமலும் கொலை, களவு முதலியன தீயச் செயல்களையே செய்து திரியும் தீயோர்களுக்கு ஏற்பட்டிருக்கும் நரகவேதனையே என் ரசூலை துவேஷிப்பவர்களும் அடைவார்கள் என்று சொல்லி இருக்கிறார்."

நபீ அவர்களும் நயத்தில் வெகுதூரம் எங்களுக்கு இந்த ரகசியத்தை உபதேசித்து வந்ததில் எங்களுடைய துர்ப்புத்தி மாறி அவருடைய கைங்கரியத்தை நாங்களும் நம்பி ஒப்புக் கொண்டிருக்கிறோம். அவருடைய வார்த்தைக ளெல்லாம் ஈஸ்வரனுடைய வார்த்தைகளென்றும், அவருடைய ஆக்கினைகள் ஈஸ்வர ஆக்கினைகளென்றும், எங்களுக்கு திருப்தியாயிருக்கின்றன. ஆதலால் அவர் தமது மதத்தை இஸ்லாம் என்று பெயரிட்டு அதைத் தழுவும்படி எங்களைக் கோரியதில் நாங்களும் அதையே சத்தியமாகக் கொண்டு ஒரு மனபக்தியுடன் கடவுளை வணங்கி வருகிறோம். அவர் எங்களுடைய புத்தியை விசாலமாக்கி, எங்களுக்குள் பரஸ்பரமிருந்த துவேஷத்தை யொழித்து ஈஸ்வரானுக்கிரகத்தால் பிரசுரிக்கப்பட்ட ஸ்மிருதிகளை அனுசரித்து இஸ்லாமியராகிய நாங்களெல்லோரும் சகோதர சிநேகத்துடனிருக்கும்படி எங்களை ஒருமனப் படுத்தி எங்களுக்குள் ஒற்றுமை யுண்டாக்கி இருக்கிறார். மேலும் அவர், சொன்னதாவது:—

"நான் ஆரம்பித்த காரியத்தை நிறைவேற்றுங்கள். உலகமெங்கும் இஸ்லாமியம் பரவட்டும். இப் பூமண்டலம் அல்லா உடையது. அதை அவர் பக்தியில் வழிப்பட்ட நீதிமான்களுக்கே கொடுத்திருக்கிறார். உங்கள் மார்க்கமே கறையில்லாத சுயம்பான பக்தியின் மார்க்கம். அதைப் பின்பற்றி நீங்கள்

நீதியாய் நடந்து ஒரே மெய்க்கடவுளை வணங்கி வந்தீர்களே யானால், பூமியின் திறவுகோல் உங்களிடமே யாகும். உங்களுடைய மதத்தைத் தழுவும் ஜாதியார் உங்களுக்கு வேண்டியவராகிறார்கள். அவர்களுக் கெல்லாம் உங்களுடன் சமானஸ்கந்தமாக இருந்து உங்களுடைய ஸ்மிருதிகளை அனுசரித்து மங்களமடைவது சாத்தியம். இப்படிக் கன்றி யார் தங்களுடைய பழைய மதத்தையே விடாமலிருக்க வேண்டுகிறார்களோ அவர்களெல்லாம் உங்களுக்கு கீழ்பட்டவரென்று ஒப்புக் கொள்ளும்படி நீங்கள் நிர்ப்பந்திக்க வேண்டியவர்கள். அவர்கள் உங்களுக்கு (ஜுஸ்யா) கப்பங் கட்டி வரவேண்டும். அப்படிச் செய்தால் அதற்குப் பிரதியாக நீங்கள் அவர்களை ரட்சித்து வரலாம். ஏனெனில், உங்களுக்கு கீழாய் இருந்தால் தான் சத்திய வழியாகிய இஸ்லாமியம் பரவுதற்குக் காரணமாகும். அவர்கள் உங்களுக்கு மேலாய் இருக்க இடம் கொடுத்தால் பின் உங்கள் ஐதீகத்திற்கே இடையூறு செய்தாலும் செய்வார்கள். ஆகையால் ஒன்று, இஸ்லாமியராகி சகோதரதத்துவத்தில் இணைந்துகொள்ளல் வேண்டும். அல்லது உங்களுக்கு கீழ்பட்டு கப்பங்கட்டி வர சம்மதிக்கவேண்டும். இந்த இரண்டு கதியையும்விட்டு யார் இஸ்லாமில் சேருவதில்லை என்றும் கப்பங் கட்டுவதில்லை என்றும் முரட்டுத்தனம் செய்கிறார்களோ, அவர்களோடு மதப் பரப்புக்கென்றே போராட வேண்டும். அப்படிப்போராடுவதில் உங்களில் சிலர் உயிர் இழக்கத்தான் வேண்டும். அதனால் தோஷம் ஒன்றுமில்லை. சாகிறவர்களுக்கு வீரசுவர்க்கம். வெற்றியடைந்தவர்க்கு இவ்வுலக இன்பம்.” என்று அவர் சொல்லி இருப்பதை நம்பி எங்களுடைய கைமேலாகி புகழ் பெருகுமென்பது நிச்சயமாயிருப்பதால் சிறிதும் தயங்காமல் முன் வந்துகொண் டிருக்கிறோம். இப்பொழுது அவர் எங்களை விட்டுப் பிரிந்து ஆறுவருஷத்துக்குமேல் கடந்து போயிற்று. அவருக்குப்பின் சத்தியத்தையே உடையாய்க்கொண்ட எங்கள் கலீபா அபூபக்கர் என்னும் மன்னன் எங்களுக்கு

அதிபதியாய் இருந்து $2\frac{1}{4}$-வருஷம் அறபியாவை அரசுபுரிந்து, அவர் காலமாக, அவருக்குப்பின் நீதியையே உணவாய்க் கொண்ட மகாவல்லமையுள்ள ஒரு அதிபதி, இப்பொழுது சிம்ஹாசனம் ஏறிஇருக்கிறார். அம் மன்னவனது அதிசயப்பெயர் உமற். அவரது வர்த்தமானதசை தங்களுக்கும் தெரியும். தங்களைப்போல் சுயநலப்பிரியராய் உண்டு, கழித்து, தூங்கி உலகமாய்கையில் சுழன்றுத்திரியும் சோம்பேறியல்ல. மிகச் சுறுசுறுப்புக் காட்டுவார். இராக் காலங்களிலும் அவர் சயனிக்கிறதில்லை. தாழ்ந்த உத்தியோகஸ்தர்கள் தங்கள் கிரமங்களை விசுவாசத்தோடு செய்து வருகிறார்களா என்றும், கிராம வாசிகள் துரைத்தன முறைமைகளைப்பற்றி எப்படிப் பேசிக்கொள்ளுகிறார்கள் என்றும், தாம் நேரில்தெரிந்துகொள்வதற்காக இராத்திரி வேளைகளில் மாறுவேஷம் பூண்டு சந்து பொந்து எங்கும் போவதுண்டு. குறித்தநேரங்களில் கடவுள் வணக்கத்தையும் கைவிடார். எப்பொழுதும் தெய்வ சிந்தனையில் தமதுபுத்தியைச் செலுத்தி வருவார். துரைத்தன நீதித் தராசை சரியாய்க் கையில் பிடித்து நிறுப்பார். அவரை நாங்கள் இராஜா வென்று மதித்தாலும் அவர் தம்மை குடிகளுக்கு ஊழியக்காரனேஎன்று காரியங்களைச்செவ்வையாய் நடத்தி வருவார். ஆளுகையில் எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் மஹாஜனங்களில் புத்திசாலிகளையும், கல்விமான்களையும் தேர்ந்து எடுத்து அவர்கள் சம்மதம் பெற்றே அதிகாரம் நடத்துவார். ஆகையால் எங்களுக்கு பிரிதொரு அரசன் தேவையில்லை. உமக்கே உம்மையும், உமது பிரஜைகளையும் ஆள ஒரு அரசன் அகத்தியம் தேவையாயிருக்கிறது. ஆதலால் தங்கள் இஷ்டம் போல் இஸ்லாமியம் வேண்டுமா? அல்லது நிர்மூலமாகும்வரை யுத்தம்வேண்டுமா? எது வேண்டுமானாலும் எடுத்துக்கொள்ளலாம் என்று சொல்லி முடித்தனர். பின் அவ்விருதிறத்தாருக்கும் யுத்தம் ஏற்படக்கூடிய ஆஸ்பதங்களாகி சகல முஸ்தீப்களுடன் போருக்கு நெருங்கி விட்டார்கள்.

எப்படியோ ஸ்ரீமாந் உமற் அவர்களுக்கு இங்கடவடிக்கைகள் தெரிந்துவிட்டது. அவ்விருதிறத்தாரும் போராடிக் கொள்வதற்கு முன்னுதாகவே ஸ்ரீமாந் உமற் அவர்கள் சற்றும் தாமதிக்காமல் அந்த நிமிஷமே, "ஒருவனுடைய சுய நலத்தைக்கருதியாவது, ஒருவன்பேரில் கொண்ட துவேஷத்துக்காவது, ஆயுதத்தைக் கையாடுகிறவன் நமதாளுகையில் கொடூரதண்டனைக்குட்படுவான்" என்றும், "துரைத்தன அதிகாரத்தைபொருட்பாராமல் உன்மனேபீஷ்டத்தின்படி நடந்துகொண்ட அபாரமான இத்துணிகரச் செய்கைக்கு நீ நமது சமஸ்தானத்தில் வந்து என்ன உத்தரம் சொல்லி உன்னைத் தப்பித்துக் கொள்ளப் போகின்றாய்" என்றும்; "யுத்தத்தை நிறுத்து. நீயும், உன்சேனைகளும் உடனே நமது ஜாகைக்குத் திரும்பக்கடவீர்." எனவொரு இறுதிக்கடிதம்எழுதி அதைச் சேனாதிபதிக்கு கொடுத்தனுப்பினர்.

நிருபத்தைப்பெற்ற சேனாதிபதி தன்கோரிக்கையை நிறுத்தி சமஸ்தானத்துக்குவர, ஸ்ரீமாந் உமற் அவர்கள் சேனாதிபதியை வேலையிலிருந்து நீக்கியும், அவரையும் துருப்புகளில் சிலமுக்கியஸ்தர்களையும், கொடூர சிட்சைக்குட் படுத்தினர்.

அப்படியே ஸ்ரீமாந் உமற் அவர்கள் ஹிஜ்ரீ 17-வது வருடம் சீரியா தேசயுத்தத்திற்கென்று ஒருபடைதிரட்டி இயற்கனவே பெரும்பெயரும் கீர்த்தியும் பெற்று பிரதான சேனாதிபதி என்ற அவ்வுயர்தர உத்தியோகத்தில் அமர்ந்திருக்கும் காலித்பின் அல்வலீத் என்பவரை அதற்குத்தளகர்த்தராக நியமித்து அனுப்பிவைத்தார். ஸ்ரீமாந் காலித் அந்த யுத்தத்தில் முழுபலத்தையுங்காட்டி, தேசத்தை ஜயித்து, பிரமிக்கத்தக்க தமது சாமர்த்தியத்தை விளங்கப்பண்ணினர். யுத்தகளத்தில் சேனாதிபதிக்கு எதிரே வந்துநின்ற ஒரு கவிராயன் அவருடைய வீரச்செயல்களைக் குறித்துப் புகழ்ந்து ஒருகவிபாடிக் காட்டினன். அதனைச் செவியுற்ற ஸ்ரீமாந் காலித் மிகசந்தோஷித்துஅவனுக்குப் பதினுயிரம்ரூபாய் வெகுமதியளித்தார்.

வழக்கப்படி சேனையோடிருந்துவரும் வர்த்தமான லிகிதர் இதைப்பற்றி நியாயத்துறைக்கு எழுதித் தெரிவிக்க இதைத்தெரிந்த ஸ்ரீமாங் உமற் அவர்கள் "வாஸ்த்தவத்தில் காலித் புலவனுக்கு இப்பெருந்தொகையை தன் சொந்தத்திலிருந்து கொடுத்திருப்பானுனல் அவன் ஆராதூரித்தன செய்கைக்குட்பட்டான். அல்லது அரசாங்க பொக்கிஷத்திலிருந்து கொடுத்திருப்பானுனல் மகாமோசத்தைக் கையாடிய இராஜத்துரோகியானுன். ஆகையால் இவ்விருபான்மையிலும் அவன் அபாரமான குற்றவாளியே என்றும், அவனைவேலையிலிருந்து நீக்கி முற்றிலும் தள்ளி இருக்கிறேம்" என்றும் ஒரு கட்டளை பிறப்பித்து, உத்தரவை ஒரு தூதன்கையில் கொடுத்து, இயற்கனவே காலித் என்பவருக்கு உபசேனுதிபதியாய் அவருடனேயே இருந்துவரும் ஸ்ரீமாங் அபூ உபைதா வசம் செலுத்திவரும்படி அனுப்பிவைத்தார். உத்தரவைப்பெற்ற தூதன் அப்படியே ஸ்ரீமாங் அபூஉபைதா விடம் கட்டளையைச் செலுத்தி நின்றனன். மேலும் கட்டளையில் "காலித் குற்றத்தை ஒப்புக்கொண்டால் முற்றிலும் நீக்கிவிடாமல் எனது மறு உத்தரவுவரை அவரை அவ்வதிகாரப் பொறுப்பிலிருந்து நீக்கி வைத்திருக்கிறது" என்றும் கண்டிருந்தபடியால் இதைக் கண்ணுற்ற ஸ்ரீமாங் அபூஉபைதா அவர்கள் ஸ்ரீமான் காலித் என்பவரை வரவழைத்து விசாரிக்க "அவர் புலவனுக்கு தன் சொந்தத்திலிருந்து கொடுத்ததாகவும் அதனுல் தான் குற்றத்தை ஏற்றுக்கொள்ள முற்றிலும் சம்மதிக்கமாட்டேன் என்றும் ஆட்சேபித்தனர்." உடனே அவர்முன் உத்தரவைக் காண்பித்து அவரை வேலையிலிருந்து முற்றுய் நீக்கிவிட்டதற்கு அறிகுறியாக முழுச் சேனைகளும் பிரதானிகளும் அறிய, அவரது கிரீடத்தைக் கழற்றிவிட்டு அவர்தலைப் பாகையைப் பிரித்து அதைக்கொண்டே அவர் இருகைகளையும் கட்டி சற்று நேரம்வரை காவலில் வைத்தார்கள்.

ஸ்ரீமாங்காலித் அவர்கள் இச்செய்கைக்கு மிகவும் மனஸ்தாபப்பட்டு அதைவிட்டு, ஹிம்ஸ் என்னும் நகருக்குவந்து,

மஹாஜனங்களை ஒன்று திரட்டி அந்தசபையில் ஒருநீண்ட பிர சங்கம் செய்து பின் "இராக், ஷாம் முதலியதேசங்களில் அற் புதமான ஜயப்பேரிகையைக் காட்டிவந்த என்னை ஸ்ரீமாந் உமற் அநியாயமாய் பிரதான சேனாதிபதி என்ற பதவியி லிருந்து முற்றாய் நீக்கிவிட்டார்" என்று உரைக்கவும், சபையி லிருந்த ஒரு சாதாரணசேவகன் எழும்பி 'உமது நாவை அடக்கு கின்றீரா? அல்லது இதற்கும் தாழ்ந்தகதியைத் தேடுகின்றீரா?' என்று சொல்லி, மேலும் 'கலகக் கொடியைக் கையில் எடுக் கின்றீரோ' என்றனன்.

ஸ்ரீமாந்காலித் பிரதியுத்தரமாக 'ஸ்ரீமாந் உமறுடைய ஆளு கையில் கலகம் என்ற வார்த்தையும்பிறக்கக் காரணமாகுமோ என்றும், நான் என் பிரலாபத்தை மட்டும் பொதுஜனங்க ளுக்குச் சொல்லவந்தேனே ஒழிய, வேறொன்றிற்குமல்ல' எனச்சொல்லி பிரசங்கத்தை முடித்து துக்கத்தோடு மதீனா நகர் வந்து சேர்ந்தார்.

அங்கே இராஜ சபை நடந்து கொண்டிருக்கும்போது ஸ்ரீமாந் காலித் அவர்கள் நேரே ஸ்ரீமான் உமற் அவர்களின் கொலுமண்டபத்தை அடுத்துவந்து "எங்கள் இராஜாவே! என்பால் இந்த அநீதிஞியாயமோ?" என்றனர்.

ஸ்ரீமாந் உமற் அவர்கள் பிரதியுத்தரமாக 'நான் உன் விஷயத்தில் காட்டிய இரக்கம் அநீதியாயிருந்தால் இப் பொழுதே இப்பதவியை நான் இழந்து விடுகிறேன். மேலும் அல்லாவுக்கும் அவருடைய சத்தியரசூலுக்கும் குற்றவாளி என்னைப்போல் உலகத்தில் வேறொருவனுமிரான். நல்லது உனக்கு இவ்வளவு திரவியம்யேது?' என்ன, ஸ்ரீமாந் காலித் அவர்கள் பிரதியுத்தரமாய் 'யுத்தத்தில்கிடைத்த தேவகடாட்சம் என்றும் பதிலளித்து மேலும் என்னிடம் 60000 ரூபாய்க்கு மேற் பட்டிருக்கும் திரவியத்தை கஜனாவுக்கு சேர்த்துக்கொள் ளுங்கள் என்றும் வினவி மன்றாடினர்.'

அப்படியே அவரிடம் மேற்குறித்ததொகைக்குமேல் இருந் த 20000 ரூபாயை பைத்துல்மாலுக்கு சேர்த்துவிட்டார்கள்.

என்றாலும் ஸ்ரீமாந்உமற் அவர்கள் காலிதை நோக்கி "உன்குற்றத்திற்கு என்னசொல்லுகிறாய்?" என்ன, ஸ்ரீமாந் காலித் "நான் குற்றவாளியே மன்னிக்கவேண்டுகிறேன்." என்று கேட்டுகொள்ள ஸ்ரீமாந் உமற் அவர்கள் உனக்கு என்னிடம் மன்னிப்பாவது நீ இதுமுதல் அபூஉபைதாவின்அதிகாரத்துக்குட்பட்டு அவருக்குக்கீழ்படிந்து நடக்கும் சேனாதிபதியே ஒழிய மற்றப்படி பிரதானசேனாதிபதியின் ஸ்தானத்தை இனி வகிக்க இடம் பெறமாட்டாய் என்றுசொல்ல, அப்படியே அவர் அதற்குச் சம்மதித்து நடந்து வந்தார்.

இதனால்,சத்தியமயமான இஸ்லாமார்க்கத்துக்கு விரோதியாக இருந்துகொண்டும் அம் மார்க்கத்தில் கடுகளவும் பரீக்ஷை யில்லாத சிலர், பொறாமை குடிகொண்டு, மனசாட்சிக்கு விரோதமாய் பேசத்தலைப்படுவோரின் வார்த்தைகளையும், அவர்களின் ஆபாசமான நூல்களையும், புறக்கணித்துத்தள்ளி விட்டு, ஆதி இஸ்லாமியரின் சுபலக்ஷணம் இவ்வாறாய் இருக்கிறதென்று தெரிந்து, அவர்களது உண்மையான சரித்திரத்தையும், திருக்குற ஆனையும் ஆராய்ந்து நன்மையைக் கடைப் பிடியுங்கள்.

மதஞானமில்லாத நமது இதர சமூகத்தார், இஸ்லாமியரும் அவர்கள் மதமும் முரட்டுத்தனம் கூடியதென்று சொல்லிவந்ததைக்கைகழுவி, இதை அடுத்து எழுதப்பட்டுள்ள சர்வலோக தயாபரரான மஹாந் முஹம்மத் நபீ அவர்களின் சில உபதேசங்களை படித்துக்களித்து இனி நமது நவீனகதா புத்தகசாலை யிலிருந்து கிரமமே வெளிவரும் நபீ அவர்களின் முழுச்சரித்திர நூலையும், அவசியமான ஏனைய கிரந்தங்களையும் தெளிந்த மனதுடன் வாசித்து பலனடைவார்களாக.

## மஹாந் முஹம்மத் நபீ அவர்கள் காலத்தில் இஸ்லாமியம் பரவிய இடங்கள்.

| எல்லைகளின் பெயர். | தற்கால ஆட்சியார். | பிரபலமான பட்டணங்கள். |
|---|---|---|
| 1 ஹிஜ்ஜாஸ் ... | துருக்கி சுல்தானவர்கள் ... | மக்கா, மதீனா, ஜித்தா, என்பூஃ, தாயிப், எலம்லம், பதர், ஹுனைன், கைபர், ஹஜர், தபூக், கம்பத், நஜ்ரான். |
| 2 எமன் ... | ஷை ... | சன்ஆ, ரூத், முக், ஹுதைதா, அதன், கமீர், கீவான், ஹூஹ்யா, ஸுபைதா, சஃதா, தமர், தூஸ், மாரப், குரா, தூரான், ஜுனைத். |
| 3 அஹ்சா ... | ஷை .. | கதீப், பஹ்ரைன், கௌபத், மக்ரீஸ், பூப், மனுமா. |
| 4 அம்மான் ... | மஸ்கத் சுல்தான் ... | மஸ்கத், பர்கா, ஷௌர், சோஹார், ருஸ்தாக், மர்பாத். |
| 5 ஜப்ல்ஷமர் ... | பதவி ... | ஹாயில், ஜோப், பரீதா. |
| 6 நஜ்த் ... | ஷை. ... | ராயிதா, தராயிய்யா, கான்கிய்யா. |
| 7 ஹலர்மௌத் ... | ஷை. ... | முக்லா, ஷஹர், தம்கூத், தரீம், சாதா, சோஹர். |

குறிப்பு:—இவ்வரசுரிமை 1904-வது வருஷத்திய கணிதத்தை அனுசரித்தது. இதில் முக்கியமான பட்டணங்களைமட்டும் எடுத்துக் காட்டியிருக்கின்றன. நபீ அவர்களின் காலத்துக்குள் அறபியாதேசமுழுதும் இஸ்லாமை அங்கீகரித்துக்கொண்டது.

# மஹாந் முஹம்மத் நபீ அவர்களுக்குப்பின் வந்த பிரதான ஸ்தாநாதிபதிகளின் காலத்தில் இஸ்லாமியம் பரவிய இடங்கள்.

| கலீபாக்களின் பெயர். | பிரபலமான பட்டணம். | ஷரா. |
|---|---|---|
| 1 ஸ்ரீமாந் அபூபக்கரவர்கள் ... | ஹேரா, ப்ருத்துக்கு மேற்கேயுள்ள இராக் தேசமுழுதும், திமஷ்க். | |
| 2 ஸ்ரீமாந் உமற் அவர்கள் ... | ஷாம், மிசர், ஈரான், தப்ரிய்யா, பலஸ்தீன், அஸ்கலான், பஃலபக், ஹம்ஸ் ஹலப், கெய்சரிய்யா, கின்ஸரீன், அந்தாகிய்யா, இஸ்கந்தரிய்யா, த்ராபல்ஸ், அஸ்தகர், அஸ்பஹான், தைநூர், தப்ரிஸ்தான், கர்மான், முதலியன. | இவர்காலத்தில் தான் நாலாயிரம்பள்ளிவாசல்கள் கட்டி முடியப்பெற்றன. |
| 3 ஸ்ரீமாந் உத்மான் அவர்கள் ... | வடஆப்ரிக்கா, கப்ரஸ், பாரிஸ், கன்ஜ, பரூஆ, ஷர்வான், குராசான், திப்பஸ், தூஸ், ஹிராத், சீசிஸ்தான், பயல்கான், தாலிகான், காரியாப், சர்கஸ். | |
| 4 ஸ்ரீமாந் அலீ அவர்கள் ... | கூபா, முதலிய சிலபிராந்தங்கள். | |

## தற்காலம் இஸ்லாமியம் பரவியுள்ள பிரதான பிரதேசங்கள்.

| கண்டங்கள். | தேசங்கள். | ஷரா. |
|---|---|---|
| 1 ஆசியா ... | அறபியா, ரூம், ஈரான், ஆப்கானிஸ்தான், பெலுசிஸ்தான், துர்க்கிஸ்தான், ஆசியா ருஷியா, இன்தியா, சீனிதாதார், டிபெட், சைனு, இந்திய தீவுகள், லங்கா, மலாயா, கீழ் இந்திய தீவுகள், பர்மா. | |
| 2 ஐரோப்பா ... | *ஐரோப்பா துர்க்கி, கிரீஸின்வடபாகம், கிரீஸின் தீவுகள், ஐரோபா ருஷியா துருக்கியின் சிறுகடல் தீவுகள், கிரிமியா, போற்டுகெல், ஸ்பெயின், ப்ரான்ஸ், இட்டலி, ஸிஸிலி, மால்டா, சார்டினு, இங்லான்ட். | *முதன்முதல் இங்கிலான்டிலுள்ள, லிவர்பூல் நகரில் மிஸ்டர் குயிலீம் என்ற ஒரு ஆங்கிலேயர் இஸ்லாமார்க்கத்தைத் தழுவியதிலிருந்து அங்கே அவர் இஸ்லாமதத்தைத் தழுவிய ஓர்பாடசாலையும் அத்துடன் ஒருமாதாந்தரப்பத்திரிக்கையும் நடத்தி வந்தார். இப்பொழுதும் இங்க்லாண்டில் ஸர்ரே மாகாணத்திலுள்ள வோவ்கிங்நகரில் இஸ்லாமிய மிஷின் ஒன்று ஏற்பட்டு, மகாசுறுசுறுப்பாயும் பிரபலமாயும் காரியம் நடத்தி வருகிறது. தேர்ந்த கல்விமான்க ளெல்லாம் இஸ்லாமதத்தை அநுசரித்து குணப்பட்டுவருவது கவனிக்கதக்கதேயாம். |
| 3 ஆப்பிரிக்கா ... | எகிப்த், நியூபா, ட்ரிபோலி, ட்யூன்ஸ், அல்ஜீரியா, அபிஸீனியா, சௌடான், ஆப்பிரிக்காவின் வடபாகம், தென்பாகம், கேப்காலோனி, நெட்டால், ஸோலிலான்ட், இந்து சமுத்திரத்திலுள்ள ஆப்ரிக்காவின் தீவுகள், ஆப்ரிக்காவின் கீழ்கரை. | |
| 4 அமெரிக்கா ... | †இரண்டொரு இடங்களில் மிகச்சொற்ப பெயரே. | †இவ்விடத்தில் மிஸ்டர் வெப் என்பவர் முதல் முதலில் இஸ்லாமதத்தை அங்கீகரிக்கலாயினர். இவர் மூலமாகவும் அங்கே ஒருபாடசாலை திறக்கப்பட்டு ஒரு மாதாந்தர பத்திரிக்கையும்நடைபெற்று வருகிறது. |
| 5 ஆஸ்ட்ரேலியா.. | ஷை | |

குறிப்பு—தற்காலம் உலகமுழுதும் நாற்பதுகோடி ஜனங்கள் இஸ்லாமதத்தை அனுசரித்துவருகின்றனர்.

# முகவுரை.

## உம்மீ நபீ.

மஹாந் முஹம்மத் நபீ அவர்களுக்கு முன், தீர்க்கதரிசிகள், தூதர்கள், என்னும் பதவியுடன் எழுந்தருளிய பலபக்த சிரோமணிகளின் சரித்திர திவ்வியத்தையும், அதன் சார்பாய் வெளிவந்திருக்கும் பாரம் பரியங்களையும் கவனிக்கும்போது அவர்களில் சிலர் நபீ சிரஸ்தத்தை வகிப்பமுன், இலௌகீக முறையாய் எழுதப்படிக்க கற்பிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாய்ப் புலப்படுகின்றது.

அப்படியே திருகுற்ஆனிலும் இதற்கு அநுகரணமான பற்பல ஆதரங்களுண்டு.

வேறு சிலரைப்பற்றி சிந்திக்கும்போது, அவர்கள், யாதொரு குருவினிடத்தில் வாசித்ததாகவோ, அல்லது வாசிக்கவில்லை என்றோ, முற்றிலும் சொல்லப்படாவிட்டாலும், அதுபற்றி அவர்களையுங்கூட நபீ நிஷ்களத்திற்கு முன் உலகப்பான்மையாய், சப்த, அட்சர, பயிற்சியில் பலனடையவில்லை என்று தீர்மானிக்கத் தகாது.

ஏனெனில் திருகுற்ஆனும், அதன் சார்புநூல்களும், இதைப்பற்றி இவர்கள்பால் மௌனம் சாதித்தபோதிலும், திருகுறு ஆனில் இடத்துக்கிடம் இவர்களைப்பற்றி வந்திருக்கும் சரித்திரத்தோரணியைக் கூர்ந்து ஆராயும்போது ஒரு வகையாய் இவர்களையும் நபீ அவதாரத்திற்கு முன் ஆசிரிய ஞசிரமத்தில் அமர்ந்துகற்றவர்களென்றே தீர்மானிக்க வேண்டும்.

மகாசங்கை பொருந்திய திருகுறுஆனில் ஸ்ரீமத் இப்ருஹீம், ஸ்ரீமத் யஃகூப், ஸ்ரீமத் லுக்மான் ஆகிய தீர்க்கதரிசி

கள், தங்கள், தங்கள் புத்திரர்களுக்கு உபதேசித்து வந்திருக்கும் அருளாமிர்த வாக்குகளைப்பற்றியும், அப்படியே அவரவர்கள் நிரியாணதசையில் தங்கள் தங்கள் குமாரருக்கு கடைசியாய் போதிக்க, அதற்கு புத்திரர் பதில் அளித்திருக்கும் வாக்குறுதிமொழிககளைப்பற்றி, தெளிவாய் விஸ்தரித்துவரும் திருகுறுஆனின் திருவசனங்களை நோக்கும்போது அத்தகையார் மிக நீண்டகாலமாக தங்கள் தங்கள் பிதாக்களின் ஊழியத்தில் பண்பட்டிருந்து அவர்களின் சப்த, அட்சர வாயிலாய் அவர்களிடம் லௌகீக வைதீக கல்விகளை கற்றே வந்திருக்கிறார்களென்று நிச்சயமாய்ப் புலப்படுகிறது.

அப்படியே அவர்களின் முன்னோரும் நபீ பதவிக்கு முன் எந்த புரோகிதரையாவது பின்பற்றி எழுதவாசிக்கக் கற்று வந்திருக்கவேண்டும் என்பதற்குரிய விசேஷ அறிகுறிகள் காணப்படுவதால் அத்தகையாரையும் அவ்வண்ணம் நிதானிப்பதில் தோஷம் ஒன்றும் ஏற்படாது. மேலும் அவர்கள் உலகமுறையில் பிரிதொருகுருவை அடுத்து கலைகளைக்கற்றுக்கொள்ளவில்லை என்று எந்த சந்தர்ப்பத்திலேனும் தாமேயாவது சொல்லி இருக்கத்தகுந்த யாதொரு ஆதாரமும் காணப்படவில்லை. ஆகையால் அவர்களெல்லாரையும் நபீ சிரேஷ்டத்திற்கு முன் எழுதவாசிக்க கற்றுக்கொள்ளவில்லை என்று தீர்மானிக்க யாதொரு ஞியாயமு மில்லை. இதுநிற்க:—

இனி உலகத்தில் பற்பல இடங்களில், பற்பலகாலங்களிலும், தோன்றி இருக்கும், சிலவேதாந்த ஞானிகளையும், சந்நியாசிகளையும்பற்றி பேசும்பொழுது அவர்களில் சிலர்யாதொரு மதத்தையும் சாராமலும், சிலர் சார்ந்து மிருந்து வந்தபோதிலும், பெரும்பாலர் இல்லற தர்மத்தை விட்டு நீங்கியும் சிலர் நீங்காமல் இல்லறவாழ்க்கையுடன் இணைந்துமிருந்துகொண்டு அரும்பெரும் நூல்களை இயற்றி இருப்பது உண்மையே.

என்றாலும் அதனால் அவர்கள் உலகப்பான்மையாய் கற்றறிந்தவர்களல்ல என்பதற்குப் போதுமான அத்தாட்சி கிடைக்கவில்லை.

ஏனெனில் அவர்களின் உண்மையான ஜீவிய விருத்தாந்தத்தைப்பற்றி தேசியசரித்திரத்தைப்பொருந்தியும், காலக்கிரமத்தை அநுசரித்தும், தகுந்த ஆதாரத்தைக்கையாடி எழுதப்பட்ட யாதொரு விசேஷநூலாவது வெளிக்கிளம்பினதில்லை.

ஆனால் ருஜுவுக்கு எடுத்துக்கொள்ளக்கூடாத சில சரித்திரங்கள் வெளிவந்திருப்பது மெய்யே. என்றாலும், அத்தகைய கிரந்தங்களை ஆராயும்போது அவைகளிலுங்கூட அவர்களைப்பற்றி அவர்கள், யாதொரு உபாத்திமை ஊழியத்திலிருந்து கற்றவர்கள் என்றோ, அப்படிக்கன்றி வரப்பிரசாதம் பெற்ற கலைக்யானிகள் என்றோ சரியான ஞியாய ஆதாரத்துடன் தெளிவாய்க் கூறப்படவில்லை.

இத்தகைய நூல்களின் சரித்திரப்போக்கை நோக்கினால் மிச்சமானவர்கள் உலகத்தை வெறுத்த சந்நியாசிகளின் ஆசிரமங்களில் போய்ச்சேர்ந்து, வெகுகாலம் அவர்களுடையவாஞ்சனையில் உறவாடியும் அவர்களின் போதனைவண்மையில் சகாயமடைந்தும் அவர்கள் மூலமாய்க் கற்றறிந்து வந்திருக்கிறார்கள் என்றுசொல்ல யாதொரு ஆட்சேபணையுமிராது. மேலும், அவர்கள் தாமேயாவது வரப்பிரசாதம்பெற்ற ஞானியேயொழிய உலகமுறையாய் எழுத வாசிக்கக்கற்றுக்கொள்ளவில்லை என்று அவர்களில் ஒருவரேனும் சொல்லி இருப்பதாய் ஏற்படவில்லை.

ஒருவாறு அவர்களை உலகவழியாய்க் கற்றறியாமல் வரப்பிரசாதம் பெற்ற கல்விமான்கள் என்றே வைத்துக்கொண்டபோதிலும் அவர்கள் தங்களை மதஸ்தாபகர் என்றநபீ, ரசூல் என்னும் இவ்வுயர் தரப்பதவிக்கு வாதாடினவர்களல்ல என்பது பிரத்தியட்சமேயாம்.

ஆனால் இதுவிஷயமாய் நபீ, ரசூல், என்னும் பதவியை வகித்தவர்களில் இற்றைக்கு 1300-வருஷத்துக்கு முன் அறபியாவில் அவதரித்துப் பிரகாசித்த மஹாங்முஹம்மத் நபீ அவர்களின் இயல்பைப்பற்றி விசாரிக்கத்துணிவோம்.

மஹாந் நபீ அவர்களின் பிரவர்த்தியில் அவருக்கு நாற்பதுவயது பூரணமாகும் வரை அவர் யாதொரு பாடசாலையைத் தேடினவரென்ருே, எப்போதாவது ஒரு அட்சரத்தை தம்கைப்பட எழுதினவரென்ருே அல்லது யாதொரு ஆசிரியனைத்தேடி எழுத வாசிக்கப் பயின்றவரென்ருே சொல்லி ரூபிக்க யாதொரு அத்தாட்சியுங்கிடையாது.

அப்படியே மஹாந் நபீ அவர்களும், நபீ சிரேஷ்டத்தை வகிக்கும்வரை இலௌகீக வழியாய் எழுத வாசிக்கக் கல்லாத **உம்மீ** என்னும் **செஞ்சோலிமழலை** என்றே தம் தேசவாசிகளால் அழைக்கப்பட்டு வந்திருக்கிருர்.

மஹாந் நபீ அவர்கள் நபீ, ஸ்தானத்தைப் பெற்றபின் முதல் முதல் முழுதும் விக்கிரக பக்திக்காரராயிருந்த மக்கா ஜனங்களுக்கு கடவுளின் ஏகத்துவத்தைக்குறித்து பிரசங்கித்த பொழுது, ஜனங்களெல்லாரும் என்ன ஆச்சரியம், இவஞ அப்துல்லாவின் குமாரன் முஹம்மத்! அவன் எழுத வாசிக்கத்தெரியாத **நிரக்ஷரமக்கீ** அல்லவா? இவன் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளோ செவியலங்காரம், நாவலங்காரம், கருத்தலங்காரம் முதலிய பல லட்சணங்கள் பொருந்தி இருக்கின்றதே! ஒரு அட்சரத்தையேனும் எழுத வாசிக்கக்கல்லாத இவனுக்கு இவ்வளவு ஞானமாய்ப் பிரசங்கிக்கும் வன்மை எப்படிக்கிடைத்தது? என்று அவர்கள் விசாரித்திருப்பதற் குரிய அநேக உண்மையான கிரந்தங்கள் ஆதாரமாயிருக்கின்றன.

அவ்விதமே அறபியாவில் மிகப்பெயர் போன **லுபைத் பின் ரபீஆ, கஃப் பின் மாலிக், ஹஸான் பின் தாபித், அப்துல்லா பின் கீஸ், அபூதுவைப், அஃஷா, நாபிகாஜஃதீ** முதலிய பிரபல பண்டிதர்களெல்லாம் எழுத வாசிக்கப்பயிலாத கூர்மையான ஒரு அற்புத நாவே எங்களது கவித்திறமையைச் சுட்டு நாசமாக்கிவிட்டது என்று ஆரவாரித்திருக்கும் கூச்சல்களும் விசேஷசாட்சியாய்த் துலங்குகின்றன.

மேலும் மகாகீர்த்திபெற்ற வலீத் பின் முகீகய்யரா என்ற கவிராயன் எழுதவாசிக்கப்பயிலாத ஒருநாவுக் கெதிரே 60 வருடங்களாய் கவிகளையே உச்சரித்துவந்த என் சண்டாள நாவு கோழையாய்விட்டது உண்மையேஉண்மை. அந்தஅற்புத நாவே உலகத்துக்கு ஆச்சரியம் என்று சொல்லி இருக்கிறான்.

இதுவன்றி நபீ அவர்களின் காலத்திலும், அவர்களுக்கு பிற்காலத்திலுமுள்ள பிரபல சரித்திராசியர்களெல்லாம் அறபியாவின் நபீ ஒருவரே அவர்தம் 40 - வயதுவரை ஒரு அட்சரத்தையேனும் எழுதவாசிக்க கல்லாமலிருந்து பின் அற்புதமாய் சகலகலை ஞானங்களையும் கற்றுத்தேறிய வாக்குச்சாதுரியராய் விளங்கினார் என்றும், அவர் அறபியாவின் மூடபக்தியை நீக்கவந்த ஒரு வழிகாட்டியாயும், பிரபஞ்சத்திற்கே ஒரு விசேஷ ஒளியாயும் துலங்கினார் என்பதற் கையமில்லை என்றும், கோடிக்கணக்கான ஜனங்கள் அவரது அடிச்சுவடுகளில் நடந்து கடவுளுக்கு தங்களை ஒப்புக்கொடுத்து வருகிறார்கள் என்றும் தகுந்த ஆதாரத்துடன் ருசுப்படுத்தி தங்கள் தங்கள் கிரந்தங்களில் எழுதியிருக்கிறார்கள்.

மஹாந் நபீ அவர்களும் மக்காஜனங்களுக்கு தம்மைக் குறித்து பின் வருமாறு சொல்லிக்காட்டுகிறார். அதாவது:—

"ஜனங்களே! நீங்கள் ஆதியோடந்தமாய் எனது விருத்தாந்தத்தை தெரிந்திருக்கின்றீர்கள். உங்களுக்குள்ளேயே நான் வளர்ந்து பிரவர்த்தி அடைந்து வருகிறேன். மேலும் என்றென்றும் உங்களுடனேயே சஞ்சரித்து திரிகின்றேன், எனது முன் பின் நடு நிலைமைகளை செவ்வனே தெரிந்தநீங்கள் இப்பொழுது என் வாயிலிருந்து புறப்படும் அருள்வாக்கினால் உங்கள் மனசாட்சிக்கு விரோதமாய் என்னை எழுதவாசிக்க கற்றவனென்றுசொல்ல உன்னுகிறீர்களோ? ஆ! ஆதியோடந்தமாய் நீங்களே எனக்குசாட்சியாய் இருக்கிறீர்களே!" என்றனர்.

அப்படியே திருக்குறுஆனும் அவரைப்பற்றி பின்வருமாறு சாட்சிபகர்கின்றது:—

"தீர்க்கத்தரிசியே! நபீ பதவிக்குமுன் நீ யாதொரு கிரந்தத்தையேனும் வாசித்துக் கொண்டிருந்தது மில்லை. நீ உன் வலது கரத்தினல் யாதொன்றை எழுதிக்கொண் டிருந்தது மில்லை"......என்பதாம்.

இவ்வாறு ஆக்ஞாபித்திருக்கும் தேவ திருவுளத்தினுலும் ஏனைய பற்பல ஆதாரங்களினுலும் அறபியாவின் தீர்க்கத்தரிசியாகிய மஹாந் முஹம்மத் நபீ அவர்கள் ஒருவரே அவரது ஜீவியமுழுதிலும் உலகப்பான்மையாய் பிறிதொரு ஆசிரியனிடம் கற்றுக்கொள்ளாமல் தெய்வசகாயத்தில் பரிசுத்த ஆவியாகிய ஜிப்ரீல் என்னும் தேவதூதர் மூலமாய் சகலகலை ஞானங்களையும் கசடற கற்ற மஹாத்துமாவென்று பிரகாசிக்கிறுர்.

ஆகவே இத்தகைய காரணங்களினுல் நபீ பெருமானவர்கள் உலகவழியாய் எழுத வாசிக்கக்கற்றுக்கொள்ளாத பரிசுத்த உம்மீ நபீ என்றுதெரிந்தும், அவர் நபீஸ்தானத்தை வகித்தது முதல் மகாபரிசுத்தம் தங்கிய ஜிப்ரீல் என்னும் தேவதூதரின் சமுகத்தை அடுத்திருந்து அவர் மூலமாய் கடவுளது கடாட்சத்தினுலே சகல ஞானங்களையும் கற்றுத்தேறிய மகாஞானி என்றுணர்ந்தும் சித்தி அடையப்பெறும் இருதயமே சுத்த இருதயமாகும்.

அப்படியே மஹாந் நபீ அவர்கள் 23 வருஷக்காலமாய்பரிசுத்த ஜிப்ரீல்என்னும்தேவதூதரின் மூலமாய்தமக்குக்கிடைத்த வஹ்ய் என்ற அருள்வாக்கை உட்கொண்டு வெளியிட்டிருக்கும் பரிசுத்த திருக்குறு ஆனை சுயம்பான அல்லாஹுத்த ஆலாவின் திருவாக்கென்று நம்பியும், அதற்கு உபவசனங்களாய்த் துலங்கும் அஹாதீஸ் என்னும் வாக்குகளை நபீ அவர்கள்தாமே சுயமாய் அருளிய, தெய்வ கடாட்சம், பெற்ற திருவாக்கு என்று நிச்சயித்து இதை அடுத்து திரட்டிச்சேர்த்திருக்கும் நபீ அவர்களின் உபதேசவாக்குகளை வாசித்து அதன்படி நடந்துவர காருண்யக் கடவுளாகிய அல்லாஹுத்த ஆலா நம்மெல்லவர்க்கும் அவரது கடாட்சத்தைக் காட்டுவாராக.

இந்நூலுக்கு முன்னுரையாக எழுதப்பட்டிருக்கும் விருத்தாந்தங்கள் நபீ அவர்களின் பரிசுத்த ஜீவியத்தையும், அவரது காரிய விர்த்தியையும், அவரது உபதேசப்பலனையும் விளக்கிக் காட்டுவதால் அவைகளே இந்நூலுக்கு விசேஷ சிறப்பெனக் கொள்ளவேண்டும்.

## அபிமானிகளே !

நபீ அவர்களின் இவ்வுபதேச ரத்நம், நம்தம் முஸ்லிம் வகுப்பார்க்கு ஞானநேத்திரமாகவும், பொதுநோக்கு வாய்ந்த இதர சமுகத்தாருக்கு தெளிவுறு ஞானகருவியாகவும் வுதவியாகும்படிக்கு மஹாத்மாவான முஹம்மத் நபீ யவர்களின் திருவுள்ளத்தையும், அவர்கள் தங்கள் சத்தியமயமான வாழ்க்கையையும் லேசாக விளக்கும் லக்ஷியப்பொருளாய் மதிக்கப்படுமென்ற வுத்தேசத்தோடு இனிமையாய்த் தமிழில் சுருக்கமாகத் திரட்டத்துணிந்தனம். லோகத்தில் பெரும்பாகம் வியாபித்திருந்த கோடிக்கணக்கான ஜனங்களின் அன்பைக் கவர்ந்த அப்பெரிய இஸ்லாம் மதஸ்தாபகரின் ஒப்பற்ற இருதயத்தை நாம் பழகுதல், நல்வழியெய்தற்கு ஏற்ற தென்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். நமது வாழ்நாட்களை தூய்மையானவழியில் செலுத்தவல்ல இந்த வுபயோககரமான கற்பனைகளை ஒருமுறைகூர்ந்து பார்வையிட்டால், நாமெல்லோரும் சன்மார்க்க ரூபமாகவே ஜீவனத்தைத் தேடிக்கொள்ளவேண்டுமென்று அவதரித்த முஹம்மத் நபீ யவர்களின் சமத்துவக் கருத்து ஜகஜ்ஜோதி போன்றிருக்கிறது. நாம் மனோவாக்கு காயங்களாகிய திரிகரணங்களினாலும் சத்தியஞான மதத்தை சீராட்டிவரவேண்டியது ஆவசியம். ஒருவார்த்தையாக சொல்லுமிடத்து நமது இல்வாழ்க்கையும், சிநேக சம்பந்தமும், உத்தியோகவிஷயமும், லோகோபகார விவகாரமும் தெய்வ மார்க்கத்தின்படி, களங்கமற்றதாய், தெய்வ அன்பும் அச்சமுமுடையதாய், சத்திய விரதத்தினதாய், தர்மநீதியாய், உபாசனையோடு கூடினதாய், ஆத்மத்தியாக மயமாய், ஜீவஜந்துக்கள்

யாவற்றினிடத்தும் தயை தாக்ஷண்யம் முதலிய பூரணமாகப் பூண்டதாய் ஊக்கத்தோடு இருக்கக்கடவன. பிரபஞ்சத்திலுள்ள சர்வஜன ஸம்பிரதாயங்களும் சத்தியத்தையே அவரவர்களுக்கு அனுக்கிரகிக்கா நிற்பதாக முறையிடுகின்றன. அவைகளில், முஸ்லிம்கள் பரமபாவன பொக்கிஷம்போலப் போற்றத்தக்கபடிக்கு அவர்களுக்குக் கிடைத்த உலகத்திற்கே சர்வோத் கிருஷ்டமான சத்திய மார்க்கமாகும் திருக்குறஆனை அது மதாசாரியரான முஹம்மத் நபீ யவர்கள் தம் வம்சஸ்தர்களான உலகத்தார் மாட்டு வைத்திருந்த யோக க்ஷேம வுத்தேசத்தைக் குறித்தும், தாம் சம்பாதித்த மகோன்னதமான பதவியைச் சுட்டியும், சகல வேதார்த்தனும், சகல லோக கர்த்தாவாயும், சர்வக்ஞான சொரூபியாயும் பிரகாசிக்கும் கடவுளைத் தாம்தெளிந்த பராபர ஞானத்தைப்பற்றியும், சவிஸ்தாரமாய் ஸ்தாபிக்கப்பண்ணுகிறதை நம்மில்பலர் திட்டமாய்த் தெரிந்திருப்ப ரென்பதற்கு சம்சயமில்லை. அவ்வளவு கௌரவம் இருந்தும், தேவவாக்காகிய திருக்குறஆனுக்கு சார்பு நூலாய் விளங்கும் தம் திருவாக்காகிய அரிய கட்டளைகளைநாடி அவை தெய்வவாக்சென்று தாம் தாமே கோரினாரில்லையென்றறிகிறதிலிருந்து அம் மஹாத்மாவினது மாட்சிமைக் குணமும் பெருந்தகை இயல்பும் இருந்தவாறு, நம்மனதிற் பதியாமற்போகாது, இஃது என்றன் தீர்மானம். இவைகள் அறபிபாஷையில் அடிப்படுத்திய தம்செல்வாக்கை என்னால் கொண்டாடவே அசாத்தியமாகிறபோது எப்படி அநுஷ்டிப்பதோ, கிருபாநிதியாகிய அல்லாவே துணைபுரிவாராக. அத்தகையநூல், தற்போது, பொருளால் ஆத்மாவிக்கின்பம்போலவே, வந்துளது. இது உலகசரிதத்தில், ஒரேவகுப்பார்க்கென்றும், ஒரேகாலத்திற்குத்தான் உபயோகமென்றும் இல்லை, எந்த சமயத்திலுமுள்ள எந்த சமயத்தார்க்கும் ஒப்புமைச்சால்புடையது.

M. A. மலிக்.

மஹாந் முஹம்மத் நபீ அவர்களின்

# உபதேச ரத்நம்.

நபீ அவர்களின் பிரதான கற்பனைகளாவன:—

1. என் வசனங்களை, தீர்மானமாய் அறிந்து கொண்டாலொழிய நீங்கள் பிறருக்குத்தெரிவிக்காதீர்கள்.

2. உறுதியாயும் உண்மையாயும் நம்புகிறவர்களென்று உன்னு லறியப்படுகிறவர்களுக்கே யன்றி, மற்றவர்களுக்கு என் போதனைகளை வெளியிடாதே.

3. என்னுடைய நல்லாத கோட்பாடுகளை அல்லது கற்பனைகளை என்னுடையதென்று சொல்லுகிறவர்கள் நரகபாதைக்குட் படுவார்கள்.

## 1—இஸ்லாம்.

(a) இஸ்லாம் என்பது தேவகற்பனைகளைத் தாழ்மையுடன் மரியாதை செய்வதும் அவரது சித்தத்துக்கு தன்னை ஒப்புவித்தலும், அவருடைய சிருஷ்டிகளிடத்தில் இரக்கங் காட்டுவதுமே.

(b) இஸ்லாமியம், ஈஸ்வராக்ஞைகளுக்கு அதிபயபக்தியை பரிபாலிக்கிறதிலும், அவரது சிருஷ்டிகளிடம் அநுதாபத்தை வளர்க்கிறதிலுமே, அடங்கியுள்ளது.

## 2—இஸ்லாமிய தத்வார்த்தம்

1. தெய்வீக ஒழுக்கத்தில் நீங்கள் பெருகுங்கள்என்பதே.

## 3—(அல்லா) கடவுளே கதி.

* கடவுள் ஒருவரையே நம்பியிருங்கள். ஆனாலும், உங்கள் ஒட்டகத்தை நீங்களே பிடித்துக்கட்டப்பாருங்கள்.

---

* வைதீகத்திற்போலவே இலௌகீககாரியங்களிலும் கிரமமாய் நடந்து கொள்ளுங்கள்.

## 4—சாயுச்சியம் அல்லது தேவஐக்கியம்.

பகவானுடைய கிருபையைப் பாருங்கள். அவர் அருளும் திருவாக்கு இதுவே:—

1. "ஓ மானவரே! என்னுடைய சட்டங்களை மட்டும் கடைப்பிடித்தால் நீங்கள் என் லக்ஷணத்தில் குணப்படுவீர்கள்" என்பதாம்.

2. ஒவ்வொன்றையும் பிரகாசிக்கச்செய்கிற கருவி ஒன்றுண்டு; இருதயத்தை விளக்கக்கூடியது அல்லாவை அனுசந்தானம் புரிவதேயாகும்.

3. கடவுளைச் சந்திக்க விரும்புகிறவரை, அவர் சந்திக்க விரும்புகிறார்.

எனது ஆண்டவர் எனக்கு கட்டளையிட்டிருக்கிற விஷயங்கள் ஒன்பதுவா:—

1. பகிர் முகத்திலும் அந்தரங்கத்திலும், சுயம்பான அல்லா ஒருவருக்கே வழிப்பட்டு வணங்க வேண்டுமென்பது பிரதானம்.

2. வாழ்விலும் தாழ்விலும் நியாய பூர்வகமாய், மெய்ம்மையே பேசவேண்டும்.

3. சம்பத்திலும் வறுமையிலும் அடக்கமாயிருத்தல் சாலவும் அழகு.

4. நம் உற்றார் உறவினர் நமக்கு உதவாவிட்டாலும், நாம் அவர்களுக்கு உபகாரம் புரிவதே உசிதமான தர்மம்.

5. நமக்கு தருமங்கொடுக்க மறுக்கிறவருக்கு, நாம், அவர் காலத்தில் செய்ய, பின்வாங்குதல் தருமமன்று.

6. நமக்குத் தீமை நாடினவர்களுக்கு நாம் மன்னிப்பையே நாடவேண்டும்.

7. நமது மௌனமானது பராபரனது ஞானத்தைஅடையத்தக்கதாயிருத்தல் வேண்டும்.

8. நாம் வாய்திறந்து பேசுமுன், கடவுள் நாமோஸ்ச் சாரணஞ் செய்துவிட்டுப் பின்பேசவேண்டும்.

9. நாம் கடவுளுடைய சிருஷ்டிகளை கவனிக்கும் போது நாம், அவைகளிலிருந்து ஒரு படிப்பினை யடையும்படிக்கு, ஏதுவாய்; கவனித்து வரவேண்டும். நாம் நீதியான நெறியிலேயே நடக்கும்படி கடவுள் நமக்கு நியதி செய்திருக்கிறார்.

## 5—இருதயம்.

1. மெய்யாகவே, மானவனுடைய சரீரத்தில் ஓர் மாமிசக் கண்டம் உளது., அது பரிபக்குவமாயிருந்தால், சரீராதியந்தமும் சுகிர்தமாயிருக்கிறது. அது பழுதுபடுமானால், பூரணசரீரமுங்கெடுதலுறுகிறது. அது யாதென்றால், அதுவேஇருதயக் கமலம்.

## 6—எண்ணங்கள் அல்லது நோக்கங்கள்.

1. செய்கைகளை அவைகளின் நோக்கத்திலிருந்து நிதானிக்கப்படவேண்டும்.

2. மனம், வாக்கு, காயம் இம்மூன்றிலும் உண்மையுள்ளவர் யாரோ, அவரே, வாஸ்தவத்தில் சத்திய சந்தனரென்ப.

3. முன்னிலையில் உள்ளபோதும், இல்லாதபொழுதும் தம் சகோதரரை ஆதரிப்பாரே, அறிவுடையராவர்.

## 7—பெற்றோர் பெரியோர் வணக்கம்.

1. வயோதிகரான பெற்றோர்களுக்கு சிஸ்ருஷை பண்ணுத வொருவர் ஒருநாளும் முக்தியடைய மாட்டார்.

2. மோக்ஷம், மாதாவின் சரண யுகங்களில் கிடக்கிறது.

3. விர்த்தாப்பிய பிராயத்தையுத்தேசித்து பெரியோர்களை கண்யப்படுத்துகிற ஒவ்வொரு பால்யனுக்கும், அவர் தமக்கு வயது தளர்ந்த பொழுது, கனம்பண்ணும்படி அவருக்கு அநேகரை என் ஆண்டவர் ஏற்படுத்துகிறார்.

4. பிதாவின் சந்தோஷமே, அல்லாவின் சந்தோஷம். பிதாவின் வெறுப்பே, அல்லாவின் வெறுப்பாகும்.

## 8—அநுதாபம்.

எனக்கு அருளிய அல்லாவின் திருவாக்கு:—

1. நீர் உம்முடைய சிருஷ்டி கர்த்தாவை நேசிக்கிறீரா? முதன் முதலில் உம்மை யொத்த தோற்றங்களிடம் விசுவாசம் பாராட்டக்கடவீர்.

2. மனுக்குலத்திடத்து இரக்கமில்லாதவர் சார்பாய் கடவுள் இரக்க மொன்றிலர். மெய்ம்மையும், தூய்மையும், தயையு முள்ள உள்ள முடையவர், ஆநந்தப் புவனத்தை ஆளுவார்கள். தெய்வத்தின் சிருஷ்டிகள் விஷயமாயும், அவரது சொந்த அடிமைகள் விஷயமாயும், எவர்,பட்சம் பாராட்டாது இருக்கிறாரோ, அவர் விஷயமாய், கடவுள் பட்சங்கொள்ள மாட்டார்.

3. அநாத பிள்ளைகளை சம்ரக்ஷிக்கிறவரை, என்னுடைய தீர்ப்பு நாளில், என்னோடு, இரண்டற சேர்த்துக்கொள்வேன்.

4. விதவாஸ்திரீகளை பத்திரமாய்க் காப்பாற்றுவது, தயா விருத்திக்கு சாக்ஷிபோல்வது.

5. ஆபத்திலகப்பட்டார்க்கு, ஆதரவு கொடுப்பாயாக.

6. வழிப்போக்கரை, அமுது செய்விப்பது, தர்ம கைங்கிரியங்களில் ஒன்றென்ப.

7. எவர் குழந்தைகள் பேரில் அன்பில்லாமலும், பெரியோர்களை மதியாமலு மிருக்கின்றாரோ, அவர் நம்மவரல்லர்.

8. தளர்ந்தவர்களை சந்தோஷப் படுத்துகிறவர்களும் துன்பப்பட்டவர்களை உபத்திரவத்திலிருந்து நிவர்த்திக்கிறவர்களும் சீக்கிரத்தில் பிரதிபலனை யடைவார்கள்.

9. ஆபத்காலத்தில் ஜீவஜந்துக்களுக்கு சகாயம் பண்ணுகிறவரும், இடுக்கண் உற்றவருக்கு இன்பந் தேடுகிறவருமா

யிருக்கிறவருக்கு, கஷ்டம் நேர்ந்த காலத்து, கடவுள் துணை புரிகுவார்.

10. பரிசுத்த தேவனுக்கு நிரம்பவும் பிரியப்பட்டவர் யாவர்! அவருடைய சிருஷ்டிகளுக்காக வேண்டி, எவர்பால் மகத்தான நன்மை பிரவிர்த்தியாகிறதோ, அவரே யென்ப.

11. தம் சகோதரர்களது சங்கடத்தை சங்கரிக்கிறவர் எவரோ அவருடைய பாபங்களை கிருபாநிதியான கடவுள் மன்னிக்கின்றார்.

12. மன் பிழைகளுக்கு,யாவரால் மகோபகாரம் உண்டாகிறதோ, அவரே, மற்றவர்களிலும் உயர்தர பதவி வாய்ந்தவர்.

13. சர்வ சிருஷ்டி வர்க்கங்களும், தெய்வ ஆட்சிக்குட்பட்டவைகள். ஆகையால், யாரொருவர் அவைகளுக்கு அதிக நன்மை செய்ய முயலுகிறாரோ, அவர் கடவுளுக்கு பெரிதும் பிரீதியானவர்.

14. எவரெவர் ஏழை எளியார்களுக்கு, இதம் இயற்றுகிறாரோ, அவருக்கு இம்மையிலும் மறுமையிலும் பகவானது அநுக்கிரகம் உண்டாகும்.

15. என்னுடைய தயையை கோருகிறவர்கள், ஏழை எளியார் விஷயமாய், தயை பாராட்ட வேண்டும்.

16. அல்லாவின் கோபதாபத்தை உங்கள் தர்மகுணத்தால் நீக்கிக்கொள்ளுங்கள். ஆனால் அந்தக்குணவிசேஷம்; ஒரு அளவாய் இருக்கக்கடவது. உனது சக்திக்கேற்றவாறுவது அறஞ்செயவிரும்பு, ஒரு பாதி பேரீச்சம்பழமானாலும், விசாரமில்லை.

நபீ யவர்கள் தம் அருமைத்துணைவிக்கு அருளும் வாக்காவது:—

17. ஓ ஆயிஷாதேவி! ஏழைகளுக்கு ஏதேனும் கொடாமல்மாத்திரம் விரட்டி விடாதே. உன்னுடையதானம் ஒரு பாதி பேரீச்சம்பழம் போன்ற சிற்றளவினதாயிருந்தாலும் இருக்கட்டும்.

## 9—தெளிந்த பக்தி.

1. எது நீதியோ, அது துலக்கமாய் விளங்குகிறது. எது அநீதியோ அதுவும் ஸ்பஷ்டமாய்த் தோற்றுகிறது. ஆயினும் இவ்விரண்டனுக்கு மிடையே சில சந்தேகமுள்ள சந்தர்ப்பங்க ளுள்ளன. அவற்றை விட்டு ஒழிந்திருப்பது நலமென்று உண ரப்படும்.

2. எவைகளெல்லாம் மனதுக்கு சந்தேகத்தையும், பயத் தையும் உண்டாக்குகின்றனவோ, அவைகளை அறவே விட்டு விட்டு, பின், எவைகளெல்லாம் மனசாக்ஷிக்கு விரோதமாகாமல் விலகியிருக்கின்றனவோ, அவைகளைக் கடைப்பிடியுங்கள்.

## 10—கல்வி.

1. கல்விமான்கள் அழிகிறதேயில்லை.

2. கற்றறிந்தவர்களை கௌரவப்படுத்துகிறவர் என்னை கௌரவப்படுத்துகிறார்.

3. கல்வியைச் சம்பாதிக்க வேண்டுவது, ஆண், பெண் இருதிறத்தாராகிய ஒவ்வொரு முஸ்லிம்கள் மேலும் விதித்த விதியாகும்.

4. கல்வி சீனதேசத்தில் கிடைக்கிறதா யிருப்பினும், அதைத் தேடிச்செல்லுங்கள்.

5. கல்விமான்களுடைய வசனங்களை சிரவணித்தலும், அந்நியர்களுக்கு சாஸ்திர கற்பனைகளை யெடுத்துப் புகட்ட லும் சமயசாதனைகளை ஆசாரிப்பதைக் காட்டிலும் அதி சிரேஷ்டமுள்ள வணக்க மென்றறிக.

6. மாணவனது மசியானது மதாபிமானியின் உதிரத் திலும் விசேஷ சுகிர்த முடைத்து.

7. ஞானத்தை சம்பாதிப்பதற்காக யாவரொருவர் சம் சார பந்தத்தை விடுகிறாரோ அவர் அல்லாவின் மார்க்கத்தில் செல்கிறவராகின்றார்.

8. விவேக சம்பத்தைத் தேடுவது, ஆண் பெண்ணுகிய பிரதி முஸ்லிம்கள்மேல் விழுந்த பொறுப்பென்ப.

9. அறிவைத்தேடிக்கொள். அது தன்னை உடையவருக்கு நன்மை தீமை இன்னதின்ன தென்பதைப் பகுத்தறியுந் திறத்தை உண்டாக்குகிறது. அது முக்தி மார்க்கத்தை விளங்கச்செய்கிறது. அது பாழ்நிலத்தில் பெருந்துணையாயுளது. அது தன்னந் தனியிடத்தில் நமது நேசக்கூட்டமாயிருக்கிறது. அது சிநேகமற்றுள்ள காலத்தில் மித்திரனுயுதவுகிறது. அது நமக்கு இன்பவழியைக் காட்டி நமது சிறுமைக்காலத்து நம்மை தாபரிக்கிறது. அது சிநேகிதர் நடுவில் ஓர் பூஷணமாயுளது. மேலும் அது விரோதிகள் முன்பாய் நமக்கொரு கவசம்போல் உபயோகப்படுகிறது.

## 11—உத்தியோகம் பிரபுத்துவமுடையது, சுவப்பிரயாசமே ஜீவனத்திற்கழகு.

எனக்கருளியிருக்கும் அல்லாவின் பிரதான கற்பனை இதுவே:—

1. "நமது மதஸ்தரில், சுகமாக வீட்டிலிருந்துகொண்டு காலங்கழிப்பவருக்கும், ஈசுவரார்ப்பணமாகத் தமது ஐசுவரியத்தையும் தேகத்தையும் பரோபகார விஷயத்தில் விடாமல் உழைத்து வருபவருக்கும் பதவி யொன்ருகாது. சுகஜீவனம் செய்பவர்களை விடச் சிறந்த பதவியை உழைப்பவருக்குப் பகவான் அனுக்கிரகித்திருக்கிருர். எல்லாருக்கும் பகவான் மங்களத்தைக் கொடுப்பவர்தான். என்ருலும் உழைப்பவருக்கு அவர் விசேஷ புண்ணியம் உண்டாக்கி வீட்டில் சும்மா இருப்பவரை விட வெகு தூரம் உயர்ந்த பதவியை அவருக்கு அருள்கிருர். அவர்கள் பகவானுக்கு மிக சமீப தாசர்களாகி விளங்குகிருர்கள்."—

2. யார் யார் உடம்பை உழைத்து வேலைசெய்து ஜீவிக்கிருர்களோ, அவர்களே ஈசுவரனுக்கு சமீப தாசர்கள்.

3. யார் யாருக்கு கைகால்கள் நேரா இருந்தும் ஏதாகிலும் நல்லவேலை செய்து தனக்காவது பிறருக்காவது உப

காரமாயிருக்க மனமில்லேயோ, அவர்கள் விஷயத்தில் கடாக்ஷிக்க அல்லாவுக்கும் மனம் வருவதில்லே.

4. உறுதியாகச் சொல்லுகிறேன் நீங்கள் ஒரு கயிற்றை எடுத்துப்போய்க்காட்டிலிருந்து விறகைமுதுகிலேற்றிச்சுமந்து வந்து, விற்று ஜீவனம் செய்யுங்கள். அதை விட்டு பிச்சை எடுக்கப்போவது உங்களுக்கடுத்ததேயன்று. பிச்சை உங்களுக்குக் கிடைத்தாலும் சரி, கிடையாவிட்டாலும் சரி, பாடுபட்டுப் பிழைப்பதே சிறந்தது. ஏனெனில் பாடுபடுபவருடைய மானத்தைப் பகவான் காப்பாற்றுகிறுர். பிச்சைக்காரருக்கு கிரகஸ்தர் போடாவிட்டால் மானம் பாதிக்கிறது, மனம் கசந்து திரும்பவேண்டி வருகிறது. போட்டாலோ அதைவிட மோசந்தான், அன்றுமுதல் அந்த கிரகஸ்தருக்கு அவர்கள் அடிமையாகிறுர்கள்.

5. காலேயிலும் மாலேயிலும் குறித்த காலங்களிலும் கடவுளே வணங்கி, மற்றைய சமயங்களே நும் பிரயத்தனத்திற் செலுத்துக.

6. சுய நலத்துக்காகவாவது பொதுநலத்துக்காகவாவது உழைக்காதவர் தேவானுக்கிரகம் பெறுவது அரிது.

7. திறமையும் தகைமையும் அமையப்பெற்றும்,தன்னேப் பற்றி யாவது, பிறரைப்பற்றி யாவது தொழில்நடத்த வில்லேயானுல், அவர் அல்லாவினது பட்சத்திற்கு பாத்திரனுகமாட்டார்.

8. நீ என்றென்றும் உன் ஆண்டவரை நோக்கி, ஏ, சர்வ லோக சரண்யனே! எங்களே துர்பலத்திலிருந்தும், மந்தகுணத்திலிருந்தும், நீக்கி ரட்சித்தருள் என்று கேட்பாயாக.

9. நாணயமான பாங்காய் ஜீவனத்தைச் சம்பாதித்துக் கொள்ளுகிறவர்களே, கடவுளுக்கு உவப்பானவர்கள்.

10. இரப்பதன்றி தம் சுவய பிரயாசத்திலேயே, பிழைப்பைத் தேடிக் கொள்கிறவர்களிடம், பகவான் அருளுடையாராயிருக்கிறுர்.

11. வேலையாட்களின் கூலியை, அவர்கள் வேர்வை உலருமுன், தாமதஞ்செய்யாது செலுத்தி விடக்கடவாய்.

## 12—தான தர்மம்.

1. தர்மமானது நிகழும் சர்வ விபத்துக்களையும் விலக்கி வைக்கிறது.

2. தர்மவரியை தனவந்தர்களிடமிருந்து வசூலித்து, ஏழைகளுக்குச் செலவழிக்கவேண்டும்.

3. சிநேகர்களை மனக்களிப்போடு போய்க்காண்டலும், அவர்களை விருந்துக்கழைத்தலும் தர்ம செயல்களென்ப.

4. நாயகியை நயமாக நடத்தலும், அவளுக்கு ஒரு வாயுணவு வூட்டலும் தர்மத்தில் எண்ணப்படும்.

5. குழந்தைகளை பட்சமாய்ப் பார்வையிடலும் முத்தமிடலும் தர்மமாகும்.

6. அக்கம்பக்கத்தார் சம்பந்தமாய் தயாளஞ் செலுத்துவதும், அவர்களுக்குப் பரிசளிப்பதும், தர்ம லக்ஷணமாம்.

7. வழிப்போக்கருக்கு அன்னம்போடுவது வளமையான தானங்களில் ஒன்று.

8. வழியில்காணும் உபத்திர வஸ்துக்களை, எடுத்தெறிதலும், தர்மமெனப்படும்.

9. அநாதைகள் ஆதரிக்கப்படவேண்டும்.

## 13—வேஷதாரி.

1. கபடர் யாரென்றால், பேசும்பொழுது பொய் பேசுகிறவரும், வாக்குத்தத்தத்தை மறுக்கிறவரும், நம்பிக்கைத் துரோகம் புரிகிறவருமே யாவர். பக்தியுள்ள முஸ்லிம்களோ தங்கள் விஸ்வாசத்தை உறுதிப்படி நிறைவேற்றுகிறவர்களும், வாக்கு பிறழா திருக்கிறவர்களும், சொல்லைக்காப்பாற்றிக் கொள்ளுகிறவர்களுமேயாம்.

## 14—வறுமையிற் செம்மை.

ஈஸ்வர ஞானத்திற்குச்செவிகொடுங்கள்: அவரது திருவுளம் இதுவே.

1. உண்மையாகவே என் சோதனைகளை பொறுத்துக் கொள்ளுகிறவர்களும், பிறர் தப்பிதங்களை மன்னிக்கிறவர்களுமே தர்ம பர ராவர்.

2. தம் சம்சாரத்தோடு இடுக்கண் அநுபவித்துக் கொண்டிருந்தும், நியாயவழுவான வழியிலும், இரத்தற்றொழிலிலும் புகாதிருக்கிற முஸ்லிமை கடவுள் நேசிக்கிறார்.

## 15—ஒழுக்கம் கற்புடைமை மரியாதை.

1. ஒழுக்கமும், கற்புடைமையும் இஸ்லாமிய மதத்திற்கு இருகண்களென்ப.

2. யாரொருவர் மரியாதையை விர்த்தி பண்ணுதுளரோ, நாணமற்ற செய்கைகளை செய்கிறவர்களெவரோ, அவர் முஸ்லிமாக மாட்டார்.

3. சர்வ தர்மங்களுக்கும், ஒழுக்கம் வழிகாட்டி யாயிருக்கிறது.

4. தாழ்மையும், விநயமும் நலம் பயக்கும் நடக்கைகளாகும்.

## 16—முஸ்லிம் சகோதரப்பான்மை.

1. முஸ்லிம்கள் அனைவரும், மதசார்பால் சகோதரர்களாவார்கள். அவர்கள் தம்முள் ஒருவரோடொருவர் எதிர்க்கலாகாது. பரஸ்பரம் உதவி செய்தலையும் விடக்கூடாது. உதாசினமும் வுதறிவிடவேண்டும்.

2. சகல புண்ணியங்களுக்கும் இருதயம் இருப்பிடமாகும். ஆகவே, அந்த இருதயம் நீதிமுறையைத் தழுவியிருக்குமேல், எந்த முஸ்லிமையும் இகழ்ச்சிக்குள்ளாக்காது. ஒரு முஸ்லிம் நண்பருடைய *சகலசொத்துக்களும் மற்றொருவருக்கு தர்ம சார்பில் உரித்தல்ல.

* அதாவது அவரது ரத்தமும், உடைமையும் கீர்த்தியுமாம்.

3. எதைத்தனக்காக விரும்புகிருனே, அதைத் தன்சகோதரர்களுக்காகவும் விரும்பாதவரையில் எவரும் பூரண மதவிஸ்வாஸம் உடையராகமாட்டார். சர்வ முஸ்லிம்களும் ஒரே சரீர பாவமா யிருக்கின்ருர்கள். ஒருவர், தனது தலை வலிக்கிறதென்று முறையிட்டால், தொடரவே, மற்றவர் சரீராதியந்தமும் முறையிடவேண்டும். அவரது கண் கலங்கினதென்று கண்டால் மற்றவர் தேகமுழுதும் நடுங்கித் துடிக்கவேண்டும்.

4. சமஸ்த முஸ்லிம்களும், ஒரு கட்டிடத்தின் சிலபக்கங்கள் மற்றப்பாரிசங்களை உறுதிப் படுத்திக்கொண்டிருக்கிற ஒரு மதில் சுவருக்குச் சமானமா யுள்ளார். அங்ஙனமே, ஒருவருக்கொருவர் ஆதரவா யிருக்கவேண்டும்.

5. உனது சகோதரர்களுக்கு வறுமை வந்த சமயம் கைகொடுத்து, அவர்கள் சிதைவுற்றுப் போகாவண்ணம் மீட்பாயாக.

## 17—ஸ்திரீ ஜனங்கள்.

1. தனது வீட்டார்திறத்து பாங்காய் ஒழுகிக்கொள்ளும் ஸ்திரீமணிகளே சிறந்த ரத்நமென்ப.

2. மகளிர் ஆடவர்களின் அர்த்தபாகமென்ப.

3 உலகமும் அதிலுள்ள சமஸ்த பதார்த்தங்களும், சிரேஷ்டமானவைகளே. ஆனாலும் அதில், அத்தியந்த சிரேஷ்டப் பொருளென்பது சற்குணமுள்ள பத்தினியேயாம்.

4. சதாசார சம்பன்னளான ஒரு உத்தம ஜாதி ஸ்திரீ, ஒரு புருஷனுக்கு அடைதற்கரிய செல்வமென்ப.

5. உமது ஸ்திரீ, ஆலயத்துக்கு, உம்முடன் வர விரும்பினால், அவரை நீர் தடஸ்தம் பண்ணவேண்டாம்.

6. ஒரு ஸ்திரீ ஐங்கால பிரார்த்தனைகளை அநுஷ்டித்து ரம்ஸான் மாத முழுவதும், உபவாசமிருந்தவராய், கற்புநிலையோடும், தனது பர்த்தாவுக்கு கீழ்ப்படிந்தும் இருப்பாளானால், அவள் எந்தவழியாக மோட்சத்துக்குப் போக அபேக்ஷித்

தாலும், அவ்வண்ணமே ஏகுவாள், என்று சொல்லுகிறேன். மோக்ஷம் அப்பேர்ப்பட்ட உத்தமியின் ஆதிக்யப்பட்டதாகும்.

**7.** ஸ்திரீகளை அடிக்கிறவிஷயமான அபிப்பிராயத்தை மகா மாட்சிமைதங்கிய உன் கர்த்தாவின் ஸ்தானாதிபதி அருவருக்கின்றார்.

**8.** மனைவிமார்களை இம்ஸைப்படுத்துகிற மனிதர்கள் யோக்கியதையான ஒழுக்கமுடையவராகார்.

**9.** ஒருஸ்திரீயை அல்லாட்டத்தில் விடுகிறவர், என்மார்க்கத்தில் நின்றவராகார்.

**10.** திருத்தமான முஸ்லிம்கள் யாரென்றால், எவர்களுடைய குணங்களானவை, தம் சொந்த குடும்பத்தாரால் பெரிதும் உவக்கப்படுகின்றனவோ அவர்களே யென்ப.

**11.** விவாக விமோசனமென்பது லௌகீக நியாயத்திற்கு சரியானதே. என்றாலும், அதில் தகாதமுறை கடவுளுக்கு கோபத்தைப் பிறப்பிக்கும்.

**12.** ஸ்திரீகளை செம்மையாய்ப் பாதுகாக்கும்படி கடவுள் உங்களுக்கு கட்டளையிடுகிறார். அவர்களே, உங்களுக்கு மாதாவும், மகளும், மாமியுமாயிருக்கின்றார்கள்.

**13.** ஸ்ரீதிகளுடைய ஒழுக்கங்கள் பரிசுத்தமானவை.

**14.** ஸ்ரீதிகள் தங்களுக்கமைந்த சுதந்தரவரம்பு தவறு தொழுகிக் கொள்ளுகிறார்களா என்பதை நாம் ஜாக்கிரதையாய்க் கவனித்து வரவேண்டும்.

## 18—குண நடவடிக்கைகள்.

**1.** மூவர் கூடி யிருக்கிறபொழுது, அவர்களில் இருவர் தனித்து, மூன்றும் நபருக்கு கேட்கவொண்ணாதபடி இரகஸியம் பேசிக்கொள்ளல் தகுதியன்று. அவர் உடனிருக்கிற வரையில் அப்படி சம்பாஷித்தல் அவருக்கு மனக்குலம் விளைவிக்கும்.

2. பரதர்மத்தை கவனிப்பதால் உன் சுதர்மத்தை புறக் கணித்து வழுவாதே. உனது தர்மத்தில் மிக்க சிரத்தை யெடுத்துக்கொள்.

3. வீண்வார்த்தையாடாமலும், நற்சுவபாவத்தோடிருத்தலும், தெய்வீகக் கிரியாமார்க்கத்தில் மேலானவை யென்ப. இவ்விரண்டிற்கும் மிஞ்சியதொழில் எதுவும் இல.

4. தன்நிலைமையை யறிகிறவர், தன் ஒழுக்கத்தை யறிகிறார்.

5. இழிவுடைய நாக்கின் தோஷத்திற்கு, சமயச்சித்தமான கிரியாநுஷ்டானங்களும் பிராயச்சித்தமாகா.

6. எத்தனைவிதமான நல்லொழுக்கும் உயர்வுடையனவே.

7. உன் நடத்தையின் கிரியைகளே உனது நன்மைக்கும் தீமைக்கும் காரணமாகின்றன.

8. மெய்யாகவே, உங்களில் பெரிதும் உகந்தவரென்பவர் குணதுங்கராயுள்ளவரேயாவர்.

9. ஜெபகாலத்தில், கடவுள் சிந்தனை தவிர எல்லாவித நினைவுகளையும் விலக்கி வைக்கவேண்டும்.

10. சம்பாஷணையில், பின்னர் நினைத்துக் கவலைப்படும்படியான சொற்களை முன்சொல்லா திருக்கக் கடவர்.

11. பிறர்பொருளை இச்சியாதே, அவரிடமிருந்து எவ்வித விருப்பத்தையும் எதிர்பாராதே.

12. சிநேகர்களில் சிரேஷ்டன், தன் ஆசாரத்திலும் பண்பிலும் யோக்கியதையுடையவனே யாவன்.

## 19—அதிகார தசைக்குவந்த அரசரும் மற்றவர்களும்.

ஆநந்தலோகத்திற்கு அதிகாரிகளாவார் மூவரே என்ப:—

1. நீதிதவறா நெறியுடைமன்னராய், சகலபுண்ணிய பலன்களும் வாய்க்கப்பெற்று, குடிகளுக்கு, மேன்மேலும் நலந்

தேடி, தன்னுயிர் மன்னுயிர் புரிந்தருளும் அதிபதி எவரோ, அவ்வரையே முதற்படியில் வைக்கப்படும்.

2. பந்துமித்திராதியர்கள் திறத்து சாலப் பரிவுடையவர்கள் இரண்டாந்தரத்தவர்.

3. புண்ணியசீலமான விரதநெறி நின்றவர்கள் மூன்றும் வகுப்புடையராவர்.

4. பகவானுடைய உயர்ந்த உத்தியோகஸ்தரென்பவர், நியாயமும் கல்வியுமுணர்ந்த அரசர்களென்ப. மற்றையர், கீழினங்களாம்.

## 20—அல்லாவும் அவரது ரசூலும்.

சர்வலோக தயாபரரின் கிருபை:—

1 நான் உங்களுக்கு ஒப்பற்ற இரண்டு செல்வங்களை வைத்திருக்கிறேன். நீங்கள் அவைகளைக் கைப்பற்றி பாதுகாத்துக் கொண்டுள்ளவரையில் மாறுட்டத்தை யடையமாட்டீர்கள். அவை, அருள்வேதமாகிய அல்லாவின் திரு கிரந்தம் குறுஆன் ஒன்று, மற்றது, அவரது ரசூலின் வாக்குகளே.

## 21—முஸ்லிம்கள் யாவர்.

1. தம் கரத்தையும் நாவையும் பத்திரமாய்க்காத்துக் கொள்ளுகிறவர்களே உண்மை முஸ்லி மாவார்.

2. முஹாஜிர் என்பவர், கடவுள் நிஷேதித்துத்தள்ளிய வழிகளுக்கு அஞ்சியோடுகிறவராம்.

3. பொய், கொலை, களவு, கள், காமம் இவைபுரிகிறவர்கள் மதாபிமானிகளல்ல. ஆகையால் இப்பஞ்ச மகா பாதகங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

4. எதார்த்த முஸ்லிம்களோ, தங்களுக்கு இன்பம் வந்த காலத்து, அல்லாஹுத்தஆலாவுக்கு நன்றி செலுத்துவதும், துன்பம் வந்தகாலத்து அவர் திருவுள்ளத்தின்படி தங்களை அவரிடம் ஒப்புவித்திருப்பதுவுமாயிருப்பர்.

**5.** தன் உதரத்தை மாத்திரம் பூர்த்திசெய்துகொண்டு, அடுத்தவர்களைப் பசியால் வதைபட விடுகிறவர்கள் உத்தமமான முஸ்லிமாகார். தன் வாக்கும் மனமும் இஸ்லாமிய மயமாயிருந்தாலொழிய, எவனும் முஸ்லிமாகான்.

**6.** சுகாநந்தரூபி யாரென்றால், கடவுள் வழிப்பாடுடைய பக்தனேயாம். எங்ஙனமென்னில், தனக்கு நன்மை நேரிடுகிற போது கடவுளைத் தோத்தரித்து வணங்குகிறதும், இடையூறு சம்பவிக்கிறபோது நாயனைநயந்து போற்றிசெய்து அதைப் பொறுமையோடு சகித்து சிரம் தாழ்த்துகிறவருமா யிருப்பர். மேலும் நிரந்தர விசுவாசமுடையவரோ சமஸ்த சிருஷ்டிகளின் சங்கடத்தில் அநுதாபங்காட்டி தமது வருத்தத்தில் கடவுளை ஸ்தோத்தரித்து மங்களக்கீதம் பாடுவர்.

## 22—மானிடர்களில் அதமரும் உத்தமரும்.

1. படிப்பிருந்தும் பக்குவமாய் நடக்கத் தெரியாதவர், அதாவது, கற்றும் அறிவில்லாத விதமாய் நடந்துகொள்பவரெவரோ அவரே மனிதரில் பதரேன்ப.

2. கலைகளைக்கற்று, நல்லறிவோடு நிற்கிறவரே, மனிதரில் தேவரேன்ப.

## 23—மரணம்.

1. மரணத்தை இச்சியாதே. ஏனென்றால், ஒருமுஸ்லிமுடைய ஜீவிய விர்த்தியானது, சத்கர்மங்களை அபிவிர்த்திசெய்கிறது.

2. இறந்தவரைப்பற்றி அவரது சுகுணத்தையே நாடிப் பேசக்கடவீர். அவரது, குற்றங்குறைகளான துர்குணத்தை நாடி நவில்தலினின்றும் முற்றாய் விலகிக்கொள்ளுங்கள்.

**3.** நித்தியாநந்த யாத்திரை செல்வதற்கு சமாதியறையே ஆரம்பப்பருவமாயுளது.

**4.** நேசபாசங்களை வகுத்துப் பிரிவுசெய்கிற பாலமே, மரணமென்பது.

5. போகபோக்யங்களை நாசஞ்செய்கிறது மரணந்தா னென்பதை நாம் ஞாபகங்கொள்ளக்கடவோம்.

6. நம்மில் பயங்காளித்தன்மையும் உலோபகுணமும், தலை யெடாதபடி கடவுள் கடாக்ஷிப்பாராக.

7 சத்தியசந்தனர் இறந்துபோகிறதே இல்லை. அவர்கள் இந்த அநித்திய லோகத்தினின்றும் நீங்கி தமது நித்திய ஸ்தானத்திற்கு மாற்றப்படுகிறார்கள்.

8. மரணமானது பாபகர்மத்தால் ஏற்படுகிற தண்டனை யல்லாததால் மெய்யாகவே உண்மையான முஸ்லிம்கள் அதற்கு பயப்படமாட்டார்.

## 24—இஸ்லாமென்று பஹிரங்க அறிமுகஞ் செய்யாத பேர்வழிகள் சார்பாய்க்கொள்ளும் சிந்தனை.

ஒரு விசேஷ சம்மானம்:—

1. மகாமாட்சிமைதங்கிய ஜகத்ரக்ஷகர் முஹம்மத் நபீ யவர்கள் பக்கமாய், ஒருசமயத்தில் ஒருபிரேதம் எடுத்துக் கொண்டுபோகப்பட்டது. அதைக்கண்ட காருண்ய நபீ அவர்கள் சரேலென எழுந்து நின்றுகொண்டனர். இதைத் தெரிந்த சீஷரில் ஒருவர் நபீ அவர்களைப் பார்த்து 'ஓ! பாபவிமோசன மூர்த்தியே! இது ஒருயூதனுடைய பிரேதமல்லவா' என்று அலக்ஷியமாகச்சொல்ல, அதைக் கேட்ட நபீ அவர்கள் 'ஆ! தோழனே! அது ஆன்மாவை யுடைத்தாயிருந்ததில்லையா' என்று மரியாதை தோற்ற பதில் பகர்ந்தார்.

2. யூதர்களோ, கிறிஸ்தவர்களோ, இன்னம் எந்த சமயத் தவர்களானாலும் சரியே! அவர்களுக்கு யாதொரு அவமரியாதையும் பண்ணும்படி நமக்கு அநுமதியில்லை.

3. எந்தப் பிரேதமாவது, யூதரோ, கிறிஸ்தவரோ, முஸ்லிமோ, எந்த வகையாரைச் சேர்ந்ததா யிருந்தாலும், சரியே, அது உமது பக்கமாய்ப் போகக்கண்டால், எழுந்து நிற்பீராக.

## 25—மோக்ஷம் அல்லது ஆநந்த ஸ்தலம்.

1. யாவரேனும், நல்வழிப்பிரமாண சகிதமாய் ஜீவியஞ் செய்துக்கொண்டு, எனது சட்டங்களைக் கடைப்பிடித்து, மனுவினங்களுக்கு விக்கினந்தேடாம லிருப்பாரானால்; அவரே மோக்ஷலோகப் பிரவேசம் பெறுவார்.

மகாகண்ணியம் பொருந்திய முஹம்மத் நபீ அவர்களின் சத்திய வாக்கு இதுவே:—

மோக்ஷம் என்பது என்ன?

2. எந்தப்பேரின்பம் கண்ணுறக்காணக் கூடாததோ, எந்தப் பேரின்பம் காதாறக்கேட்க முடியாததோ, எந்தப் பேரின்பம் மானவனது மனோவாசமகோசரமாயுளதோ அதுவேயாகும்.

3. நீ உன்னை ஆறுவிஷயங்களினின்றும் தற்காத்துக் கொள்ளக்கடவாய். நான் உன்னுடைய மோக்ஷத்திற்காக உத்தரவாதமாயிருக்கிறேன்.

(1) பேசும்போது, உண்மையே பேசு.

(2) கொடுத்த வாக்கைத் துரிதமாய்த் தவறாமல் நிறைவேற்று.

(3) உன் நற்பிடிமானத்தை கடைதேற்றக் கொஞ்சமும் தளர்வுறாதே.

(4) மனத்தாலும், செய்கையாலும் சுத்தமாயிருக்கக் கடவாய்.

(5) நீதிக்கேடுள்ளதும் வசவுக் கிடமானதுவுமான வஸ்துவை உனது அஸ்தங்கள் தொடாதிருக்கக்கடவது.

(6) சமஸ்த சிருஷ்டிக ளிடமும் சமமான இரக்கங் காட்டுவாயாக.

## 26—துறவறத்தைப்பற்றி.

1. உங்களை நீங்களே வேதனை செய்துக் கொள்ளாதீர். அப்படிச் செய்துகொண்டால் நிச்சயமாகவே கடவுள் உங்களை சிக்ஷிப்பார்.

2. இஸ்லாமானது போலித் துறவறத்திற்கு இடந்தரவில்லை.

3. சந்நியாசமென்பது இஸ்லாமதத்தால் கடாட்சஹீனம் அடைந்திருக்கிறது.

4. ஆத்மவதை செய்துகொள்ளுதல், கொடும்பழி பாவங்களில் ஒன்றென்ப.

5. அகால மரணத்தை அபேக்ஷிக்காதீர்.

6 குடிஜனங்களோடு குலவிக்கொண்டு, அவர்களது கஷ்ட நஷ்டங்களை அடக்கிவருகிறவரெந்தமுஸ்லிமோ அவரே, பிரஜைகளோடு சேராமல் தன்னந்தனிவாழ்க்கையுடன் நிஷ்டாபரராயிருக்கிறவரைவிட, சிறந்தவராவர்.

7. பகவானுடைய ஞானசங்கமாகிய உலகத்தை வெறுத்து, உலகத்தில் அவனடைந்த சகாயத்தை நினையாமல், ஜனோபகாரத்துக்கும், அல்லாவின் சோதனைக்கும் அஞ்சி, அருவருத்து சந்நியாசம் பூண்டு வெறுண்டோடுகிறவன் எவனோ, அவனை அல்லாவும் வெறுத்து அவர் சமுகம் சேர்க்காதபடி அருவருத்துத்தள்ளுகிறார். ஐயோ! அவன் முக்திக்குப்பாத்திரனாவனோ?

## 27—பரிசுத்த வாழ்க்கை.

1. விழிக்குப் பழுதென்பது, மாற்றான் மனைவியை துரிச்சையோடு நோக்குதலேயாம்.

2. நாக்கின் நலமல்லாமையாவது, வெறுக்கப்பட்டதை வசனியாதிருத்தலேயாம்.

3. நான் கடவுளை முன்னிட்டு, பிரமாணிக்கமாய்ச் சொல்லுகிறேன். தம்முடைய ஸ்திரீ, புருஷர், பணிவிடைக்காரர் தம்முள் சோரம்போகிற பாதகத்தைக்காட்டிலும், வேறெதற்கும், பகவான் கண்டிதமான கண்டனையும் தண்டனையும் விதிக்கவே இல்லை.

## 28—லோகத்தின் அந்தியகாலம்.

1. உலகம் காலம் அடைய அடைய, ஜனங்கள் படுபொய்யர்களாவார்கள். நீங்களும், உங்கள் முன்னோரும் ஒருபோதும் கேட்டிராத நூதன நூதனமான கதைகள், விருத்தாந்தங்களைப் புனைந்து புகல்வார்கள். அவைகள் உங்களை விபரீதத்தில் சிதைவுறுவிக்காதபடியும் குதர்க்கவாதங்களில் தள்ளாதபடியுமாய் அவைகளை நிக்கிரகம் பண்ணவேண்டும்.

## 29—மகத்துவம் சிறந்த குருநாதரின் தாழ்மை.

1. நான் மானவனைவிட மேலானவனல்லன். நான் உங்களை நோக்கி சன்மார்க்க விஷயமாய் ஏதாவது ஆக்ஞாபிக்கிற போது, அதை அங்கீகரியுங்கள். லௌகிக காரியங்களை யொட்டி யாதேனும் ஒழுங்கு படுத்தற்கு, எனக்குச்சாமானிய மானவனைக்காட்டிலும் விசேஷ மொன்றுங்காணேன்.

## 30—கடூரமான குற்றங்கள்.

1. யார் இஸ்லா மதத்தவரென்று பெயர் வகித்துக்கொண்டு அதற்கு விர்த்தமான விசுவாசகாதகங்களை புரிகிறார்களோ! யார் காரணமில்லாமல் மானவர்களது உதிரத்தை வுதிரச்செய்கிறார்களோ! அவர்களை, கடவுளுக்கு கடுஞ்சத்துருக்கள்.

2. ஏகப்பெருங்கடவுளோடு, வேறொருவரை இணைத்து விவகரிப்பதும், தம் சக சிருஷ்டிகளை வதைகாணுவதும், பொய்ச்சத்தியம் பண்ணுவதும், படுபாவங்களென்று, உனது ஸ்தாணுதிபதி வற்புறுத்துகிறார்.

## 31—அறநெறியே சமயச்சித்தம்.

நமது சற்குருவின் திருவருள் வினாவிடை:—

**இஸ்லாமென்றால் என்ன?**

1. தன்னடக்கமும் கீழ்ப்படிதலுமே.

**கோட்பாட்டில் உசிதம்யாது?**

2. மனதுக்கினிய குணலக்ஷணமேயாம்.

திவ்யஸ்தலயாத்திரை என்பதன் தாத்பர்யம் யாது ?

3. கடவுளுக்கு உவப்பல்லாததை விட்டுவிடுதலேயாம்.

தேய்வபக்தியாவது யாது ?

4. வாக்குத் தூய்மையும், தர்மகுணமுமேயாம்.

தர்மகுணமாவது யாது ?

5. அவை பிரதி முஸ்லிம்களுக்கும் விதித்தகடமையான காருண்ய குணமாகும். யாருக்கு வாஸ்தவத்தில் தர்மத்தை நடத்த சக்தி யின்றோ, அவர் நற்காரியத்தையேனும் இயற்று வாராக. மேலும், தீத்தொழிலிலிருந்து தன்னை தடுத்துக் கொள்ளக்கடவர். இப்படிப்பட்ட செய்கைகளே தர்மகுண மென்ப.

கேடுதி நாடாதிருப்பவர் யாவர் ?

6. கடவுள் ஒருவரே என்பதிலும், மறுமை வுண்டென்ற பிரஸ்தாபத்திலும், நிச்சயபுத்தி யாருக்கு உண்மையாக உண் டோ அவர்களே யாவர்க்கும் தீமை நாடார்.

## 32—மத விசுவாஸம்.

1. ஒன்றான ஈஸ்வரனோடு எந்தப்பொருளையும் சமத்துவம் பாராட்டாதே.

2. ஞானமுள்ளநீ உன் மனோவாக்கு காயங்களால் கடவு ளென்று யாரைச்சிந்திப்பாய் ? எனது பிரமாணத்தைக் கேள். இதுவே அவரது லட்சணம் :—

(a) ஒப்பற்ற கடவுளுக்கு ஒன்றும் நிகரல்ல.

(b) அவர் ஒருவரே தெய்வமென்று சொல்.

(c) அவரே நித்திய பகவான்.

(d) அவர் ஜெனிப்பிச்கிறவருமல்ல ஜெனிப்பிக்கப் பட்டவரு மல்ல.

(e) அவரைப்போல் ஒருவருமில்லை.

3. பிடிவாதமாய், உனது மாதா பிதாக்களை அவமானப் படுத்தாதே.

4. சாராயமுதலிய லாகிரிவஸ்துக்களை உபயோகிப்பதை முற்றும் விட்டு விடு. சர்வதுன்மார்க்கங்களுக்கும், அஃது மூலாதாரமாயுளது.

5. உங்களை சர்வ பொல்லாங்கி னின்றும் காத்துக்கொள் ளுங்கள்.

6. கடவுள் இல்லை என்று வாதிக்கிறவரை பரிதாபம், நீவிர் ஒன்றும் நிர்பந்தஞ்செய்யவேண்டாம். அவரைச் சூழ்ந்துள்ள வஸ்துக்களை அவர் தாமே சிந்தித்து ஒரு தீர்மானம் பெறக் கடவர். வானமும் பூமியும் அவற்றிலுள்ள சர்வவஸ்துக்களும் அவரது மதியீனத்தை ஆக்ஷேபம் பண்ணுகின்றன.

## 33—தெய்வஞானம் இருத்தற்குரிய அடையாளம்.

1. நீவிர்செய்யும் நன்மைக்காக சந்தோஷமும், தீமைக் காக துக்கமும் உணர்வீராகில், மெய்யாகவே நீவிர் மெய்ஞ் ஞானம் படைத்தவரே.

2. குற்றத்தின் இலக்கணமாவது, உமது நடத்தையில் எந்தக் காரியம் உமது மனசாக்ஷியை பாதிக்கிறதோ, அதுவே யாகும். அதனால், அச்செயலை அகற்றிவிட வழிதேடும்.

3. ஆஸ்திகராயுள்ளவர், அயலார்க்குக் கெடுதி நாடா திருக்கக்கடவர்.

## 34—ஜகத் கர்த்தாவின் ஏவலாளர்.

1. யாரொருவர் சத்தியத்தைக் கடைப்பிடிக்கிறாரோ, அவரே, கடவுளை, தரிசிக்கிறவரும் அவரது ஏவலதிபருமாவர்.

## 35—யாதினும் மட்டடக்கம்.

1. உயர்ந்த நடத்தைகளே பொற்பிரமாணங்களாம்.

2. உமது இதயத்தை அதிக்கிரமப் புசிப்பாலும், பானத் தாலும் நசித்துக்கொள்ளற்க.

**3.** ஜிஹாத் என்னும் புண்ணியப் போரின் மகிமை யானது ஆத்ம விஜயத்திற்கு ஆடும்போரே.

**4.** நரகமானது இன்பங்களாலும், சுவர்க்கமானது துன் பங்களாலும் மூடப்பட்டிருக்கின்றது.

**5.** லௌகிகத்தின் அனுராகமே, சர்வதுர்க்கதிகளுக்கும் காரணமானது.

## 36—அறிவுடைமை.

1. ஒருநாழிகையளவு கடவுளை தியானஞ்செய்தலும், அவரது அற்புத சிருஷ்டியாதி விசித்திரக்கிரமங்களை, அவதா னஞ் செய்தலுமாகிய ஞானயோகமானது, ஒருவருஷக்காலம் நடத்தும் வணக்கப் பிரார்த்தனையாதி கிரியாயோகத்தைக்காட் டிலும் சாலச், சிறந்தது.

2. புத்திமான்கள் பேசினால், நல்வார்த்தைகளையே பேச வேண்டும். இன்றேல் மௌனமாயிருக்கவேண்டும்.

## 37—விருந்து.

1. கடவுள் ஏகத்துவத்திலும், மறுமை நிச்சயத்திலும் நம்பிக்கை யுடையவர்கள், தங்கள் விருந்துகளை கனம்பண்ணக் கடவர்.

2. அன்னியர்களுக்கு அபசாரம் செய்யும் எண்ணத்தை முற்றாய் விட்டுவிடு.

3. சதா இன் சொல்லும் நன் சொல்லையுமே வசனிக்கக் கடவாய். மற்றப்படி மௌனமாயிருப்பதே மெத்தவும் சிரேய ஸானது.

4. விடுதி கொடுக்கிறவர்களுக்கு வருத்தம் தோன்றும் படி விடுதி பெறுகிறவர்கள் நெடுநாள் கணக்காய் அவர்களிடம் தங்கியிருத்தல் யுக்தமன்று.

**நபீ அவர்களைப்பார்த்து ஒரு பக்தர் கேட்கும் கேள்வியாவது:—**

**5. உண்மையான தேவஸ்தானாதிபதியே! நான் ஒருவ ரிடம் தங்கி, அவரால் உபசரிக்கப்படாது விட னெஞ்சக்**

காலமான பிற்கு, அவர் எனது கிரகத்துக்கு வர நேர்ந்தால், அவர், இயற்கனவே என் விஷயமாக நடந்து கொண்டது போல, நான் அவரை நடத்தலாமோ அருளவேண்டுமென. பிரதி யுத்தரமாக நபீ அவர்கள் அவரையே உண்மையில் உபசரிப்பாயாக என்றனர்.

6. தன்மாளிகை வாயிற்படிவெளிமட்டும், விருந்தினரோடு, விருந்துபசாரிகளும் தொடர்ந்துவருதல், நமது வழிகளைப் பின்பற்றினதற்கடையாளமாம்.

## 38—மனிதன் பிறப்பால் பாபமற்றவன்.

1. இயற்கையில் ஒவ்வொரு சிசுவும், கடவுள் ஒருவருக்கே கீழ்ப்படிதல் என்ற சுயமத இஸ்லாம் சார்பினைத்தாங்கிய மனோவிர்த்தியோடு கூடவே, பூமியிற் பிறக்கிறது. அந்த சிசுவை, யூதனாகவோ, கிறிஸ்தவனாகவோ, (மஜூஸீ) அக்நி உபாசகனாகவோ மற்றும் எந்த மதஸ்தனாகவோ, செயற்கையில் மாற்றுகிறவர் அவரவர் பெற்றோரே யாவர்.

2. எந்த விபத்தும், சோதனையும், ஒருவருக்குத் தனது பிழைகளாலேயே சம்பவிக்கிறது. அவைகளை அநேகமாய் பொறுக்கிறவர் பகவானாகிய அல்லா ஒருவரே.

## 39—ஜபம்.

1. மனமும் காயமும் ஒத்திராமல் மாத்திரம் செய்யும் தெய்வவிண்ணப்பங்களை நபீ பெருமான் அவர்கள் மதிக்கிறதில்லை.

2. யாவரது ஜபங்கள் தம்மைத்தீயச் செயலினின்றும் விபத்துக்களினின்றும் விலக்கவில்லையோ, அவர்கள் குருநாதருடைய கடாக்ஷத்திற்கு தூரமாயிருப்பதுந்தவிர, தங்களை பாழ்ப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

3. பிரார்த்தனையானது பக்திமானை ஜகத்ரக்ஷகரோடு ஐக்கியம் எய்துவிக்கக் காரணமாகிறது.

4. காலையிலும் மாலையிலும் குறித்த நேரங்களிலும் அல்லாவைப் பிரார்த்தித்துக் கொண்டு மற்றைய காலத்தை உம்முடைய தொழிலில் செலுத்துவீராக.

5. தொழுகையில் உங்களது ஜபங்களை, நின்றவராய் ஜபியுங்கள். உங்களுக்கு நிற்க சாத்தியப்படாவிட்டால், உட்கார்ந்து கொண்டு செய்யுங்கள். அதுவுங் கூடாவிட்டால் படுக்கையி லிருந்தபடியாவது நடத்துக.

## 40—முறைதவறான கொள்கையும் ஜீவஹிம்சையும்.

1. எதை அநியாயமென்றும் கெட்டதென்றும் உணர்வீரோ அதை அடிக்கிறதிலிருந்தும் எடுக்கிறதிலிருந்தும் உமது கரங்களைப் பாதுகாத்துக்கொள்ளக்கடவீர்.

## 41—தெய்வீகம் வாய்ந்த புருஷர்கள்.

1. ஒருவருக்கொருவர் சந்திக்க நேருகிறபோது பரஸ்பரம் பகவானை ஞாபகங்கொள்ளுகிறவர்கள் யாவரோ, அவர்களே பகவானால் தெரிந்தெடுக்கப்பட்ட கீழ்ப்படிதலுள்ள உத்தம பக்தராவர்.

2. ஜனங்களில் அதமர்கள் யாரென்றால், கோள்சொல்லிகளும், குறும்பர்களும், மித்திரபேதஞ் செய்கிறவர்களும், தர்மபரர்களிடம் குற்றம் நாடுபவர்களுமே யாவர்.

## 42—வீண் பக்தி.

1. மந்திர வசியம் உபயோகிக்காமலும் மூடஜனங்களைப் போல், சகுனப் பிரமையில் உட்படாமலுமிருந்து பரிசுத்த அல்லாவினிடம் தமது பூரண நம்பிக்கையை நாட்டுகிறவர் எவரோ, அவரே மோக்ஷத்தை யடைவார்.

2. கிரகணங்களைப்பற்றி விபரீத ஆசாரம் அநுஷ்டியாதே. ஓரோர் பிரபன்னரது மரணத்தைக் குறித்து அவைகள் நிகழ்கிறதில்லை. அத்தகைய பிரமாதமான மாறுதல் காலத்தில்,

முஸ்லிம்களோ, விசேஷமாய் தேவாராதனை செலுத்தவும், ஏகநாயகனை நமஸ்கரிக்கவும், அவரது அருட்பிரசாதங்களை பிரார்த்திக்கவும் வேண்டும்.

## 43—சாஸ்திரப்பழக்கமும் உபந்நியாசத்திறமும்.

1. அவரவர்களது விவேகவிர்த்திக்குத் தக்கபடி, ஜனங்களுடன் வார்த்தையாடுக.

## 44—நம்கிரியைகளெல்லாம் கேள்விக்கு உத்தரவாதமே.

1. உங்களுக்கு விதித்திருக்கிற விதியென்னும்படி, ஒழுக்கமே, உங்களை சன்மானத்திற்கும் அபராதத்திற்கும் ஆளாக்குகிறது.

## 45—பாரியை

1. சற்குணமுள்ள மனைவி, ஒரு புருஷனுக்கு சிறந்த நிதியமாகிருள்.

2. உனது பெண்சாதிக்கு பக்ஷத்தோடு புத்திமதி புகட்டுவாயாக.

3. கண்டித்தாலும், அன்போடு கண்டிக்கக்கடவை.

4. ஒரு முஸ்லிம் தனது பாரியை வெறுத்திருக்கக்கூடாது. அவளிடமுள்ள ஒருகெட்ட குணத்திற்காக அபிரியப்படுவாயானல், அவளிடமுள்ள மற்றொரு நல்லகுணத்திற்காகப்பாராட்டி பிரீதிகாட்டக்கடவாய்.

5. அடிமையைப்போல், உமது நாயகியை நீர் அடிக்கிறதுண்டா? அப்படிச்செய்தல் முற்றிலும் தகாது.

6. பகவான் சந்நிதானத்திலும் அவரது சிருஷ்டிகளின் முன்னிலையிலும் உங்களில் உத்தமராவார் யாரெனில், தமது குடும்பங்களில் உசிதமான பாங்காய் நடந்துக் கொள்ளுகிறவர்களே. நானும், எனது பாரியாளிடத்தில் சிறந்தவனுயிருக்கிறேன்.

நபீ அவர்களின் சீஷரில் ஒருவர் ரசூலைப்பார்த்து கேட்கும் வினா:—

7. ஸ்தானாதிபதியே! எந்தவிதமான உபசரணை ஒருமனை யாட்டிக்கு நியமிக்கவேண்டுவது கட்டாயம்? என, பிரதியுத்தர மாக நபீ அவர்கள் நீ உண்கிறபோது அவளுக்கும் உணவுகொடு. நீ உடுக்கிறபோது அப்படியே அவளையும் உடுக்கச்செய். அவளை முகத்தில் அறையாதே, இகழ்ச்சிசெய்யாதே, மனக் குறை யுண்டானகாலத்து, அவளைவிட்டுப் பிரியாதிரும்

8. உனது இல்லாளுக்கு நல்லதோர் புத்திமதிகளைக் கற் றுக்கொடு. ஒரு சிறையாளியையொப்ப, உனது பெருமைதங் கிய ஸ்திரீயை வருத்தாதே.

9. ஸ்திரீகள் ஒரு தினத்திற்கு மேற்பட்ட வழிப்பயணம் எடுத்துக்கொள்ள நேர்ந்தால், அவர்களோடு, துணையாக அவர் களுக்குப் பாத்திரமான தம் பந்துக்களில் யாராவது ஒரு ஆடவர் உடன்செல்லல்வேண்டும்.

## 46. குழந்தைகள்.

1. நன்னடக்கையைக்காட்டிலும் மேலானதாக வேறெ தையும், தம் குழந்தைகளுக்கு, சத்பிதாக்கள் கொடுக்கிற தே இல்லை.

2. உங்கள் பிள்ளைகளை நன்றாய்ச் சீராட்டி வளர்த்து வாருங்கள்.

3. சூரியாஸ்தமயத்தில் தம் பிள்ளைகளை வெளிவிடா திருங்கள்.

4. குழந்தைகளை தம்முள் மானாபிமானம் செவ்வனே உணரும்படியான வழியில் நடத்துக.

5. பெண்களுக்கு நலம் புரிகிறவர் யாவரேனும் சரியே அவர் நரகபாதைக்குட்படார்.

## 47 — புறங்கூறலும் அபவாதமும்.

1. உன்னிடம் இருக்கிறதென்று தெரிந்தும், மன்பதைக ளது பொல்லாங்குகளைச்சுட்டி அவதூறு செய்தலினின்றும் பேசுதலினின்றும், உன்னைத்தவிர்த்துக்கொள்.

2. ஆற்ருமையும், அவநம்பிச்சையும் உன் நற்சகவாசத்தைப் பலஹீனப்படுத்தும்.

3. விபரீத தாத்பர்யத்தை முற்ருய் ஒழித்துவிடு.

4. ஜனங்கள்மேல் நெறிதவருன நோக்கங்களை ஏற்றிச் சொல்லவேண்டாம். அன்னியர்களது அலுவல்களில் அசட்டையாய் ஆசங்கை செய்யாதே.

5. சந்தேகமானது சண்டாள அபத்தமாகும்.

6. பிறர் குற்றங்களைக் கவனியாதே.

7. பிறரைக்கண்டு, மனத்தாங்கலுருதே.

8. அழுக்காறு உன்னை அணுசாதிருக்கட்டும். அது உனது நன்மைகளை வனத்தைக்கவரும் கனலைப்போல, கவளீகரித்து விடுகிறது.

9. பழிதூற்றலானது சகலபுண்ணிய கிரியாச்சித்திகளையும் சீர் குலைவுசெய்கிறது.

10. குடி ஜனங்களுடைய கீர்த்திகளைக்கெடுக்கிறது, புத்திமான்களுக்கு யுக்தமன்று. ஒருவரை வைதலும், அயுக்தமாகும். அப்படியே நல்வழிப்பட்டார்க்கு வீண்காலக்ஷேப வார்த்தைகளைப் பேசுதலும் கூடாவாம்.

## 48—கொடிய பாபங்கள்.

1. மதுபானஞ் செய்கிறவரும், சோரத்தனம் இச்சிக்கிறவரும், பிறத்தியார் பொருட்களை அபகரிக்கிறவரும் குரூரமான சிக்ஷையைக் கோருகிறவராகிருர்.

2. ஒன்ருன தெய்வத்தோடு பரிசுத்தவான்களைச் சமப்படுத்துவதும், தாய்தந்தையரை அலைக்கழிப்பதும், மனுவினங்களைக் கொலைசெய்வதும், தற்கொலைபுரிந்துக் கொள்வதும் பொய்ச்சத்தியஞ் செய்வதும் மாபாதகங்களாம்.

3. அநாதைகளது ஸ்திதிகளை அபகரித்தலையும், ஸ்திரீ ஜனங்களை, இழிவினமாய்ப் பழிதூற்றி, குற்றத்திற்குள்ளாச்சுவதையும், விட்டு முற்ருய் விலகிக்கொள்ளுங்கள்.

## 49—உலகம்.

1. இம்மையானது மறுமைக்குக் கிருஷித் தொழிலா யுளது. இவ்விடத்தில் நற்பயனை யடையும்படிக்கு நன்மை புரிவாயாக. ஏனென்றால் பிரயாசையானது கடவுளின் சட்டமாயிருக்கிறது. யாது யாது அல்லா நியதி செய்திருக்கிறாரோ, அவை பிரயாசையால்தான் அடையக்கூடும்.

2. எவருடைய ஆயுள் நீடித்திருந்து, காரியங்கள் யுக்தமாயுளவோ, அவரே ஆண்களிற் சிறந்தவர். நீடித்த ஆயுளுடையவராய் செய்கைகள் அயுக்தமாய்ப் புரிகிறவரே, அதமரெனப் படுவர்.

3. தகைமையாய் உபயோகப்படுத்தப் படுகிற செல்வம் அருட்பிரசாதமாகும். அதை ஒரு புருஷன் நியாயமான வழியால் விருத்திசெய்யலாம்.

4. உலக இன்பத்தையும், சம்பத்தையும் நியாயவழியால், பிரயோகிக்கவும் அப்படியே தம் குடும்ப சம்ரக்ஷணையை சம்பாதிக்கவும் அண்டை அயலாரிடம் அன்புள்ளவரா யிருக்கவும் இஷ்டப்படுகிறவர், யாவரோ அவர் பகவான் முன்னிலையில், பௌர்ணமி யன்றுகாணும் சந்திரமண்டலம் நிகரமலர்ந்த திருமுக விலாசராய் விளங்குவார்.

5. லோகவிஷயத்தில் மோகம் அல்லது பற்றுவைப்பது, சகல துன்பத்திற்கும் வேராயுள்ளது.

## 50—மனோவசியம்.

1. தமது சிற்றின்ப விருப்பங்களையும், சன்மானத்தை நாடிய மனோரதங்களையும் அடக்கவல்லவரே, அறிஞரும் புத்திசாலியுமாவர். தமது இச்சாதீபனங்கள் வசமாய் விகாரப்பட்டு, அதோடே, அல்லாவின் மன்னிப்பையும் வேண்டுகிறவர் மூடரென்ப.

## 51—பச்சாதாபம்.

1. தம் குற்றங்களுக்காக உண்மையில் நைகிறவர், எந்தக் குற்றத்தையும் இழைக்காதவர் போலாகின்றார்.

## 52—சுற்றமும் உறவும்.

1. அல்லாவின் சந்தோஷம் பிதாவினது முகவுல்லாசத்தில் உங்கியுளது. அல்லாவின் அசந்தோஷம் பிதாவின் மனக்குறைவிலமைந்துளது.

2. அல்லாவினுடைய ஆசிர்வாதம், தம் உற்முருறவினர்களை கைவிட்டுப்போகிற குடும்பத்தார்மீது சாராது.

3. மோக்ஷமடைய விரும்புகிறவர், தம் தாய்தந்தையரை திர்ப்தி செய்யவேண்டும்.

விசேஷவினு:—

4. மதானுசாரி ஒருவர், தேவதூதரை நோக்கி, அடியேன் ஒருதவறுசெய்துவிட்டேன். நான் குணப்படுவதற்கு, யாதாவது பரிகாரமுண்டோ என்று பரிதவித்தார். பிரதியுத்தரமாக பரிசுத்தரசூல் அவர்கள் உமக்குத்தாயாரிருக்கிமுர்களா? என, இல்லே என்றனர். மறுபடியும் உமக்கு அத்தையர் உண்டா? என, உண்டு என்று பதிலளிக்க ரசூல் அவர்கள் சகோதரனே! விரைந்துபோய் அவருக்கு நன்மை செய்யும், உமது பாபங்கள் விமோசனமாகும் என்றனர்.

5. சர்வலோக தயாபர ரசூல் பெருமானவர்கள் தம்பாலியதசையில் தம் செவிலித்தாயான ஸ்ரீமதி ஹலீமாபீபீக்கு பணிவிடை நிறைவேற்றிய ஒருமாதுக்கு, அவரைக்கண்டவளவில் எழுந்து நிற்பதும், வஸ்திரம் பாவுவதுமான மரியாதை பூண்டிருந்தார்.

ஒருவிசேஷக்கட்டளை:—

6. "மஹாந்முஹம்மத் நபீ அவர்கள் தம் செல்வப்புத்திரியான ஸ்திரீரத்நம் ஸ்ரீமதி பாத்திமா பீபீயை நோக்கி அருமைப்புதல்வி! நீர் உமது பர்த்தாவை உமது வாசஸ்தானத்திற்குவர இயற்கனவே பார்த்து விட்டீரானுல் அவரைவரவேற்கும்பொருட்டு உடனே எதிர் சென்றழைத்து அவரை கனம் பண்ணக்கடவீர்" என்றனர்.

7. ஒருவனுக்குத் தன்பெற்ருேர் கேடுதேடினபோதிலும் அவன் அவர்களுக்கு இதத்தையே செய்யக்கடவன்.

8. சகோதரர் இருவரில் இளையவர் மூத்தாரிடம் நடந்து கொள்ளவேண்டிய கடமையாவது, பிதாவினிடம் சுதன் இருப்பது போலாம்.

9. சாதாரணமாய் ஏழை எளியார்க்கு தானம் ஈவது, ஒப்பற்ற ஒருதானபலனை நண்ணவைக்கும். பந்து மித்திருக்கு ஈவதோ இரட்டை வெகுமானத்தைப் பாவிப்பது திண்ணம்.

10. மதவிசுவாசத்திற்கு அத்தாக்ஷியாவது, அருளுடைமை என்ப. அருளுடைமை யாருக்கில்லையோ, அவருக்கு தெய்வபக்தி யிருத்தல் அசம்பாவிதம்.

11. சர்வ சிருஷ்டிகளிடமும் யாவர் உருக்கமுடையாராயுளரோ, அவர்பால் கடவுள் அன்புள்ளவராயிருக்கிருர்.

## 53—நியாயமும் சாமானிய புத்தியும்.

1. ஆதிவஸ்துவாய்ப் படைக்கப்பட்டது யுக்தி அல்லது யூகமேயாகும்.

2. கடவுள் யுத்திக்குமேல் மேலானதாய் எதையும் உண்டாக்கினதே இல்லை.

3. யுக்திக்குமேல் மிகப் பூரணமாயும், நிரம்ப நேர்த்தியாயும் இருப்பது ஒன்றுமே இல்லை. பகவானது திருகருணைகளெல்லாம் அதனது காரணவிருத்திக்கே யாவன. தெளிவும் யுக்தியினுலேயே பிறக்கிறது. அல்லாவுக்கு நமது சிற்சில விஷயங்களில் உவப்பாகாமைக்கும் ஆஸ்பதமாயிருப்பது புத்தியே தான். இதனுலேயே பரிசும், தண்டமும் விளைகின்றன.

4. உண்மையாய் ஒருவர் ஜபதபங்கள், தர்மங்கள், புண்ணிய ஸ்தலயாத்திரை முதலிய மற்றுமுள்ள எல்லாசாதனங்களும் செய்து முடித்திருந்தாலும் அவைகளில் தான் செலுத்தியிருக்கிற விவேகத்தின் விகிதப்படியே யன்றி, விசேஷ பலன்கள் ஒன்றும் சித்திக்கமாட்டா.

## 54—தற்பெருமையுள்ள பிரஜைகள்.

1. ஒருவகுப்பார் தம்மையும் தம்முன்னோர்களையும் புகழ்வதைவிட்டு முற்றாய் நீங்கி இருக்கக் கடவர். மனுவினமெல்லாம் நம் **ஆதிபிதா ஸ்ரீமத் ஆதம்** நபீ அவர்களின் பிள்ளைகள். அவர் மண்ணாலேயே சிருஷ்டிக்கப்பட்டவராயிருந்தார்.

2. செருக்குள்ளவர்கள், பேரின்பலோகத்தை யடைய மாட்டார்கள். தன்னில் ஒருசிறு கடுகளவு அகங்காரமிருக்கப் பெற்றவர் எவரும் மோக்ஷத்தை யடையமாட்டார்.

3. கடவுள் குணோத்தமர், அவர் உத்தமகுணத்தில் வுவப்புறுகிறார். கர்வம் தன்னைஉடையானை உதாசினத்திற்குள்ளாக்குகிறது. மேட்டிமையான துறவியைக் கெட்டவனென்றெண்ணக் கடவை.

## 55—பொறுமையும் பணிவும்.

1. பகவான் சாதுவானவரே! ஆகையால் அவர் சாதுத் தன்மையையே நேசிக்கிறார்.

2. உண்மையில் அல்லாகாருண்யமுள்ளவரே! ஆகையால் அவர் கருணைத்தன்மையையே பிரியப்படுகிறார்.

3. கடூரமானவர்களுக்கு ஈயப்படாததை தயையுள்ளவர்களுக்கு ஈந்துதவுகிறார்.

4. ஒழுக்கத்தைக் குறிக்கிற சர்வசடங்குகளும் உயர்வுடைத்தாம்.

5. சாந்தமும் மரியாதையும் ஞானத்தின் இருகிளைகளென்ப.

6. யாவர் சாந்தத்தன்மையோடு கூடியவராயுளரோ, அவர், அடையத்தகும் பாக்கியத்தின் அம்சத்தை தம் பகவானிடம் ஒப்படைத்திருக்கிறார்; அது அவரை ரக்ஷிக்க சதா பகவானை வேண்டிக்கொண்டேயிருக்கிறது.

7. உண்மையில் நம்நாயகன் நம்மைத் தாழ்மையோடும், சாந்தமாயும் நிரகங்காரியாயுமிருக்கும்படிக்கும், ஒருவர் மற்

ெருவரை சங்கடப் படுத்தாதிருக்கும்படிக்குமே கற்பிக்கிறார்.

8. அல்லாவின் நிமித்தம், யாரொருவர் என்னிடம் பணிவுகொண்டிருக்கிறார்களோ, அவர்களது மாட்சிமையை அல்லா மகிமை படுத்துவாராக. மனத்தாழ்மையும் உபசாரமும் பக்தி மார்க்கத்தின் கடன்களென்ப; யதார்த்தமான சாந்தமே சர்வ புண்ணியங்களுக்கும் பிறப்பிடமாயுள்து.

## 56—அநாதைகள்.

1. திக்கற்ற குழந்தைகளை நன்றாய் க்ஷேமப்படுத்துகிற குடும்பமெதுவோ, அதுவே முஸ்லிம்களில் உயர்ந்தாரின் குடும்பமெனப்படும்.

## 57—தண்டனை.

1. சந்தேகமின்றி உன்னுடைய செயல்களே, உனக்கு உரித்தான தண்டனையை சிருஷ்டித்துக் கொள்ளுகின்றன. ஆதலால், மெய்யாகவே நீ மீண்டும் விசாரணைக்குக் கொண்டு வரப்படுவாய்.

## 58—சுகாதாரம்.

1. நிலத்தண்ணீரை அசுசியால் மலினமாக்கக் கூடாது.

2. கடவுள் பரிசுத்தர், அவர் புனிதத்தையும் சுசிகரத்தையுமே திருவுள்ளங் கொள்ளுகிறார்.

3. சிட்டில் குருவியைப்பார்! அது இரைதேடும் சமயம் தவிர மீதி நேரங்களை எல்லாம் தன் சுண்டினால் தன்மேனியை சுத்திகரித்துக்கொண்டே இருக்கின்றன. அறிவுள்ள நீ என்றும் பரிசுத்தமாய் இருக்கப்பார்.

4. நீ புசிக்கும்போது சுத்தமாயிருந்து சுத்த ஆகாரத்தையே உட்கொள்ளக்கடவாய்.

5. நீ நித்திரை செய்யும்போதும் உன் இடத்தை சுத்தி செய்துகொண்டு, சுத்த ஆகாயத்தைப்பேணியே சையனிக்கக் கடவாய்.

6. நீ பூமியில் நடந்து திரியும்போதும் துர்கந்தமான இடங்களை விட்டு விலகி சுத்தமான வழிதேடிச்செல்.

7. உன் ஆண்டவரை ஜபிக்கும் சமயமெல்லாம் பரிசுத்த மாயிருந்து, கை, கால், முகம் முதலிய அங்கங்களை சுத்தி செய்துக்கொள். ஏனெனில் அவர் உன்னை புத்தியுள்ள மனு ஷனுகவே சிருஷ்டித்தார். அப்படியே அவர் முன்னிலையில் நீ புத்திசாலி என்று மதிக்கப்படவேண்டும்.

8. கடவுள் சந்நிதானத்தில் போகும்போதும் நிற்கும் போதும், அசுத்தத்தை நீக்கி தூய்மையைப்பேணிக்கொள். அப்படியே அவர் சமுகத்தில் நிற்கும்போதும் பரிசுத்த ஆல யத்துட் பிரவேசிக்கும் போதும் உன் அடிச்சுவடுகளைக் கழற்றி அப்புறப்படுத்திவை.

9. ஜலமானது சகல அசுத்தத்தையும் போக்கி உன்னைச் சுத்திகரிக்கும் பாக்கியமாயிருக்கிறது. அதனுலே உன்மேனி யைச்சுத்தி கரித்துக்கொள்.

10. பிணிக்கு ஏதுவான அசுத்த ஆகாயத்தைவிட்டு நீங்கி உன்னைப்பேணிக்கொள்.

11. நீ புசிக்கும் உணவுகளும், உடுக்கும் வஸ்திரங்களும் சுத்தமா இருக்கக்கடவது.

12. உனது ரசூல் எப்பொழுதும் சுத்தத்தையே பேணி நடந்தார்.

## 59—பகவானுடன் சரிசமான பூஜ்யதைப் பெறும் விஷயமாய், முஹம்மத் நபீ யவர்களின் அசம்மதம்.

1. தமது தேகவியோக நிலைமையில், தத்தம் தீர்க்க தரிசிகளின் சமாதி அறையை அடுத்து அவர்களை எண்ணி அவர்களிடம் மன்றுடுகிறவர்கள் வெறுக்கப்படத்தக்கவர்க ளாகிறுர்கள். நீ அடைந்திருக்கும் சர்வ பாக்கியங்களும் உன் அல்லாவுக்குடையதே. மேலும் உனக்கு வேண்டியதை அவ ரிடத்திலேயே கேட்பாயாக.

## 60—மானம்.

1. கொடைபுரிகிற மேல்கையானது கொடைபெறுகிற கீழ்கையினும் சிலாக்கியமானது.

2. நாம் பிச்சைக்கு கையேந்துவது நமது மகத்தான ஞானலட்சணத்தைக் கை இழப்பதேயாம்.

3. நமது மனம் அதைரியமடையாமலும் உலோபகுணம் பெறாமலுமிருக்கும்படி பகவான் நம்மை ஆதரிப்பாராக.

## 61—வியாபாரக்கிரமம்.

1. உத்தமர் யாரெனில், மதிப்பாயும் நாணயமாயும் வர்த்தகம் நடத்துகிறவரேயாவர்.

2. திருப்பி செலுத்திவிடவேண்டுமென்ற யெண்ணத்தோடு கடன் வாங்குகிறவருக்கு கடவுள் துணை இருக்கிறார். மோசசங்கல்பத்தால் இரவல் கேழ்க்கிறவரை, கடவுள் அழித்து விடுகிறார்.

3. சகோதரனுக்கு சகாயந்தேடுகிறவர் சாக்ஷாத் ஜகத் கர்த்தாவினுல் உபகரிக்கப் படுகிறார். சகோதரனை குற்றத்தில் காட்டிக்கொடுக்காத ஒரு சத்புருஷன் கடவுளால், அவர் குற்றங்குறைகள் மறைபட, கடாக்ஷிக்கப்படுகிறார்.

## 62—வேலையாட்கள்.

1. ஒரு பணியாளன் தன் எஜமானது சொத்துக்களைசர்வ பொறுப்பு வகித்து தம் பொருளைப்போல் பாதுகாக்கக் கடவன்.

## 63—எச்சரிக்கை அல்லது நிதானிப்பு.

1. வைராக்கியமுடையவன், தன்னை எச்சரிக்கையாயிருக்கப்பார்த்துக் கொள்ளவேண்டும்.

2. ஆண்டவன் நமக்கு கோழைத்தன்மையும் பிசுனத்தனமும் பொருந்தாமற்றடுப்பாராக.

## 64—கிடைத்தமட்டில் திர்ப்தி.

1. யாரொருவர் தமக்கு இரத்தல் வழியைத் திறந்து கொள்ளுகிறார்களோ, அவருக்கு நம்நாயகன் வறுமைவழியைக்காட்டுகிறார்.

2. ஒருபுருஷர் உம்மைக்காட்டிலும் தனத்திலும் சௌந்தர்யத்திலும் அதிகமாக வாய்க்கப் பெற்றிருக்கக்கண்டால், உம்மிலும் குறைவாய் வாய்க்கப்பெற்றிருக்கிற எத்தனையோ மனிதரைக் காணக்கடவீர்.

3. உனக்குக் கீழானவர்களைக் கவனித்து வருக. அது உனக்கு நன்மை பயக்கும். அதனால் நீ, கடவுள் திருவுளத்தை தூஷணைபுரியாதிருக்கக் கூடும்.

4. லோகத்தில் ஒரு யாத்திரிகரைப்போலவும், வழிப் போக்கரைப்போலவும் இருந்து, நடைப்பிணத்திற்குச் சமமாக உன்னை மதித்துக்கொள்.

## 65—மஆஸ் நண்பருக்குப் போதனை.

மஆஸ் நண்பர் சொல்லும் விஷயமாவது:—

1. "நமது ரக்ஷகர் முஹம்மத் நபீ யவர்கள் ஒருகாலத்தில், என்னை எமன் பட்டணத்திற்கு நியாயஸ்தல விசாரணை நிர்வாக விஷயமாய் அனுப்ப உத்தேசித்து அப்படியே அவ்விடம் என்னை அனுப்பிவைக்க, நான் சவாரியிலிருக்கையில் நபீ அவர்கள் என்வாகனத்தின் பாரிசம் நடந்து வந்தவராய் எனக்குச் சிலயோசனை புகன்று பிறகு, என்னைநோக்கி ஏ! மஆஸ்! நீர் என்னை இவ்வருஷத்திற்குப் பின் காணமாட்டீர், இது வாஸ்த்வம் என்றனர். அச்சமயம் நான் நபீ அவர்களின் பிரிவாற்றாமையைக்குறித்து விசனத்தால் பிரலாபிக்க, பரிசுத்த ரசூல் அவர்கள் என்பக்கம் திரும்பி எனக்காகக் கண்ணீர்விட்டு திருமதீனா நகர் திசையாக தம் திருமுகம் திருப்பிக்கொண்டு, எவர்யாரிடத்தும் அன்புடையரா இருப்பரோ அவர் எவ்விடமிருப்பினும், என் சமீபத்திலுள்ளவரே, என்று அன்பைப் பற்றி விசேஷித்தருளினர்."

2. "நபியவர்கள் ஒருகாலத்தில் ஒருபாயில் படுத்துத் திருக் கண் வளர்ந்து, பின் தேகத்தில் மிகப்பதிந்த தழும்போடு எழுந்தருளினபோது, இதைத்தெரிந்த நான் நபீ அவர்களை நோக்கி பரிசுத்ததூதரே, நீர் எனக்குக் கட்டளை இட்டிருந்தால், நான் வஸ்திரம் விரித்திருக்கமாட்டேனே என்ன, பிரதி உத்தர மாக நபீ அவர்கள் எனக்கு உலகத்தில் என்ன அலுவலிருக் கிறது. ஒரு குதிரைமேலிருக்கும் மனிதன் அந்தஸ்து எவ்வள வோ அவ்வளவே இவ்வுலகத்தில் எனது தன்மையும். அதா வது அவன் மரத்தின் நிழல் கண்டவிடம் சிறிது தங்கிப்பிறகு, அதைவிட்டுக் கிளம்பி விடுவதுபோலவே எனது விவகாரமும் என்றனர்."

## 66—இரக்கமும் உடனுத்தரிப்பும்.

**மறுமையில் நமது ஆண்டவரின் வினவும் தண்டனைக் கூரித்தான பிரஜைகளின் உத்தரவும்:—**

1. நான் உங்களை சிருஷ்டிகளிலெல்லாவற்றையும் விட மேலாய்ப்படைக்க வில்லையா?

2. உங்களுக்காக நான் அளித்திருந்த சர்வகடாட்சத்தை யும் நீங்கள் அநுபவிக்கவில்லையா?

3. உங்களுக்கு புத்தியைக்கொடுக்க வில்லையா?

4. உங்களிடம் எமது தூதர்களை அனுப்ப வில்லையா?

5. அவர்கள் எனது கற்பனைகளை உங்களிடம் சேர்க்க வில்லையா?

6. இப்பொழுது உமக்காக இவ்விடம் அனுப்பிக்கொ ண்ட சார்புகள் யாவை காட்டுவீர்களாக? என்பர்.

அப்பொழுது அவர்கள் ஆண்டவரே மெய்யாகவே உம் மையும், உமது ரசூலையும் மறுத்தோம்; உமது கடாட்சத்தில் நாங்கள் மதி ஈனமடைந்தோம் என்றுரைத்து வேறொன்றும் சொல்ல மார்க்கமில்லாமல் தங்களைத் தாங்களே நொந்து கொள்வர்.

## 67—பிணியாளிகளைப் போய்த்தரிசித்தல்.

1. பசியினால் வருந்துகிறவர்களை உண்பிப்பாயாக.

2. வியாதியஸ்தர்களைப்போய்க் கண்காணிப்பாயாக.

3. அநீதமாகச் சிறைப்பட்டவர்களை மீட்பாயாக.

4. இடுக்கண்படுகிறவர் முஸ்லிம் அல்லது முஸ்லிமல்லாத எவராயிருந்தாலும் சரியே, அவருக்கு உதவிசெய்வாயாக.

5. பகற்காலத்தில் வியாதியாயிருக்கிற ஒருவரை காண்கிறவர் எவருமில்லை. ஆனாலும் அவருக்காக எழுபதினாயிரம் தேவதூதர்கள், மாலைநேரமட்டும், மங்களாசாசனை செய்து வருகிறார்கள். அப்படியே இராக்காலத்திலும் வியாதியஸ்தர்களை வந்து ஏறெடுத்துப்பார்க்கிறவர், ஒருவரையுங்காணோன். ஆயினும் ஆதரவற்ற அவருக்காக பதினையாயிரம் தேவகிங்கரர்கள் விடியுமளவும் ஆசீர்வதித்துக்கொண்டு கவனித்து வருகிறார்கள். இகத்தில் யாவராலுங் கைவிடப்பட்ட நிலையமைந்தமானவருக்குப் பரத்தில் சர்வதோஷ விமோசனமுண்டு, என்பது திட்டமான சட்டமாகும்.

6. நோய்கொண்ட ஒருவரை எவர்போய் தரிசித்து வருகிறாரோ அவருக்காக விண்ணுலகத்திலுள்ள தேவதூதர்கள் கடவுளே! இம்மனுஷ்யனை உலகத்தில் பாக்கியவானாயிருக்கக் கிருபைசெய், இவரதுநடக்கை ஆநந்தகரமாயிருக்கக்கடவது, இவருக்கு ஆநந்தலோகத்தைக் கடாட்சித்தருள் என்று பகவானை மன்றாடிக்கொண்டே இருப்பார்கள்.

## 68—சத்தியத்தை மறைக்காதே.

1. கடவுள் சம்மதமான மதத்தை எடுத்துப் பிரஸ்தாபித்தலில், ஏவரெவர் எவ்வெவ்வவதூறு, தூஷணை செய்தாலும், அதற்கு அஞ்சாதிருக்கக் கடவை.

2. பிரஜைகளுக்குக் கசப்பாயும் பிரியவீனமாயும் இருப்பினும், நீ உண்மையே பிரசங்கிப்பாயாக.

## 69—தீர்க்கதரிசியின் சீலங்கள்.

1. ஜகத்பரிசுத்த பெண்ணரசி ஸ்ரீமதி மற்யம் பீபீ அவர்களின் அற்புத புத்திரராகிய ஸ்ரீமத் ஈசாநபீ அவர்களைக் கடவுளென்றும், கடவுளுடைய புத்திரரென்றும், அழைத்து கிறிஸ்தவர் போற்றுவதுபோல, என்னையும் வரம்புகடந்து ஸ்துதிக்க வேண்டாம். நான் என் ஆண்டவருக்குத் தாசனே யொழிய வேறல்ல. ஆகவே, என்னைக் கடவுளுடையசேவக னென்றும், அவரது தூதனென்றும் கூப்பிடுங்கள்.

2. அல்லாஹுத் தஆலாவின் தூதர், மனுவர்க்கத்தில் மிக நேர்த்தியானவரும், பரம ஔதாரியும் அதிதைர்ய புருஷருமாயிருப்பர்.

3. பகவான் என்னைக் கீழ்ப்படிந்து நடக்கவும், தாழ்மையோடிருக்கவும், மமதையற்றவனாய்க் காலக்ஷேபஞ்செய்யவும், அந்நியரை விரோதித்துக்கொள்ளாதிருக்கவும், வற்புறுத்தியருளுகிறார்.

4. என்னை அவர் ஓர்வணக்கமுள்ள அடியானாக ஆக்கிக்கொண்டாரேயன்றி நான் என்னை பெருமிதமான அரசனாக ஆக்கிக்கொள்ள அவர் எனக்குத் திருவுளம் பற்றவில்லை.

5. எனக்கு முன் வந்த தீர்க்க தரிசிகளின் வார்த்தைகளையே நான் ருஜுப்படுத்த வந்தேன்.

6. நான் அப்துல்லாவின் புதல்வனாயும் தீர்க்கதரிசிகளில் முற்றுகை யானவனாயுமிருக்கிறேன்.

7. உலகத்தில் எனக்குப் பசியும், தாகமும், நித்திரையும் விழிப்புமுண்டு.

8. எனது லட்சணாதி இயல்புகளைப்பற்றி எனக்கு முன் வந்த சர்வ தூதர்களும், தீர்க்க தரிசிகளும் இயற்கனவே முறையிட்டிருக்கிறார்கள்.

9. எனக்கு முன் வந்த வேதங்களெல்லாம் எனக்குசாட்சிகளாய் இருக்கின்றன.

10. கடவுளது கட்டளைகளையே நான் உங்களுக்கு நிறைவேற்ற வந்தேன்.

11. அவரது திருவுளமல்லாத வொன்றையும் நான் உங்களுக்குச் சொல்லவேயில்லை.

எனது ஏவல்களில் விசேஷம் இதுவே:—

12. (a) ஒப்பற்ற கடவுள் ஒருவரே ஒருவர்.
(b) மெய்யாகவே நியாயத்தீர்ப்பு நாள் ஒன்றுண்டு.
(c) கடவுளுக்கு யுக்தமான வணக்கத்தில் பண்படுங்கள்.

13. மனுஷ்யர்களிடம் ஆண்டவன் பொருட்டாய் யாவர் தாழ்மையோடு இருக்கிறாரோ அவரது கீர்த்தியை ஆண்டவர் மேன்மைப்படுத்துகின்றார்.

## 70—ஜனோபகாரிபொருவன் அல்லாவினிடம் வகிக்கும் மனஸ்தாபத்தைக் குறித்து.

1. பரோபகாரியாயிருந்து, கடனையும், குழந்தைகளையும் வைத்துவிட்டுப் பிரிகிறவரெவரோ, அவர் என்னிடம் வரக்கடவர். அவர் சலிக்க வேண்டாம். நான் அவருக்கு உத்தரவாதியாயுள்ளேன்; அவரது ருணத்தைத்தீர்த்து அவருடைய குழந்தைகளையும் பரிபாலிப்பேன் என்று பகவான் அருள்கின்றார்.

## 71—நிஷ்கபடமும், மெய்ம்மையும்.

1. வார்த்தையினால் மாத்திரம் எவரும் உண்மையுடையவராகார். திரிகரணத்திலும் உண்மையுடையவரே, சத்திய புருஷராவர்.

## 72—அடிமைத் தன்மையை எவ்வாறு பக்குவமாய் விலக்கிக்கொள்வது.

1. உம்மில் நீசமானவர் யாரோ, அவரைக்குறிக்கிறேன் கேளும். யாவர் தாமே உண்கிறவராய், அடிமைகளை அடித்து எவருக்கும் ஒன்றும் வழங்காதிருக்கிறாரோ, அவரே பரமபதிதராவார்.

2. தம் தொழும்பரை இம்சைப்படுத்துகிறவர், மோக்ஷத்தில் பிரவேசிக்கமாட்டார். பிரார்த்தனை பண்ணுகிற தாசர்கள் உனக்குச் சகோதரர்களாகிறார்கள்.

## 73—சத்சகவாசம்.

1. துஷ்டரோடு தோழமை வைத்திருப்பதைப் பார்க்கிலும் ஏகாந்தமாய் உட்கார்ந்திருப்பது சிறந்தது. அந்த ஏகாந்த இருப்பைப்பார்க்கிலும் சிஷ்டர் சகவாசம்பெற்றிருப்பது மிகச் சிறந்தது. வெறும் வாய்பேசா மோனங்கூடி யிருப்பதைப்பார்க்கிலும் தத்துவ ஆராய்ச்சிக்காரர்களோடு வார்த்தையாடல் சாலச்சிறந்ததாம். ஆகாதமொழிகளாடலைப்பார்க்கிலும் பேசா விரதம் பூண்டிருப்பது மெத்தவும் நலமென்ப.

## 74—முஹம்மத் நபீ அவர்களின் விநயமும் தயாளமும்.

**நபீ அவர்களின் சந்நிதானத்தில் இருந்த ஒரு சிஷ்யர் சொல்லுவது:--**

1. "நான் கடவுள் இல்லையென்று வாதிக்கிற நாஸ்தீகரின்மேல் வெறுப்புக்கொண்டு நமது ரட்சகபெருமான் முஹம்மத் நபீ அவர்களை நோக்கி சத்தியத்தைப் போதிக்கவந்த சற்குருவே! கடவுள் இல்லையென்று வாதிக்கிற கடும்பாதகரை தாங்கள்ஏன் சபித்து நிர்மூலமாக்கக்கூடாது என்றேன்.

நபீயவர்கள் நான் இதன் நிமித்தம் அனுப்பப்படவில்லை. மனுவினங்களுக்கு பரிதாபங் காட்டுமாறே வந்துள்ளேன் என்றனர்."

**அநஸ் என்னும் ஒரு நண்பர் தெரிவிப்பதாவது:—**

2. "நான் 10 - வருஷகாலம் நபீயவர்களோடு கூடவே இருந்து அவருக்கு ஊழியஞ்செய்து வந்தேன், அவர் சற்றேனும் என்மீது அதிர்ப்தி கொண்டதேயில்லை. மேலும், ஏன் அங்ஙனம் செய்தாயென்றும், ஏன் இவ்வண்ணம் செய்யவில்லையென்றும் எப்பொழுதாவது என்னைக் கேட்டதேயில்லை."

3. உண்மையும் பரிசுத்தமும் இரக்கமுமுள்ள மனதைப் படைத்தவர்கள், சுகாநந்தச் சோலையிற் பிரவேசம் பெறுவார்கள்.

## 75—வாசா ஞானிகள்.

1. ஜனங்களிடம் விநயமாய் நடந்துக்கொள். முஷ்கரமாயிராதே. அவர்களைத் தூகலிக்கச்செய். அவர்களிடம் குற்றங் காணுதே. பரமண்டலத்திற்குத் திறவுகோலெதுவென்று உன்னைச் சந்தித்து அநேகர் கேட்ப்பார்கள். அல்லாவின் தத்வார்த்தங்களுக் கேற்ப ரூபிக்கும்படியும் நற்றொழில்களைச் செய்யும்படியும் நீ அவர்களுக்குப் பிரதியுத்தரஞ்சொல்வாயாக.

## 76—சங்கடத்தில் ஏங்காமை.

1. நெருக்கிடைகாலத்து எவர் பிறரது ஒத்தாசையை வேண்டுகிறுரோ, அவர் நம்மவரல்லர்.

2. அதிக்கிரமமாய்த் தம் இனத்தாருக்கு வார்ஸாகப் போராடுகிறவரும் நமக்குப் புறம்பானவரே.

3. கொடுங்கோன்மை நிர்வாகத்தில் தம் ஜாதியாருக்குத் துணைநின்று பொன்றுகிறவரும் நமக்கு உவப்பானவரல்ல.

## 77—முஹம்மத் நபியவர்களும் அவரது பிரார்த்தனையும்.

1. ஓ அல்லா! எனக்கு உம்மால் பக்தியினை அருள்புரிவீராக. உம்மை விசுவசிக்கிறவர்களை நான் விசுவசிக்கும்படியான நின் அன்பர்க் கன்பணுகும் பேற்றினை அடியேனுக்குப் பாலிப்பீராக. உமதருளை ஜெயம்பெறுதற்கேற்றதோர் செயல்களையே நான் செய்யவேண்டி அநுக்கிரகஞ்செய்க. எனது தத்சுவரூபத்தைப் பார்க்கிலும், எனது குடும்பத்தைப் பார்க்கிலும், எனது ஐஸ்வர்யத்தைப் பார்க்கிலும் தேவர்மேல் கொள்ளும் அன்பே எனக்கு அதிக அருமையாயும், பெருமையாயும், பிரியமாயுமிருப்ப சடாட்சிப்பீராக.

## 78—இல்லறம்.

1. இஸ்லாமியம் துறவறத்தார்க்குமட்டும் உரித்தான தன்று. இல்லறதர்மம் நிர்வகிக்கத்தக்க ஆதரவு அமைந்தவ ரெல்லாருக்கும் உரித்தாயுளது.

## 79—மன்னிப்பின் பலன்.

1. தனக்கு சர்வ பக்கபலமும் பணபலமுமிருந்தும் தன் விஷயமாய் குற்றம் புரிந்தவரை பொறுத்துக்கொள்ளுகிற உயர்குண முடையவர்கள், நம் நாயன் சமீபத்தில் கண்யம் பெறுவார்கள்.

**நபீ அவர்களின் திருவாக்கு:—**

2. "பகவானது திருவசனத்தைக்கேள். என்னிடம் சித்தம் வைக்கிறவர்களது சித்தத்திற்கு நான் அணுக்கமாயுள்ளேன். அவர்கள் என்னை சிந்தனை செய்கிறபோது, நான் அவர்களுக்குள் அந்தர்யாமியாயும், சமீபமாயும் எழுந்தருளுகின்றேன்."

3. "என்னைத்தேடி அணுகும்படி விரும்பி ஒருவர் ஒரு அடி நடந்தால், நான் அவரைக்கிட்டும்படி க்ஷணத்தில் அவரண்டை போய்ச்சேருகிறேன். எனக்காக ஒரு கெஜதூரம் நடந்தால், நான் அவர்கள் பொருட்டாய் இருகாததூரம் நடக்கிறேன். எவரொருவர் என்னைநாடி நடந்துசெல்லுகிறார்களோ, அவர்களை நாடி, நான் ஓடோடி வருகிறேன். யாவரொருவர் என்னையே தீர்க்கமாய் அடைக்கலமென்று நம்பி சர்வபாபராசிகளோடு கூட, என் சந்நிதிமுன் வருவார்களானால், அவர்களுக்கெதிராக நான் கூடி 'மாதர்மத்தை வீசிக்கொண்டு ஆயத்தப்படுகிறேன்."

4. நமக்குப்பிறர் நன்மை செய்தால்தான் நாம் அவருக்கு நன்மை காணுவோமென்றும், நம்மைப் பிறர் துன்பஞ்செய்தால் நாம் அவருக்கு அப்படியே செய்வோமென்றும் விளம்பக்கூடாது. ஆனால், நாம் இதரர்களிடமிருந்து யாதொரு நன்

மையை யெதிர்பார்க்காவிடினும், நாம் அவருக்கு நன்மையே புரிவோமென்றும், அவர்கள் நமக்கு இடைஞ்சல் தேடினாலும், நாம் அவருக்குக்கொடுமை நாடமாட்டோமென்றும் நியமனஞ் செய்துக்கொள்ளக் கடவோம்.

## 80—புத்திரிகளும் பெண்களும்.

**1.** பெண்களுக்கு நலஞ்செய்கிறவர் யாவராயினும், அவருக்கு, அந்த தர்மமானது மற்றைய கடும்பாப பலனாகும் நிரய தண்டனைக்குப் பரிகாரமாக நிற்கிறது.

2. யாரொருவர் இரண்டு பெண்களைப் பரிபக்குவமடையுமளவும் பாதுகாக்கின்றார்களோ, அப்பேர்ப்பட்டவர்கள், சுவர்க்கத்தில் என்னுடன் எனது இரண்டுவிரல்கள் நெருங்கியிருக்கிறதுபோல, சேர்ந்து வீற்றிருப்பார்கள்.

3. நிராதரவான விதவைகளையும், ஏழைஎளியவர்களையும், சம்ரக்ஷணை செய்கிறவர், தெய்வவழிப்பாட்டில் நிலைநிற்கிறவரைப்போலவும், நாள்முழுதும் பிரார்த்தனைசெய்கிறவர்கள் போலவும், நிரந்தர விரதப்பற்றுடையவர்கள் போலவுமாயிருக்கிறார்கள். நானும் ஆதரவற்ற மக்களைக் கைகொடுத்துக் காப்பாற்றுகிறவர்களும் மோக்ஷலோகத்தில் ஒன்றக்கொன்று நெருங்கியுள்ள எனது விரல்கள்போல ஒருமித்துக் கொலுவிக் கொண்டிருப்போம்.

4. புண்ணியங்களிற் சிறந்ததைக் குறித்து நான் உங்களுக்கு அறிவிக்க வேண்டுகிறேன். தம் பர்த்தாவால் கைவிடப்பட்டு உன்னிடம் திரும்பிவருகிற உனது குமாரத்தியை அன்புபாராட்டி உபசரிக்கவேண்டும்.

**5.** குமாரத்தியைப் பெற்றவர், அவளை உயிரோடேயே புதைக்காமலும், நிந்திக்காமலும் இருந்து, ஏனைய பிள்ளைகளிடமும் பக்ஷபாதம் காண்பிக்காமல் செல்வமாய்க்காப்பாற்றி வந்தால், அவரைப் பராபரன் தம் லோகத்திற்கு வரவழைத்துக் கொள்ளுகிறார்.

## 81—தாளாண்மை.

1. பகவானின் முகவுல்லாசத்திற்கு முக்கியமான நல் வினைகளுள் சிறப்புடையது எதுவென்னில், எடுக்கும் முயற்சியைச்சிறுகச்சிறுகச் செய்தாலும் இடைவிடாது கவனித்து வருவதாம்.

2. நல்லொழுக்கத்தில் பிடிவாதமாயிருந்து தீயவொழுக்கத்தினின்றும் நீர் விலகிக்கொள்ளக்கடவீர்.

## 82—வீரதீர பராக்கிரமம்.

1. அல்லாவும் அவரது தூதரும் உன்னை நேசிக்கிறதற்கு யோக்கியதையான இரண்டு லக்ஷணங்கள் உனக்கு வேண்டும். வீரதீரபராக்கிரமமும், சாந்தமுமேயாம். ஆபத்தில் விழுந்து தேராதவரை, பூரணமான விக்கிரம புருஷரென்று சொல்ல முடியாது.

## 83—முன்யோசனை.

1. எடுக்கும்முயற்சிகளில் முதிர்ந்த ஆலோசனையுடைமை நம் ஆண்டவருக்கு இங்கிதமாயுளது.

2. நற்சுவபாவமுடைமையும், அலுவல்களில் ஆழ்ந்த ஆராய்ச்சியுடைமையும், சகல கார்யங்களிலும் அரிய உபாயத்தைத் தொடுத்துப்பார்க்குந் திறமையுடைமையும் நபீயவர்களுக்கு இயைந்த குணவிசேஷங்களென்ப.

## 84—விரதம் அல்லது நோம்பு.

1. ஒருவர் நோன்பு அநுஷ்டிக்கிறபொழுது எவ்வித வசவான சொற்களையும் உச்சரிக்கக்கூடாது. மற்றவரது தவறை யுத்தேசித்து கோபமும் அடையக்கூடாது.

2. விரதம் ஆசரிக்கிறவரொருவர், பொய்பேசுதலையும், புறங்கூறுதலையும் ஒழியாரானால், ஆண்டவர், அவரது உண்பன, மடுப்பன விடுத்தமைக்காக உபேக்ஷையடைகிறார்.

3. மெய்யான உபவாசத்தில் அமர்ந்திருப்பவர் தங்கள் பஞ்சேந்திரியங்களையும் பாபக்கிரியைகளுக்கு இடங்கொடாமல் பாதுகாத்துக் கொள்ளக்கடவர்.

4. விரதநிபந்தனையில் ஸ்தூல இச்சைக்குரிய யாதொரு பொருளையும் உன் நவத்துவாரங்களின் வழியாய் உட்செலுத்தக்கூடாதென்ற சுதந்திரம் பெற்றிருப்பதுபோலவே ஐம்பொறிகளின் வழியாயும் உன் ஆத்தும நாசத்திற்குரிய நஞ்சுணவை உட்கொள்ளக் கூடாதென்ற சுயேச்சையும் பெற்றிருக்கிறாய்.

5. உன் இருதயம் யாதொரு தீமையான கிரியைகளையும் எண்ணாதிருக்கக் கடவது.

6. உன்நேத்திரங்கள் யாதொரு தீமையான பார்வைக்கும் இடங்கொடாதபடி உன் இருகண்களையும் விழிகண் குருடாக்கிக்கொள்.

7. உன் இருகாதுகளும் தீமையான வார்த்தைகளுக்கு இடங்கொடாதபடி உன்மடல்கள் இரண்டையும் மூடிக் கொண்டு செவியை மந்தமாக்கிக்கொள்.

8. உன் இருநாசித் துவாரங்களும் யாதொரு தீமையான நுகர்ச்சியைக் கிரகித்துக்கொள்ளாதபடி உன்னை மூக்கறையனாக்கிக்கொள்.

9. உன் நாவினால் யாதொரு தீமையான வார்த்தைகளையும் வசனிக்காதிருக்கும்படி உன்னை ஊமையனாக்கிக்கொள்.

10. உன் இருகரங்களும் யாதொரு தீமையான கிரியைகளைச்செய்ய எத்தனிக்காதபடி அவைகளை முடமாக்கிக்கொள்.

11. உன் இருகால்களும் யாதொரு தீமையான வழிசெல்லாதபடி அவைகளை சப்பாணிட்டுக்கொள்.

12. பசியின் கொடுமை அறியாத செல்வேந்திரன் உபவாசத்தினால் உணர்ந்து விரதமற்ற காலங்களில் தன்னிடம் வரும் பசியாளிகளுக்கு அன்னமீந்துதவுவான்.

13. ஒருநேரத்துப் பசியைத் தாங்காமல் வருந்துகிற ஒருவன் விரத அப்பியாசத்தினுல் பக்குவப்பட்டு ஏனையசமயத்தை விரதநாட்களைப்போல் பாவித்து பசியைச் சகித்துக்கொள்ளும் பரம்பொறுமையைக் கடைப்பிடித்துக் கொள்ளுவான்.

14. பசித்தும், தாகித்து மிருந்துக்கொண்டு பொறிகளைத் தீமையான வழிசெல்ல விடாதபடி உண்மையான உபவாசத்தில் நிலைத்து பக்தியில் தரிபட்டிருப்பவரே தமது ரசூலின் நோன்பைப்பேணி நடந்தவராவர்.

15. வியாதியஸ்தனுக்கு தன் வியாதி தீருமளவும், யாத்திரீகனுக்கு தன் யாத்திரை ஓயுமளவும், கடமையான உபவாசத்தை அநுசரியாமல் கடனுக நிறுத்திக்கொள்ள காருண்யமுள்ள அல்லாவினுல் அதிகாரம் பெற்றிருக்கிருன். ஆனுல் அவன் வியாதிதீர்ந்தும் அவன் யாத்திரை ஒழிந்தும்போன பிறகு கடனுயுள்ளதன் கடமையான உபவாசத்தை நிறைவேற்றக்கடவன்.

16. விரதத்தில் மனமுறண்டாய் யாதொன்றையும்புலன்கள்வழியாய் வெளியாக்காதிருக்கக்கடவாய். அப்படியேபொறிகள் வழியாய் உட்செல்லாதிருக்கும்படி உன்னைகாத்துக்கொள்.

17. சகல துன்மார்க்கங்களையும் போக்கடித்து உண்மையான உன் சத்துருவோடு போராடத்தக்க பிரதான யுத்தம் விரதயுத்தமேயாகும். அதனுல் அவனை ஜயித்து வீரசுவர்க்கம் அடைந்துக்கொள்.

## 85—முஸ்லிம்களிடத்து ஆதரவு வைக்கும்விதம்.

1. ஒரு முஸ்லிமை தெய்வ அச்சமும் அன்புமற்றவனென்று யாவராவது எண்ணினுல் அது பொல்லாத பலனைப் பயக்கும்.

2. ஒரு முஸ்லிமைக் குறைகூறுவது பகவானுக்கு அமையாமையாகும். ஒருவரோடு சச்சரவு தொடுத்துக்கொள்வது மிகவும் பாதகமாம்.

3. ஜனங்களைச் சபித்தல் யதார்த்த வாளிகளுக்கு அடுத்த தன்று.

# முடிவுரை.

தர்மமேஜேயம், தர்மமே உலகத்தில் சிறந்தது; என்று னும் தர்மம் இன்னது, அதர்மம் இன்னது, என்பதைப்பகுத் துக்காட்டி அதர்மத்தைத்தவிர்த்து, தர்மத்தின் பேரில் ஒழுகி நடக்க அதற்குக் காரணமாயிருக்கும் விசேஷக்கருவி புத்தியே யாகும்.

ஆகையால் புத்தியையே மதிப்புக்கடங்காத எல்லாவற் றிற்கும் மேலான சிறந்த பாக்கியமாகக்கருதவேண்டும்.

ஆனால், புத்தியானது, சதா நமக்குள் இருக்கிற 'நான்' 'யான், என்னும் அகங்கார ஆன்மப்பிணிக்கு உரித்தாய் விடு வதினால், அது விகாரப்பட, தர்மம் நிலைகுலைந்து ஜகத்தில் நீதியில்லை, நியாயமில்லை, பாவ புண்ணியமில்லை, உத்தரவாத மில்லை, பலனில்லை, தண்டனையில்லை என்று சாதிக்கவும், பக்தி விஷயமான லௌகீக வைதீக தர்மத்தை நிராகரித்துத்தள்ள வும் ஏற்பட்டு விடுவதோடு, உலகமும் அநியாயமான கலகத்துக் கும், பழிக்கும் இடமாகி அந்தோ! சர்வ நாசத்துக்கும் உட் பட்டு விடுகிறது.

ஆகையால் நம்மை மதி மோசப்படுத்துகிற நான், எனது, என்னும் அகந்தையான அதர்மகுணத்தை, நமதுபுத்தியின் அந்நியோன்னிய சம்பந்தத்தை விட்டும் நீக்கிக்கொண்டால் தான் புத்தி தன் நிலையில் நிற்க, நியாயம்தோன்றி 'தர்மமேஜே யம்' 'அறத்தால்வருவதே இன்பம்' என்று அறிந்து உணர்ந்து கொள்ளுவோம்.

ஆனால் மமதையான இவ்வகங்காரப்பிணியை எவ்விதம் தொலைப்பது, எங்ஙனம், புத்தி சுயம்பானதன்நிலையில் நின்று தர்மத்தை விளக்குவது என்பதே ஆராய்தற்பாலது.

எல்லாவற்றையும் காண்கிற கண் தன்னைக்காணாததுபோல, நற்குணத்திற்கே பாத்திரமான புத்தியானது தன்னைத் தானே திருத்திக்கொள்ள இசையாமலும், எல்லாவற்றையும் அறிகிறமனம் தன்னை அறியாததுபோல துர்குணத்தையே விரும்பி தன்னை மோசப்படுத்த உறவாடும் மமதையை புத்தியறியாமலும் நேர்வழியில் கிரமமாய்ச்செல்லாது பழுதுப்பட்டு தர்மம் தலைகுலைந்து போகிறது.

கண்ணைக்காண ஒரு கண்ணாடியும், தன்னை அறிய ஒரு தலைவனும் வேண்டியதுபோலவே புத்தியைத்திருத்த ஒரு வேதமும், அதன் பகைவனைக்காட்டி அவனை சங்கரிக்க அதற்கொரு அதிபதியும் வேண்டிய தவசியம் என்று ஏற்படுகிறது.

ஆனால் அவ்வேதமானது புத்தியின் இயற்கையான பெருமைக்குணத்திற்கு ஏற்றதாயும், அதன் அதிபதி புத்தியின் சத்துருவை விளக்கிக்காட்டி அவர்தானும் அவனை ஜெயித்து தர்மத்தை வளர்த்த முன்மாதிரி குருவாகவும் இருக்கவேண்டும்.

ஏனெனில் சர்வவல்லமையுள்ள ஆதிகாரணக் கர்த்தாவாகிய (அல்லாஹுத்தஆலா) கடவுளானவர் மனுஷனை ஏனைய சிருஷ்டிகளைப்போல் படைக்காமல் அவனைத் தமது திவ்விய ஞான லட்சணத்தினாலே உருவாக்கி தமது கீர்த்தியை விளங்கப்பண்ணும் பொருட்டு அவனையே தமக்குப்பாத்திரனாக எடுத்து பெருந்துணைச் செல்வமாக அவனுக்களித்திருக்கும் விசேஷக்கொடை அவனது அந்தக்கரண ஆராய்ச்சிக்குரிய மனம், புத்தி, சித்தமேயாகும்.

ஆகையால் புத்தியானது அகங்காரப் பிணிக்குட்பட்டு தர்மம் சீர்கெட்டுப்போகக் கடவுள் பொருந்தாமல் அதனைத் திருத்தி இஸ்லாம் என்ற ஒரே மார்க்கத்தை உலகத்தில் பிறப்பித்து அதைவிளக்கி அகங்காரத்தை ஜெயிக்க பலபரிசுத்த அதிபதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பினார். அப்படிவந்தவர்களில் கடைசியாயும், சர்வலோகத்திற் கென்றும் முடிவாயும் வந்த

தயாள சற்குருவே அறபியாவில் அவதரித்துப் பிரகாசித்தமஹா சங்கை பொருந்திய ரசூல் முஹம்மத் நபீ அவர்கள். அவருக் கருளிய வேதத்திற்கு திருக்குறு ஆன் என்றும் அவரது மார்க் கத்துக்கும் இஸ்லாம் என்றேபெயர் துலங்கலாயிற்று. உலக ரட்சிப்புக்கு செவ்வையானவழி இஸ்லாமே என்றும் அதுவே கடவுளது மார்க்கமென்றும் இதற்கு முன்வந்த தீர்க்கதரிசி கள் தூதர்களெல்லாம் இஸ்லாம் மார்க்கத்தையே அனுசரித்து, அதன்படியே தாங்களும் நடந்து மற்றவர்களுக்கும் வழி காட்டி வந்தார்களென்றும் திருக்குறு ஆன் துலாம்பரமாய்ப் பிரஸ்தாபிக்கிறது. மேலும் அது மஹான்முஹம்மத் நபீ அவர் களே கடைசியாய் வந்த தீர்க்கத்தரிசி என்றும், அவர்களுக்குப் பின் பிறிதொரு தீர்க்கத் தரிசியாவது வேதமாவது வரப்போ கிறதில்லை என்றும் தீட்சணமாய் விளக்கிக் காட்டுகிறது.

ஆகையால் கடவுளின் ஆதியோடந்தமான மார்க்கம் இஸ்லாமே என்றும், அவரது முடிவான கற்பனை திருக்குறு ஆன் ஒன்றே என்றும் அவரதுகடையான பரிசுத்த ரசூல் முஹம்மத் நபீ அவர்கள் ஒருவரே என்றும் பூரண விசுவாசம் கொள்ளவேண்டியது அவசியமேயாகும்.

ஏனெனில் அகங்காரத்தை ஒடுக்கி புத்தியைக் குணப் படுத்தி, தர்மத்தைப் பூரணமாய் விளக்கும்மார்க்கம் இஸ்லாம் ஒன்றேயாகும். இதனை அநேகர் விசாரித்து அநுசரியாமல் மோசம்போகிறார்கள்;

"இஸ்லாம்" என்ற அறபிமொழியானது குனிதல், பணி தல், என்ற ஸ்வார்த்தப் பொருளை வெளிப்படையாகக்கொண்டு உலகத்துக்கு வெகுமானித்துக் காட்டுகிறது.

அப்படியே அது 'தேவகற்பனைகளுக்குத் தாழ்மையுடன் மரியாதைசெய்தல் அவரது சித்தத்துக்குத் தன்னை ஒப்புவித்தல், அவருடைய சிருஷ்டிகளிடம் இரக்கங்காட்டுதல்' என்னும் கருத் துகள் அமைந்த சவிஸ்தாரமான தாத்பரியத்தை உட்பொருள் அடக்கி அதன்படி நம்மை உருவாக்குகிறது.

'மேலும் அது தெய்வீக ஒழுக்கத்தில் நீங்கள் பெருகுங்கள்.' என்ற தன் தத்துவார்த்தத்தை வெளிப்படுத்தியும், மறதியில் இருக்கிற மனுஷனை தன் ஆதீனத்தில் ஒழுகிக்கொள்ள அவனைத் தூண்டியும் ஞ்ஜானத்தோடு கிருபையாய் உபதேசித்து வருகிறது. உலகத்திலுள்ள சர்வ சமயங்களையும் தெளிந்த மனதுடன் ஆராய்ச்சிசெய்து பாருங்கள். மனுஷன் இம்மை மறுமைக்கு அகத்தியமான சகல காரியவிர்த்திகளுக்கும் காரணமாயுள்ள சாஸ்திரயுக்தியை சிரேஷ்டமாக எடுத்து அதுவே மனிதனுக்கு பிரதானமென்றும், மனிதன் அதைப் பின்பற்றியே நடக்கவேணுமென்றும் போதித்து, சகல கலைகளையும் கற்றுக்கொள்ள வற்புறுத்தி வருகிறதுமான ஒரு திவ்விய சம்பிரதாயம் எதுவென்ற கேட்வி பிறக்குமானால், விவேகமுதிர்ந்த நியாயசாஸ்திரிகளெல்லாம் தங்கள் நுண்ணிய அறிவால் இஸ்லாமதம் ஒன்றே அத்தகைய கண்ணியத்துக்கு உரித்தானது என்று தீர்ப்பளித்து நிற்பர்.

அப்படியே அது தன்வழி நடப்பவர்களை சர்வ வல்லமையுள்ள சிருஷ்டிகர்த்தாவின் விசாலமான காட்சிகளை திருஷ்டித்து சதாசிந்தித்தாராய்ந்து வரவும் தத்துவஞானம் முதலிய சகல கலைகளையும் தீர ஆராய்ந்து தன் புத்தியை செவ்வையாய்த் தீட்டிக்கொள்ளவும் கண்டிதமாய் எச்சரித்து வருகின்றது.

பிரபஞ்சத்திலுள்ள சர்வமதங்களிலுமில்லாத இத்தகைய செல்வச்செருக்கைத் தனக்குள் அடக்கி அலங்காரமான பௌருஷத்துடன் முன்வந்து நிற்பது இஸ்லாமியம் ஒன்றேயாகும். இதுவே மனுக்குலத்தோரை தங்கள்நடத்தைக்குரிய ஒவ்வொரு கிர்த்தாகிர்த்தியங்களுக்கும், தீட்சணபுத்தியையும், இருதயத் தெளிவையும், கையாடவேண்டிய தவசியமெனக் கற்பிக்கின்றது. அது எக்காரியத்தை நமக்குச் சொன்னபோதிலும், அத்துடன் அதற்குரிய காரணங்களையும், எடுத்துக்காட்டி நம்மைக் குணப்படுத்துகிறது. அது புத்திக்கும் யுக்திக்கும் விரோத

மானதும், காரணமற்ற காரியமானதுமான எக்கருமத்தையும் நம்பும்படி யாதொரு பொறுப்பையாவது தன் சிரமேல் எடுத்துக்கொள்வதன்று. பரிசுத்த கிரந்தங்களென்று வீண்துத்தியம் பாடப்படுகிற ஏனைய மதநூல்களுக்கு எதிரிடையாக, ஒவ்வொருவிஷயங்களிலும் அக, புற, ஆதாரங்களையும் ஞானத்தையுங் கையாடி பரீட்சித்து வரவேண்டுமென்று கற்பித்து வருவது திருக்குறுஆன் ஒன்றே உண்மையில் பரிசுத்தமான பிரத்தியட்சநூலாய் விளங்குகிறது.

மஹாங் முஹம்மத் நபீ அவர்களுக்கு முதன்முதல் பரிசுத்தஆவியின் மூலமாய்த் தமது பகவானிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஆதிபோதனையுங்கூட நாவினால் உச்சரிக்கும் ஞானத்தைப் பயின்று கொள்ள வேண்டிய சார்பைப் பற்றினதாகவே யிருக்கின்றது.

அப்படியே அவருக்கு ஆரம்பத்தில் வெளியான பரம தூதும் இதுவேயாகும்.

1. "மஹா கீர்த்திபெற்ற உன் கர்த்தாவின் நாமத்தினாலே ஓது, அவரே சர்வத்தையும் படைத்தவர்.

2. அவர் மனுஷனை உறைந்த இரத்தத்தினாலே சிருஷ்டித்தார்.

3. மஹா தயாளப் பிரபுவான உன் ஆண்டவராலேவாசி.

4. அவரே மனுஷனுக்கு எழுதும் எழுதுகோலின் உபயோகத்தை (பூரணஞானத்தை)ப் படிப்பித்தார்.

5. மனுஷன் முற்றிலுமே உணர்ந்திராதிருந்த (அரும், பெரும் ஞானங்களை எல்லாம் சுருதி, யுக்தியின் வழியாய்) அவரே அவனுக்கு போதித்தார்." என்பதாம்.

சர்வத்துக்கும் முதலான இப்பரிசுத்தவாக்கில் எழுத படிப்பதின் முறையையும், அட்சர உச்சரிப்பின் மூலமாய்க் கலைகளைக்கற்றுக் கொள்வதின் வழியையும், பற்றி உணர்த்திக்

காட்டும் அருமை இஸ்லாமிய பரிசுத்தக்கிரந்தத்துக்கு எதிரே ஏனைய வேறெந்த கிரந்தந்தான் அதற்கு ஒப்புமைச்சால்புடைய தாகும். இவ்வரிய மத நூலுக்குச் சான்றாக உலகத்தில் பிறி தொருநூலும் இல்லை என்பதே தீர்ப்பாய் நிற்கிறது. மனி தனை ஏனைய சிருஷ்டிகளெல்லாவற்றையும் விட மகத்தாக்கி வைப்பது கலைக்கியானமும், க்கியான சாமர்த்தியமு மென்ப தற்கையமில்லை. ஆகையால் திருக்குறஆனது முஸ் லிம்களை நவீன, நாகரீக பான்மையில் கலைக்கியானங்களையும், க்கியான சாதுரியங்களையும் பயின்றுகொள்ள ஊக்கங்கொடுத் து வருகிறது. இஸ்லாமிய கர்த்தாவும் மஹாஞான சாமர்த் தியக்கடவுளே யாவர். அப்படியே அவரது ஒவ்வொரு வேலை களிலும், அற்புத மகாஞான வல்லமையும், அவரது ஒவ் வொரு வார்த்தைகளிலும் கலைக்கியான கீர்த்தியும், பிரசன்ன மாகிறது. மேலும் அவர் எல்லாவற்றையும் தெரிந்து கொள் ளுகிற அறிவுக்கடலான சர்வஜ்ஞானகர்தாவுமாவர். அப்படியே அவர் தமது ரசூலுக்குத்தெரிவித்த இவ்வாக்கிலும் தம்மை ப்பற்றி "உனக்கு குற ஆனைக் கற்பித்துக்கோடுக்கிற சுயம்பான அப்பரிசுத்தர், தாமே குறைவற்ற பரிபூரணகலைக்கியான பிரபு வாயும், சர்வக் ஞானச் சாமர்த்திய மன்னனாயும், துலங்கி நிற்கிறார்" என்று அருளப்பட்டிருக்கிறது.

மேலும் கல்விப்பரீக்ஷைக்கும், சாஸ்திரயுக்திக்கும் மூலா தீனமாயுள்ளவர் எவரோ அவரே சகலவஸ்துக்களையும் படை த்த சிருஷ்டிகர்த்தாவென்றும், அவரே சர்வத்தையும் வளர்க் கும் விசிஷ்டவிர்த்தி தானகர் என்றும், அவரே எல்லாவற்றை யும் அதனதன் சம்பூரண சுபிட்சம ஸ்தாபனத்தில் சேர்த்துக் கடைத்தேற்றுகிற காரணகர்த்தா வென்றும் ஏற்படுகிறார்.

அப்படியே அவருடைய ஞானமும், சமர்த்தும், சூட்சம ப்ரம்மையாய் வஸ்துக்கள் அனைத்தையும் சூழ்ந்து கிரகித்துக் கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட பூரணஞானக் கடவுளானவர் மனுஷனைத் தமது ஞான லட்சணத்தினால் சிருஷ்டித்திருக்கும்போது அவனுக்கு சகலகலைக்கியானங்களையும் சம்பாதித்துக்கொள்ளும் விருப்பத்தையும் அமைத்திருக்க வேண்டியது அகத்தியமேயாகும்.

அப்படியே அவரது கருணைக்குப் பாத்திரனான மனிதன் சாஸ்திரவிருப்பத்தைக் கொண்டு ஞானத்தைத்தேடி அதன் படியே நடக்கவேணுமென்ற பிரமாணத்திற் குட்பட்டிருப்பதினால் சிருஷ்டிப்பொருள் எல்லாவற்றையும்விட மேலாக மதிக்கப்பட்டிருக்கிறான்.

ஆகையால்தான் மகாவல்லமைபொருந்திய திருக்குறு ஆனது கல்வியின் சிரேஷ்டத்தையும், அதன் மகத்துவத்தையுங் குறித்து வினவிடும் பான்மையாகப் பின்வருமாறு எடுத்துக் காட்டுகிறது. அதாவது:—

**1.** கற்றவர் கல்லாதவர் ஆகிய இவ்விருதிறத்தாரும் ஒருவருக்கோருவர் சமானஸ்கந்த மாவரோ?

**2.** கபோதிகர், நேத்திரீகர் ஆகிய இவ்விரு வகுப்பாரும் ஒருவருக்கோருவர் சமானஸ்பந்தம் பெறுவரோ ?

என்றருளியிருக்கும் இவ் வசனங்களினால் திருக்குறு ஆனது கல்விச்சிறப்பையும் அதன் சிலாக்கியத்தையும் பூற்றிப்பிரித்துக்காட்டி நமக்கு எவ்வாறு புத்தி புகட்டுகிறதென்பது ஸ்பஷ்டமாய் விளங்குகிறது. மேலும் திருக்குறு ஆனையும் சகலகலா விர்த்திக்குரிய சாமர்த்தியம் நிறைந்த ஒப்பற்ற சாஸ்திர ஆராய்ச்சி நூல் என்று சொல்லப்பட் டிருப்பதையும் இதனடியில் தருகிறோம். அதாவது:—

நமது திவ்விய வாக்காகிய இந்த குறுஆனது பூரண ஞானம்பெற்ற பரிசுத்த விவிருதிய நூலின் சுபலட்சணக் குறிப்புகளாயிருக்கின்றன என்பதாம்.

அப்படியே அப்பரிசுத்த கிரந்தத்தில் சிருஷ்டிப்பொருள் களெல்லாம் ஒரே அஸ்திபாரத்தின்மீதும் ஒரேப்ரமாண ஆதீனத்தின்கீழும் சிருஷ்டிக்கப்பட்டதென்று போதிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப்பிரபஞ்சத்தின் சகல நடவடிக்கைகளும் சட்டத்தைப்பின்பற்றியே நடந்துவருகின்றன. ப்ரமாணத்தைவிட்டு விபரீதமாகவோ ஒன்றுக்கொன்று இணைந்து தான் தானுகவோ, யாதொரு காரியமும் நடைபெற்று வருகிறதில்லை. கடவுள் ஒன்றையும் விருதாவில் படைக்கவுமில்லை. அப்படியே அவர் அருளும் வாக்கு இதுவேயாகும். அதாவது :— நாம் வானம், பூமி ஆகிய இவ்விரண்டிற்கு மத்தியிலுள்ள சகல வஸ்துக்களையும், ப்ரமாணத்தை அபேட்சித்ததா யிருக்கும்படியும், ஒரு நியமமான காலத்திற்கு மேன்றே சிருஷ்டித்தோம். என்றுகூறி பின் அவரது விசித்திர காட்சிகளை நோக்கும்படி பின்வருமாறு ஆக்ஞாபிக்கிறுர். அதாவது:—

"இந்த(குறுஆன்)கிரந்தமானது பூரணஞானமுடைய பகவானிடமிருந்து இறங்கியது. நிச்சயமாகவே நல் விசுவாசிகளுக்கு பூமியிலும், வானங்களிலும் விசேஷ அடையாளங்கள் உண்டு. மெய்யாகவே நிச்சயபுத்தி யுடையவர்களுக்கு பூமியில் பலுகிப் பெருகித்திரியும் மிருகங்களிலும், தங்கள்தங்கள் சிருஷ்டிப்பின் வன்மையிலும் பிரதம அத்தாட்சிகள் உண்டாயிருக்கின்றன. அப்படியே புத்தியைக்கடைப்பிடித்து நடப்பவருக்கு காற்றின் பேதாபேதங்களிலும், இராப்பகலின் வித்தியாசங்களிலும், பகவானுல் விண்ணுலகத்திலிருந்து வருஷிக்கச்செய்கிற ஜீவ ஆகாரத்திலும், அதோடு அழிவுக்குப்பின் பூமிக்கு ஜீவரட்சணை கோடுப்பதிலும் போதுமான காரணங்கள் உண்டாயிருக்கின்றன" என்பதாம். மேலும் அவர் 'எவனொருவன் ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுகிறுனே அவனை அது மகத்தான பிரஸ்தாபத்திற்கும் தெய்வகடாட்சத்திற்கும் தலைவணக்கிவிடுகிறது' என்றருளி இருக்கிறுர். அப்படியே அவர் நமது ரட்சகபெருமான் முஹம்மத் நபீ அவர்களுக்கு அருளியிருக்கும் கற்பனையிலும், 'தீர்க்கதரிசி

யே! ஜனங்களை நீர் உமது கர்த்தாவின் பாதைக்கு அழைப்பீ ரானல் ஞானத்தோடும் நல்உபதேசத்தோடுமே கூப்பிடுமென்றும், அவர்களோடு வாதாட ஏற்பட்டாலும் நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்தே வாதாடவேண்டு' மென்றும் ஆக்ஞாபித்திருக் கிருர்.

மஹாந் நபீ அவர்களும் கல்வியைச் சம்பாதிக்க வேண்டி யது ஆண்பெண் இருதிறத்தாராகிய ஒவ்வொரு முஸ்லிம்க ளுக்கும் விதித்தவிதியாகும் என்று கண்டிதமாய் எச்சரிக்கைச் செய்திருக்கிருர்.

ஆகவே இஸ்லாமியமானது கலைக்கியான பயிற்சியைக் குறித்து இவ்வளவு கண்டிதமான ப்ரமாணத்தை வரையறுத் திருப்பது புத்தியின் தெளிவுக்கேயன்றி வேறல்ல.

அதுதெளிவடைந்தாலொழிய சத்தியம் அசத்தியம் இன் னின்னதென்று புலப்படாது. தீமைசெய்வது அதர்மம் என் றும் நன்மைசெய்வது தர்மம் என்றும் உணர்ந்து மனேற்சாக மாய்த் தீமையைத்தவிர்த்து நன்மையின்படி ஒழுகி நடக்க ஏதுவாகாது. ஆகையால்தான் சர்வவல்லமையுள்ள கடவு ளானவர் இஸ்லாம் என்ற ஒரே மார்க்கத்தை உலகத்தில் பிறப் பித்து அதுவே தம்மை அடைவதற்கு சத்தியவழி என்றும், அதைப்பின்பற்றி நடந்து, அதன் சாஸ்திரநூலை பிரதானமாக எடுத்து சதா அதை தியானித்து வருதலே புத்தி நற்குண மடைவதற்கு ஏற்ற சாதனமென்றும், திருவுளம். பற்றியுள் ளார்.

அப்படியே அவர் அவரது மார்க்கத்தைப் பிரஸ்தாபிக்க வந்த தீர்க்கதரிசிகளின் கிரியைகளைக் கடைப்பிடித்து அவர்கள் அடிமேல் அடிவைத்து நடப்பதே அகங்காரப் பிணியைத் தொலைப்பதற்கு ஏதுவாகுமென்றும் ஆக்ஞாபித்துள்ளார்.

ஆகவே கடவுளது மார்க்கமாகிய இஸ்லாமியத்தைப் பிரஸ் தாபிக்கவந்த தீர்க்கதரிசிகளில் கடைசியாய் வந்தவரே அறபி யாவில் தோன்றிய மஹாந் முஹம்மத் நபீ அவர்கள்.

அவரது மார்க்கமே இஸ்லாம். அவருக்கருளிய கற்பனைகளடங்கிய பொக்கிஷமே திருக்குறுஆன். அதுவே சகலகலைகளையும் தனக்குள் அடக்கி புத்தியைத்தீட்டி பிரகாசிக்கச்செய்யும் ஒப்பற்றநூலாகும். அதில்தான் காருண்யகர்த்தாவாகிய கடவுளானவர் "ஜனங்களே! உங்களுக்குமுன் மாதிரியாய் வந்த என் ரசூலின் ஆசாரங்களைப் பின்பற்றி உங்கள் புத்தியை மனம்போன வழியில் செல்லவிடாமல் திருத்தி உங்கள் சத்துருவை ஜெயித்து முக்தி அடையுங்கள்" என்று கட்டளை பிறப்பித்திருக்கிறார்.

ஆகையால் நமக்கு முன்மாதிரியாய் வந்தபரிசுத்த ரசூலின் உபதேசங்களில் சிலவற்றை ஒன்றுதிரட்டி இந்தப்புத்தகத்தை உருவாக்கினோம். இந்த புத்தகத்தின் பாயிரமானது "அருள் வேதமும் அதன் தூதரும் அவசியமே" என்பதை விஸ்தரித்து நபீ அவர்களையும் அவர்களுக்கருளிய அருள்வேதமாகிய திருக்குறுஆனையும் ருஜுப்படுத்துகிறது.

அப்படியே அதை அடுத்துள்ள நபீ அவர்களின் ஜீவிய சரித்திரச்சுருக்கமும் பற்பல ஆதாரங்களைக் கடைப்பிடித்து நபீ அவர்களின் பரிசுத்த ஜீவியத்தை உள்ளது உள்ளபடியே எடுத்துப்புகல்கின்றது.

மேலும் நபீ அவர்கள் திருமக்கா மஹா ஜனங்களுக்கும், அப்படியே திருமதீனா மஹாஜனங்களுக்கும், செய்த முதற் பிரசங்கங்களானது நபீ அவர்கள் மெய்யாகவே பகவானால் அனுப்பப்பட்ட சத்தியரசூல் என்பதையும், அவர்கடவுளின் போதனைகளை நிறைவேற்றவந்த தீர்க்கதரிசியே என்பதையும் உண்மையாய் ருஜுப்படுத்தி தர்மத்தைக்கையாட போதிக்கிறது.

நபீ அவர்கள் திருமக்கா நகரில் செய்த சரமப்பிரசங்கமானது மனுஷனுக்கு வேண்டிய சகல போதனைகளையும் எடுத்துக்காட்டி நபீ அவர்களின் காரியவிர்த்தியையும் அவரது ஜெயத்தையுங் குறித்து காம்பீரமாய் பிரஸ்தாபிக்கிறது.

நபி அவர்களைப்பற்றிய ரூம் தேசத்து அதிபதியின் விசாரணையானது நபி அவர்கள் மெய்யாகவே உலகத்துக்கு வழிகாட்டியாய் வந்த முடிவான ஒரு சத்தியரசூலே என்பதைப் பகுத்துக்காட்டுகிறது.

நபி அவர்களின் உபதேசப்பற்றுனது நபி அவர்கள் உலகத்தை விரும்பி வந்தவரல்ல என்பதையும் கடவுளின் கற்பனையைச்செலுத்தவந்த சத்தியரசூலே என்பதையுங் குறித்து ரூபகாரப்படுத்துகிறது.

பிரதான கலீபா ஸ்ரீமாந் அபூபக்கர் அவர்களின் பிரசங்கமும் அவர்களுக்குப் பின்வந்த மூன்றுஸ்தாளுதிபதிகளின் குண நடவடிக்கைகளும், அப்படியே இரண்டாவது கலீபா ஸ்ரீமாந் உமற் அவர்களின் பிரசங்கமும் அவர்களின் சோதனையும் அவர்கள் தம் ரசூலின்பால் வைத்த விஸ்வாசத்தையும், நம்பிக்கையையும், மதவைராக்கியத்தையுங் குறித்து, ஒருவாறு எடுத்துக்காட்டி அவர்கள் துரைத்தன அதிகாரத்தில் செலுத்திவந்தசெங்கோல் வன்மையையும் பற்றி ஞியாயமாய் ருஜுப்படுத்துகிறது.

அப்படியே 59, 60, 61-வது பக்கங்களின் அட்டவணையானது இஸ்லா மதப்பரப்பின் விசேஷப்பட்டணங்களை எடுத்துக்காட்டுகிறது.

நூலின் முகவுரையானது 40-வயது வரை எழுத வாசிக்கப்பயிலாத ரசூல் அவர்சள் நபி பட்டத்திற்குப் பின் சகல கலைக்கியானப்ரபுவாய்விளங்கினுர் என்பதையும் அவரது பரிசுத்த உபதேசம் உலகத்துக்கவசியம் என்பதையும் ருஜுப்படுத்துகிறது.

நபி அவர்களின் உபதேசங்களானது மனிதனின் இயற்கையான பெருமைக்குணத்துக்கு உரித்தான புத்தியைச் சீர்திருத்தி அகங்காரத்தைப்போக்கி தர்மத்தைப் பிரபலிக்கச் செய்கிறது.

ஆகையால் தர்மமேஜெயம். புத்தியே தர்மத்துக்கு ஆதாரம். புத்தியைத் திருத்துவதே திருக்குறு ஆனின் போதனை. அதுவே இஸ்லாமதப் பிரதான கொள்கைஎன்று விசுவாசித்து அகங்காரத்தைப் போக்கவந்த சத்திய ரசூல் முஹம்மத் நபீ அவர்களை நம்பி அவரது பரிசுத்த உபதேசத்தை வாசித்து அதன்படி நடந்து தர்மத்தைக்கையாடி உலகத்தை ஜெயித்து பரமாநந்தக்கடவுளாகிய அல்லாஹுத்தஆலாவின் திவ்வியலோகத்தில் சதாநித்தியானந்தம் பெற இடம் பெறுவோமாக.

சரிக்கவேண்டிய பரமவிதி, ஆசாரம் முதலிய திருத்தங்களைக்குறித்தும் அவர் வசனித்துக் கூப்பிடும் திவ்வியவாக்கின் தாத்பரியம் முதலிய ஆதியோடந்தமான எல்லா விஷயங்களையும் முற்றாய் விளக்கிக்காட்டும் முழுப்பிரபந்தம்.

6. இது நமது சிறுவர், சிறுமியர் தொழுகையைப்பற்றி லகுவில் தெரிந்துகொள்ளும் நோக்கமாக சில உருவப்படங்களைக்காட்டி தெளிவான செந்தமிழ் நடையில் எழுதப்பட்டிருக்கும் சிறந்த ஜெபகிரந்தம்.

7. இது உலகத்திலுள்ள சர்வமத ஜெபமந்திரங்களுக்கும், இஸ்லாமத ஜெபமொழிகளில் பிரதான சூறதுல்பாதிஹா என்ற ஜெய அத்தியாய வாக்குகளுக்கும் உள்ள பேதாபேதங்களை எடுத்துக்காட்டி ஜெயஅத்தியாயத்தின் விசேஷத்தையும், அதன் தாத்பரியங்களையும் சவிஸ்தாரமாய் எடுத்துக்காட்டும் ஓர் அற்புத வியாக்கியான நூல்.

8. இது இஸ்லாமியருக்கு தொழுகைக்காக ஏற்படுத்தி இருக்கும் கை, கால், முகம், முதலிய ஸ்நானசுத்தியில் மும்முறைகழுகவேண்டுமென்ற முறைகள் வீண் சடங்காசாரம் என்றும், அவர்கள் வணக்கம் வீண்வேடிக்கை சமாஜம் என்றும், தொழுகைக்காகக் காலங்களைக் குறிப்பிட்டிருப்பது தகாதமுறை என்றும், தொழுகையில் ஒருதரம் மொழிந்த வசனங்களைத் திரும்பத்திரும்ப வசனித்தல் கடவுளுக்கு எரிச்சலைக் கொடுக்கும் என்றும், அறபியாஷையிலேயே உச்சரித்து வரவேணுமென்ற நியாயம் தகாதென்றும் ஆட்சேபனை செய்து வரும் புறமதஸ்தர்களுக்கு அவர்கள் புத்திக்கும், யுக்திக்கும், நமது மததர்மத்துக்கும் இசைய பற்பல ஆதாரங்களைக் கொண்டு தகுந்த நியாயங்களைக் கையாடி உணர்த்திக்காட்டும் உன்னதமான நூல்.

9. இது நாமத்துக்கு இஸ்லாம் மதஸ்தர் என்று தம்மைத்தத்தியம் பண்ணிக்கொண்டு, தூய ரட்சிப்புக்குரிய பிரதான ஞானக்கிரியைகளாகிய நமது தொழுகையின் ஆசரிப்பை அநுசரித்து நடத்திவாராமல் நழுவித்திரிவோர்க்கு நற்புத்தி புகட்டும் புண்ணியநூல்.

இவ்வரியநூல் பற்பல நியாயங்களையும், சிறந்த ஆதாரங்களையும் கையாடி யாவரும் தெரிந்துகொள்ளுமாறு தமிழில் கனம் M. A. மலிக் சாஹிப் அவர்களால் எழுதப்பட்டு அச்சில் இருக்கின்றது.

உயர்ந்த 20-பவுன் கிளேஸ்கடிதத்தில் வெகுசுத்தமாய் அச்சிடப்பட்டு நேர்த்தியான பைன்டுடன் கூடியசீக்கிரம் வெளிவரும்.

முதற்பதிப்பில் சொற்பப் பிரதிகளே அச்சிடுவதால் வேண்டியவர்கள் முன்னதாகவே தம்தம் முழுப்பெயர் விலாசங்களை நவீனகதா புஸ்தகசாலைக்கு எழுதிப்பதிவுசெய்வித்துக் கொள்ளலாம்.

மானேஜர், **நவீனகதா புஸ்தகசாலை,**

**111,** நாற்றுப்பதினொன்று மாளிகை, இரங்கூன்.

அல்லது **8,** கூனி பஜார்சாலை, சென்னை.

# இஸ்லாமிய பிரபந்த மாலிகை.

1. ஐங்காலப் பிரார்த்தனை (அச்சில்)
2. கிழக்கத்திய இஸ்லாமியஜோதியும் மேற்கத்தியாரின் விழிப்பும் (பலபடங்களுடன்).
3. திருக்குறுஆன்—அருள்வாக்கே.
4. இஸ்லாமிய புண்ணிய க்ஷேத்திர யாத்திரை. (பலபடங்களுடன்)
5. அஹ்மதியா ஜீவியவிளக்கம் (மஹாவிருத்தாந்தம் 7 - பாகங்கள்)
6. நான்கு ஸ்தானாதிபதிகளின் சரித்திரம்.
   (a) ஸ்ரீமாந். அபூபக்கரவர்கள் 1-ஆம் பாகம்.
   (b) ஸ்ரீமாந். உமற் அவர்கள் 2-ஆம் பாகம்.
   (c) ஸ்ரீமாந். உத்மான் அவர்கள் 3-ஆம் பாகம்.
   (d) ஸ்ரீமாந். அலீ அவர்கள் 4-ஆம் பாகம்.
7. சற்குரு[illegible] திருப்பெருநாள்.
8. மானவ[illegible] யாவன் ?

## இஸ்லாமிய ஸ்கூல் புத்தகங்கள்.

(1) லாகூர் இஸ்லாமிய சங்கத்தில் இயற்றிய உர்துபாஷையின் பாலபாடம், முதல்வாசக புத்தகம், இவைகளின் தமிழ் மொழிபெயர்ப்பு.

(2) தமிழ் பாலபாடம்.

(3) தமிழ் முதல்வாசக புஸ்தகம்

இவைகள் கனம் M. A. மலிக்சாஹிப் அவர்களால் இயற்றப்பட்டு கூடியசீக்கிரத்தில் வெளிவரும்.

மானேஜர்,

நவீனகதா புத்தகசாலை,

இரங்கூன், அல்லது சென்னை.